

அறிஞர் அண்ணா வாழ்க்கையில்

# சுவையான சம்பவங்கள்

# அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்

தொகுத்தவர் :

**வெற்றிவீரன்**

(ஆசிரியர்: அண்ணா, நகரதூதன்)

விற்பனை உரிமை :

*பாலாஜி பப்ளிகேஷன்ஸ்*

17, வாணியர் தெரு,

புதுப்பாக்கம், சென்னை-14

முதற் பதிப்பு: ஏப்ரல் 1969.
பதிப்புரிமை பெற்றது.

**விலை ரூ: 2-50**

வெளியிட்டோர்:
**பொதுமேடைப் பதிப்பகம்**
மயிலாப்பூர், சென்னை-4

அச்சிட்டோர்: ஸ்ரீ கலா பிரிண்டர்ஸ், சென்னை-33

# சில சொல் கேளீர்!

பசுமை எண்ணங்களைப் படரவிட்டு மறைந்த, மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையினை சுவை சொட்டும் எழுத்தோவிய மாக்கவேண்டும் என்ற எண்ணத்தின் மீது கட்டப்பட்ட எழில் மாளிகையே **அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்.**

அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்நாளில் கண்டும்-கேட்டும்-பேசியும்-ரசித்து சுவைத்து மகிழ்ந்த அனுபவங்களில் 150 சம்பவங்கள் மட்டும் இந்நூலில் சுவைபட அளித்திருக்கின்றார், இதன் தொகுப்பு ஆசிரியர் திரு **வெற்றிவீரன்** அவர்கள்.

பேனாவை நர்த்தனம் புரிய வைப்பதில் வல்லவரான திரு வெற்றிவீரன் அவர்கள் 'அண்ணா', 'நகர தூதன்' என்ற தலைப்புகளில் ஏடு நடத்தி தமிழர்களின் இதயங்களில் நல்லதொரு இடம் பிடித்தவர் என்பதனை இந்த நாடு அறியும்.

அறிஞர் அண்ணாவின் புகழ்பாடும் ஏடுகள் வெளியிடுவதில் ஏற்கனவே சிறப்பிடம் பெற்றுள்ள **பொது மேடைப் பதிப்பகத்தின்** இம்முயற்சியையும் வரவேற்பர் என்ற நம்பிக்கையுடன் இந்த நூலையும் பொது மக்களின் பார்வைக்கு அனுப்புகிறோம்.

1-4-69 —பதிப்பகத்தார்

முகப்பு உருவம்:

**சாமுவேல்**

(சினிமாத்துறை புகைப்பட நிபுணர்)

## எமது அன்புக் காணிக்கை!

கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! என அழைத்து, கடமை—கண்ணியம்—கட்டுப்பாட்டை போதித்து, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என எடுத்து ஓதி, நம்மை எல்லாம் கண்ணீர்க் கடலில் கலங்க வைத்து மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களுக்கு இதயம் மலர்ந்து எழுந்த அன்புக் காணிக்கை.

**—வெற்றிவீரன்**

மேலட்டை ஓவியம்:

**ஓவியர் பி. என். ஆனந்தன்**

சென்னை-5

# அறிஞர் அண்ணா
# வாழ்க்கையில்
# சுவையான சம்பவங்கள்

1 பக்தியும், பிரார்த்தனையும்!
2 நொண்டிச் சாக்கு!
3 மாமியார் அனுபவம்!
4 அசடு வழிந்தது!
5 தெருக்கூத்து ரசிகர்!
6 திருடனிடம் சிக்கினார்!
7 காந்தி யார்?
8 சத்தியமூர்த்தியும், திருப்பதி ஐதீகமும்!
9 பரீட்சையில் பொடி!
10 படிப்பதற்கு நிபந்தனை!
11 வெற்றிலைப்பாக்கு பைத்தியம்!
12 'அடா' என்று அழைத்தவர்!
13 கட்டுரையில் கைவண்ணம்!
14 ஆசிரியரிடம் வேடிக்கை!
15 பேச்சுக்குப் பரிசு!
16 சிகரெட்டும் சுதந்திரமும்!
17 பேராசிரியருக்குப் புகழ்மாலை!
18 ஆறு மாதம் ஆசிரியர்!
19 கேட்டது ஒன்று! கிடைத்தது வேறு!!
20 ஜட்ஜ் வேலை கேட்ட மாஜிஸ்ட்ரேட்!
21 ஆற்காடு இராமசாமியின் அறிவுரை!
22 திருத்தணி தந்த திகைப்பு!
23 இங்கிலீசில் பேசு!
24 காப்பி அடித்த பேசசாளர்!
25 நேருவிடம் கொடுத்த துண்டு அறிக்கை!
26 செங்கல்வராயன் முயற்சி தோற்றது!
27 தேர்தல் பிரச்சாரம்!
28 நந்தவனமும் நாயும்!
29 கோவிலுக்கு விளக்கா!
30 என். வி. நடராசனை சேரியில் சாப்பிடவைத்தார்!

31 சன்னப்பொடி கலந்த பேச்சாளர்!
32 போக்கிரியை அடக்கினார்!
33 அண்ணாவின் தீர்க்கதரிசனம்!
34 பெரியாரை சந்தித்தார்!
35 வேலைக்கு அழைத்தார் ஜி. டி. நாயுடு!
36 பெண்களும் பொதுவுடமையா!
37 அரும்பு மீசை வெளுத்தது!
38 அண்டப்புளுகு பேச்சு!
39 இடத்துக்கு திண்டாட்டம்!
40 போஸ்டர் ஒட்டினார்!
41 தமிழ்த் தாயின் விலாசம்!
42 டிரைவரின் வெறுப்பும் விருப்பும்!
43 செருப்புத் தோரணங்களால் வரவேற்ற சீமை!
44 புரட்சிவீரர் தயாரித்த புலவு!
45 ஜும்மா மசூதியில் துவாரங்கள் ஏன்!
46 சைவம் கலந்தது!
47 சின்ன சாமியார்!
48 இந்து சாயா! முஸ்லீம் சாயா!!
49 பேசாதே! பெரியார் கண்டிப்பு!!
50 வயதையும் வருமானத்தையும் கேட்காதே!
51 ஜின்னாவை சந்திக்க அண்ணா மறுப்பு!
52 கைத்தடியும் செருப்பும்!
53 ஏன் முஸ்லீம் ஆகக்கூடாது!
54 பிரயாண அனுபவம்!
55 அண்ணா என்ன சாதி!
56 சாதியைக் கூற தயக்கம்!
57 ஜின்னாவின் விருந்தில் அண்ணா!
58 படாடோபத்திற்குப் பணியாமை!
59 வருத்தம் தெரிவிக்க மறுப்பு!
60 கவர்னர் கதிகலங்கினார்!
61 எழுதியது எழுதியதுதான்!
62 ரிப்பன் மண்டபத்து மகான்கள்!
63 முடிவுபெறாத விவாதம்!
64 பெரியார் பாராட்டிய அண்ணாவின் தலையங்கம்!
65 நண்பர்களின் கோபம்!
66 கோயிலில் நுழைய தடை!
67 ஆகஸ்ட் புரட்சியில் அண்ணா!
68 கருணாநிதியின் இளமை [illegible]லி!
69 புலியைக்காட்டி மிரட்டினார்!
70 பேச முடியாமற்போன ஒரே கூட்டம்!

71 சொன்னதைச் செய்தார்!
72 பழைய பல்லக்கையே தூக்குகின்றேன்!
73 அண்ணாத்துரை தீர்மானம்!
74 குழப்பத்தைப் போக்கினார்!
75 அண்ணாவைத் தெரியாத தமிழ் ஆசிரியர்!
76 பணக்கார கட்சியா!
77 அண்ணாவும் ஆலயப் பிரவேசமும்!
78 யார் இந்த அண்ணாத்துரை!
79 மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை!
80 அண்ணாவைப் போற்றிய ஜின்னா!
81 பேச்சாளர் ஆனது எப்படி!
82 அறிஞர் ஆனது எப்போது!
83 அண்ணாவால் முடியாதது!
84 பெருச்சாளி அடித்த அன்பழகன்!
85 எலிக்கு ஊசி போடு!
86 குரங்கு நிலையிலே இருக்கின்றாய்!
87 அண்ணாவும் மந்திரியாகலாம்!
88 கிராமபோனில் பெரியார் பேச்சு!
89 கலைவாணர்களை கழகத்துக்கு இழுத்தார்!
90 அண்ணா அணிந்த சில்க் சட்டை!
91 அரசியலுக்கு வராதீர்! பாரதிதாசனுக்கு அறிவுரை!!
92 அண்ணாவுக்கு மிரட்டல் கடிதம்!
93 அண்ணாவின் ஓர் இரவு!
94 வேண்டாம் இந்த மந்திரி பதவி!
95 வ. ரா. விருப்பம் நிறைவேறவில்லை!
96 பாடுபடுவது மந்திரி பதவிக்காகவா!
97 அண்ணாவின் கருப்புச் சட்டை!
98 அடிக்கு அஞ்சாத நெஞ்சுரம்!
99 காங்கிரஸ் கொடியை எரித்தார்!
100 ஏழைகள் பிழைப்பைக் கெடுக்காதே!
101 மேக்கப் கோலத்தில் அண்ணா!
102 அண்ணா சாவதற்கு அனுமதிக்க மாட்டோம்!
103 தூக்கிலே ஈழத்து அடிகள்!
104 திரௌபதியிடம் கிருஷ்ணன் லீலை!
105 ரோமாபுரி ராணிகளும், கம்பரசமும்!
106 உண்மையான சீடன்!
107 தேவர்கள் பிடித்த சுருட்டு!
108 முட்டாள்கள் தேவை!
109 முதல் நகரசபை வரவற்பு!
110 அழகிரியின் நிலைகண்டு அண்ணா அளித்த நிதி!

111 பெரியார்மீது மான நஷ்ட வழக்கு!
112 அரசியல் வாதிகளின் பேரம்!
113 பெரியாருக்குப் புரியவில்லை!
114 தி மு.கவை தோற்றுவித்தது ஏன்!
115 வழக்குப் போடாதே!
116 எந்தத் துறையும் சொந்தத் துறை!
117 அண்ணாவைச் சந்தேகித்த கூாக்கா!
118 தெனாலி தோழரும அண்ணாவும்!
119 கண்கள் கலங்கின!
120 காமராஜரின் கைக்கூலி! பெரியாரின் குற்றச்சாட்டு!
121 பெரியார் கொடுத்த பிஸ்கேட்!
122 ஒரு பக்க மீசையுடன் என். வி. நடராசன்!
123 சிறைக் கூடத்தில் கடமை யுணர்ச்சி!
124 சிறையில் பூனை வளர்ப்பு!
125 சிறையிலேயே திருடுகிறாயா!
126 ஜெமினி வாசனின் ஆசை!
127 அண்ணா சொன்னார்; ஜி. டி. நாயுடு செய்தார்!
128 அண்ணாவைச் சந்திதத ராஜாஜி!
129 நல்லவற்றிக்கு ஆதரவு! நயவஞ்சகத்துக்கு எதிர்ப்பு!
130 அண்ணாவும் நாதஸ்வரமும்!
131 கலைவண்ணம் அங்கு கண்டோம்!
132 அன்பழகன் எம்.எல்.ஏ. ஆன கதை!
133 ஆங்கில மாதால் கிடைதத அனுபவம்!
134 அண்ணா பார்ப்பன துவேஷியா?
135 அண்ணா பாதை!
136 இலட்சங்களா! இலட்சியங்களா!!
137 தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது யாரால்!
138 கருணாநிதிக்கு கணையாழி!
139 அண்ணா எடுத்துக்கொண்ட சபதம்!
140 வானொலியில் பேச மறுப்பு!
141 விபத்தில் மாண்டார்!
142 காரும் கட்டை வண்டியும்!
143 இராஜ்ய சபையில் நடந்த வேடிக்கை!
144 மங்கை மறைந்த மாயம்!
145 கட்டில்கால் வெட்டிய கதை!
146 தலைவணங்க வைத்த தளிர்க்கரம்!
147 முதலமைச்சர் கைதானார்!
148 பணிப்பெண் காட்டிய பரிவு!
149 அண்ணா அனுப்பிய மருந்து!
150 இதயம் உறங்குவதற்கு முன்!

# அறிஞர் அண்ணா வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள்

## 1. பக்தியும், பிரார்த்தனையும் !

அறிஞர் அண்ணா அவர்கட்கு, "ஆண்டவன் மீது—ஆண்டவனை உள்ளடக்கிய ஆலய வழிபாட்டின் மீது, நம்பிக்கை உண்டா ?" என்ற ஐயப்பாடு நாட்டு மக்களுக்கு நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. இந்த ஐயப்பாட்டிற்கு உற்றதொரு தெளிவினை, தாம்பரம் கிருத்துவக் கல்லூரி தத்துவப் பேரவை யில் அண்ணா அவர்கள் வெளியிட்டார்கள். அந்த தத்துவப் பேரவையில் பேசும்போது, "எனக்கு கடவுள் நம்பிக்கை இருக்கிறதா ? என்று கேட்பார் களானால், நான் சூரிய-சந்திர சுழற்சியின்-அதற்குஅப் பாற்பட்ட அண்டவெளி இயக்கத்தின் மூலம், ஏதோ மனிதனுக்கு அப்பாற்பட்ட சக்தி இருப்பதாகவே உணர்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

"எனக்கு பிரார்த்தனையில் நம்பிக்கையில்லை என்று கருதத் தேவையில்லை. பிரார்த்தனையில் பல வகைகள் உண்டு. நான் உள்ளத்திலேயே யாரும் அறியாமல் பிரார்த்தனை செய்து கொள்பவன். எனக்காகப் பிரார்த்தனை செய்பவர்கள் பலர் இருக்கிறுர்கள் என்பதும எனக்குத் தெரியும். எனக்காக அவர்கள் செய்யும் பிரார்த்தனை மிகுந்த பலனளிக்கும் என்பதும் எனககுத் தெரியும்'' என்று முதலமைச்சரான பிறகு அண்ணு அவாகள் சட்டசபையில் கடவுள் பிரார்த்தனையைப் பற்றி கூறியுள்ள கருத்துக்களும் ஆஸ்திக உள்ளங்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய ஒன்ருகும்.

அண்ணு அவர்களை அவருடைய தாய் தந்தையர் அந்த நாளில் மதப்பற்றும் தெய்வ நம்பிக்கையும் உள்ளவராகவே வளர்த்தனர். அண்ணுவுக்கு அருந் துணையாக இருந்து ஆளாக்கி விட்ட அவருடைய சிற்றன்னையும் (தொத்தா) அதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

இன்று பகுத்தறிவு இயக்கத்தின் தனிப்பெரும் சுடராய் ஒளிவிட்டுத் திகழும் அண்ணு, இளமைப் பருவத்தில் ஆலய வழிபாட்டைத் தவறவிடாத இளைஞராகத் தான் திகழ்ந்துக் கொண்டிருந்தார். ஆலய வழி பாட்டில் தவருத அவர் அதிலும் ஒரு புதுமையைக் கையாண்டார். எந்த கோயிலில் கூட்டம் அதிகம் இருக்குமோ அங்கு செல்லாமல், கூட்டம் குறைவாக உள்ள கோயிலுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்துக் கொண்டு வந்தார். கூட்டம் இல்லாத நேரத்தில் தனியாக கோயிலுக்குச் செல்வதில் அவா பெரிதும் விருப்பம் உள்ளவராகவே விளங்கிஞர்.

எல்லா மக்களும் கூட்டமாகச் சென்று இட நெருக்கடியில் திண்டாடாமல், கூட்டம் குறைவாக உள்ள இடத்துக்குச் சென்று வழிபடுவோம் என்ற

கொள்கையை இளமைப் பருவத்தில் அடாப்பிடியாகக் கைக்கொண்டிருந்தார். எல்லோரும் செல்லும் கோயிலுக்கு அவரும் போவதுண்டு; ஆனாலும் கூட்டமே அங்கு இல்லாத நேரமாகப் பார்த்துத் தான் செல்வது வழக்கம்.

இளமையில் அண்ணாவுக்கு மிகவும் பிடித்தமான கடவுள் பிள்ளையார்தான்! பிள்ளையாருக்கு இளம் வயதில் பூஜைகளும் செய்ததுண்டு. பிள்ளைப் பருவத்தில் பிள்ளையார் பக்தராக அண்ணா விளங்கியிருந்தார் என்றால் பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். காஞ்சியிலுள்ள அதிகம்பேர் கவனத்தைக் கவராத புண்ணிய கோடீசுவரர்கோயில் என்ற சிறிய கோயிலுக்குத்தான் அண்ணா அடிக்கடி சென்று வருவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்.

## 2. நொண்டிச் சாக்கு !

பிள்ளைப் பருவத்தில் அண்ணா விளையாட்டில் ஆர்வம் உள்ளவராகவே இருந்தார். தன்னொத்த இளம் பருவத் தோழர்களுடன் கலந்து 'கேரம்' விளையாடுவதில் அவருக்கு அளவு கடந்த ஆனந்தம். ஓய்வு கிடைக்கின்ற நேரங்களிலெல்லாம் நண்பர்களுடன் சேர்ந்துக்கொண்டு 'கேரம்' விளையாடியே பொழுதைக் கழிப்பார். அதைப் போலவே சீட்டாடுவதையும் பிற்காலத்தில் பொழுது போக்காகக் கொண்டிருந்தார்.

விளையாட்டில் ஆர்வம் உண்டென்றாலும் பள்ளியில் நடக்கும் 'டிரில்' வகுப்புக்கு அதிகம் போவது கிடையாது. பொதுவாகவே அண்ணாவுக்கும் உடற்

பயிற்சிக்கும் அதிகம் சம்பந்தமில்லை. அதிகத் தேகப் பயிற்சி பெற்றவருமல்ல என்பதை அவரது உடலும் உயரமும் காட்டும். உடற்பயிற்சி வகுப்புக்கு, பள்ளி நாட்களில் அண்ணா போனது இல்லை. இவரது விருப் பத்துக்கு ஏற்ப இவரது குடும்பத்தினரும் இருந்தார் கள். 'டிரில்' வகுப்புக்குப் போகாமல் இருக்க ஒரு உபாயம் சொல்லிக் கொடுத்தார்கள். "'டிரில்' வகுப் புக்கு போகாமல் இருக்க வேண்டுமானால் காலில் கட்டு போட்டுக் கொள்" என்பாராம் அண்ணாவின் தாத்தா. அதன்படி அண்ணாவும் காலில் சிவப்பு மையைக் கொட்டி, கட்டும் போட்டுக் கொள்வார். சுளுக்கு போல நொண்டிச் சென்று, 'கால் வலிக்கிறது சார்' என்பார். 'டிரில்' வாத்தியாரும் அண்ணாவை வீட் டுக்கு அனுப்பி விடுவாராம்.

## 3. மாமியார் அனுபவம்!

அண்ணா பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது, வீடு வெகு தூரத்தில் இருந்தது. ஆகவே அவர் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு மீண்டும் பள்ளிக்குப் போவது கஷ்டமாக தோன்றிய காரணத் தால், அவரது பெற்றோர்கள் பள்ளிக்கு அருகிலேயே தங்கள் உறவினர் வீட்டில் பகல் உணவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த வீட்டின் நிலையோ மிகவும் விசித்திரமாக இருந்ததை அண்ணா சொல்லிச் சொல்லி சிரிப்பார்.

அண்ணா சாப்பிட ஏற்பாடாகியிருந்த அந்த வீட் டுக்குரிய மாமியார், வீட்டில் உயர்ந்த பொருளாக இருந்தால் அதை அலமாரியில் வைத்துப் பூட்டி விடு

வார்களாம். அண்ணா அவ்வீட்டுக்குச் சாப்பிடப் போனதும் வீட்டிற்குரிய மருமகள் அண்ணாவுக்கு சாதம்போட்டுவிட்டு, மாமியாரை அழைத்து, 'சாதம் போட்டு விட்டேன், உருளைக்கிழங்கு வறுவல் வேண்டும்' என்று சொன்னால், மாமியார் சாவியைக் கொடுத்து அனுப்பி அதை எடுத்துக்கொண்டு வந்து அண்ணாவுக்கு வைத்த பிறகு, அதனை மீண்டும் அல மாரியில் வைத்து பூட்டி விட்டுச் சென்று விடுவார் களாம் அந்த மாமியார்.

## 4. அசடு வழிந்தது !

ரயில் ஓடிக் கொண்டிருக்கிறது — மாணவனின் கண்களில் நீர் குபுகுபுவெனக் கிளம்பி வழிகிறது— கோவெனக் கதறவில்லை—ஆனால் விம்மலை அடியோடு அவனால் அடக்க முடியவில்லை.

அலறலுடன் தாயார் கேட்டார்கள்—'ஏண்டா அழுகை? என்ன நடந்தது! ஏன் அழுகிறே - சொல் லித் தொலையேன் '-என்று; பதில் இல்லை மாணவனிட மிருந்து.

கோபம் பிறந்து விட்டது தாயாருக்கு "ஏண்டா? நாகப்பழம் தின்றதற்காக அடித்தேனே,அதற்காகவா அழறே!

"டேய் உண்மையைச் சொல் இன்னும் இரண்டு நாள் இங்கே இருக்க வேண்டும் என்று அழுகிறாயா?"

"மலைப் பிரதட்சணத்தின்போது தலையில் குட்டி னேனே, அதை எண்ணிக்கொண்டா இப்ப அழறே"- தாயார் என்ன கேட்டும் அவனிடமிருந்து பதில் இல்லை. வண்டியில் உள்ளவர்கள் சிரித்தார்கள் !

"ஊருக்குப் போனதும் நாளைக்குப் பள்ளிக்கூடம் போகவேணுமே, விளையாடுவதற்கு இல்லையே என்று அழுறியா" - என்றார் தாயார். அப்போதும் பதில் இல்லை. கேள்வி கேட்கும் பொறுமையை இழந்தார் தாயார்; கோபம் தாயாருக்கு! மகனுடைய கையை பிடித்து இழுத்தபடி "என்னடா? நாலு நாழியா நான் கத்து கத்தென்று கத்துகிறேன்..." என்று கூறி முடிப்பதற்குள்,

"ஐயையோ... கையை விடு, விடு கையை, ஐயையோ" என்று கையை உதறியபடி கதறுகிறான் மகன். விஷயம் அப்போதுதான் எல்லோருக்கும் தெரிந்தது.

கை, கட்டைவிரல் நசுங்கிப் போயிருக்கிறது. இரத்தமும் கசிந்துக் கொண்டிருந்தது.

"எப்படி விரல் நசுங்கி விட்டதடா" என்று தாய் கேட்டாள். மகனோ ரயில் வண்டிக் கதவைக் காட்டினான் விம்மலும் வெட்கமும் கலந்த நிலையில்.

"அட அசடே! கதவை சாத்தின போது கை விரல் நசுங்கி விட்டதா" என்று தாயார் கேட்டுவிட்டு இப்படி ஒரு அசட்டுப் பிள்ளை இருக்குமா? சரிசரி காட்டுடா விரலை" என்று தாயார் கூறிவிட்டு, ஈரத் துணி கொண்டு விரலைத் துடைத்துக் கட்டினார்கள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். அந்த மாண வன், வேறுயாருமல்ல நமது அண்ணாதான் அன் றைக்கு அசடாக நடந்துக் கொண்டவர்.

அண்ணா அவர்கள் ஆறுவது வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது ஒரு முறை தன் தாயாருடன் திருவிழாவிற்காக திருக்கழுக்குன்றம் சென்றுவிட்டு

ரயிலில் வீடு திரும்பும்போது இந்த வேடிக்கை நடந்தது.

கட்டை விரல், ரயில் கதவின் இடுக்கிலே சிக்கிக் கொண்டது தான் சாத்தும் போது, என்பதை வெளியே சொல்ல வெட்கம் - அதே போது கைவிரல் நசுங்கியதால் ஏற்பட்ட வலியைத் தாங்கிக் கொள்ள முடியாத துக்கம்.

ஆகவே கண்ணீர் - விம்மல்! என்ன காரணம் என்று தாயார் கேட்டதற்கு உண்மையைக் கூறினால் கேலி செய்வார்களே என்ற கூச்சம்! எனவே ஏதேதோ நொண்டிச் சாக்குகளைக் காட்டினார் - நெடுநேரம் - கடைசியில் உண்மைக் காரணம் வெளிவந்து விட்டது கண்ணீர் நின்றது. ஆனால் அவரது முகத்திலோ அசடு வழிந்தது!

## 5. தெருக்கூத்து ரசிகர் !

தெருக்கூத்து வேடிக்கைப பார்ப்பதில் அண்ணாவுக்கு இளம் வயதிலிருந்தே விருப்பம் நிறைய உண்டு. தெருக்கூத்தை ஒரு பொழுது போக்காகவும், நகைச் சுவையை ரசிக்கும் வாய்ப்பாகவும் கொள்ளுவது அவரது பண்பாடு. பள்ளிப்பருவ காலத்தில், காஞ்சிபுரத்தில் எங்கு தெருகூத்து நடந்தாலும் அங்கு முதலில் சென்று உட்கார்ந்து, இறுதிவரையில் இமை கொட்டாமல் பார்த்திருந்து விட்டு, கூட்டம் கலைந்து எல்லோரும் வீடு திரும்பியதற்குப் பிறகு தான் கடைசியாக வீடு வந்து சேருவார்.

அண்ணா, அவர்கள் ஆரம்பப்பள்ளி மாணவராக இருந்த போது, அவரோடு ஒத்த அவருடைய நண்பர்

களைக் கூட்டிக் கொண்டு, தமது வீட்டுக்கு அடுத்துச் சில வீடுகள் தள்ளி, ஒரு வீட்டின் மாட்டுக் கொட்டகையில் வேடங்கள் புனைந்துக் கொண்டு நாடகம் ஒன்று நடத்திக் கொண்டிருந்தார்கள். அச் செய்தியை அறிந்த அண்ணாவின் பாட்டியார் கோபத்தோடு சென்று, நாடகம் ஆடிக் கொண்டிருந்த அண்ணா அவர்களை வேடத்தோடு பிடித்து இழுத்துக் கொண்டு வந்து வீட்டில் வைத்து அவரது முதுகில் நன்றாக அடித்து விட்டார்களாம். என்ன செய்தும் தெருக் கூத்துப் பைத்தியம் மட்டும் அதற்கு பின்னும் அவரை விட்டு விலகவில்லை.

இப்பொழுதும் சுற்றுப் பயணத்தை ஒட்டி வெளியூர் நோக்கிச் சென்றுகொண்டு இருக்கும் போது எங்கேயேனும் சாலையோரத்தில் தெருக்கூத்து நடைபெற்றுக் கொண்டிருந்தால், தான் ஏறிவந்த காரை தூரத்தில் நிறுத்திவிட்டு யாரும் அறியா வண்ணம் ஒதுக்கமான இடத்தில் நின்றுக் கொண்டு, காட்சிகளைக் கண்டு ரசித்துக் கொண்டிருப்பாராம்.

## 6. திருடனிடம் சிக்கினார்!

அண்ணா சிறுவனாயிருந்த போது-அப்போது அவருக்கு ஏழு அல்லது எட்டு வயது இருக்கும். காஞ்சிபுரத்திலிருந்து அண்ணாவின் தாயார் சென்னையில் நடக்கும் பார்க்பேர் கண் காட்சிக்கு அண்ணாவை அழைத்து வந்தார்கள்.

எழும்பூர் ரயிலடியில் இறங்கியதும் அங்குள்ள பொருட்களைப் பார்த்து அண்ணா அது வேண்டும், இது வேண்டும் என்று தனது தாயாரை தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தார்.

அப்போது அவருக்கு தங்கக் காப்பும் சங்கிலியும் அணிவித்திருந்தனர். அதை ஒருவன் பார்த்துக் கொண்டே இருந்திருக்கிறான். பிறகு அவரது குடும்பத்தாருடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே "பையன் பலூன் வேண்டும் என்று அப்போதிருந்து அழுகிறானே வாங்கித் தந்தால் என்ன?" என்று கேட்டான். அவரது தாயார் தனது பிள்ளையின் மீது வேறு ஒருவர் இரக்கப்படும் அளவுக்கு விட்டு விட்டோமே என்று வெட்கமடைந்து, "பலூன் இங்கு விற்கவில்லையே!" என்று கூறினார்கள். "அதோ! அங்கு விற்கிறான்! நான் வாங்கித்தருகிறேன்" என்று விடுவிடென அண்ணாவை அழைத்துக் கொண்டு போனான். அவன் பழகிய நல்ல முறையை வைத்து அண்ணாவின் வீட்டார் விட்டு விட்டார்கள்.

அண்ணாவை அழைத்து சென்ற அவன் எல்லா பிளாட்பாரங்களையும் கடந்து கடைசி பிளாட்பாரத்துக்கு வந்து விட்டான், அப்போது அண்ணாவுக்கு விவரம் தெரியா விட்டாலும் அவன் பலூன் வாங்கித் தருவதாக கூட்டிப் போகவில்லை என்பதை மட்டும் தெரிந்து கொண்டார். ஆகவே சத்தம் போட்டு அழ ஆரம்பித்தார். அவனது நோக்கமெல்லாம் கூட்ஸ் நிற்குமிடத்திற்கு அண்ணாவை அழைத்சென்று தங்க நகைகளை கழற்றி விட்டு கழுத்தைத் திருகி கொன்று கூட்ஸ் வண்டியில் போட்டு விட்டால் எங்காவது போய் விடும் என்ற நினைப்புத்தான்! ஆனால் அண்ணா போட்ட கூக்குரலை கேட்ட அந்த வழியில் போகிறவர்கள் அவனை தடுத்து நிறுத்தி "யார் நீ! ஏன் பையனை அழைத்துப் போகிறாய்?" என்று கேட்டபோது அவன் சரிவர பதில் சொல்லாததால் சந்தேகப்பட்டு அவனை போலீசில் ஒப்படைத்

தார்கள். அண்ணாவை அவருடைய தாயிடம் அழைத்துச் சென்றார்கள். அப்போது அண்ணாவின் தாயார் அண்ணாவைப் பார்த்து, "பலூன் எங்கே?", என்று தான் கேட்டார்களாம்.

## 7. காந்தி யார்?

அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் 8-வது வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் போது, நாட்டில் சுதந்திரக் கிளர்ச்சி பெருகிக் கொண்டிருந்தது. சுதந்திர கிளர்ச்சியின் விளைவாக காந்தியார் எரவாடா சிறையில் தள்ளப் பட்டார். இந்த செய்தி அறிந்ததும் ஊரிலுள்ள காங்கிரஸ் கட்சிக்காரர்கள் 'கடை அடைப்பு' நடத்த ஏற்பாடு செய்தனர். அவர்கள் ஒவ்வொரு கடைக் காரர்களையும் அணுகி கடையடைக்கும் படி கேட்டுக் கொண்டார்கள். அப்பொது ஒரு கற்பூரக் கடைக்காரர் 'ஏன் கடையடைக்கச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டார். 'காந்தி சிறையில் அடைக்கப் பட்டதற்காகக் கண்டனம் தெரிவிக்க வேண்டும்' என்றனர்; அதைக் கேட்டதும் அக்கடைக்காரர், 'காந்தியா? அவர் யார்?' என்று ஆச்சரியத்துடன் கேட்டாராம். அவர் கேட்டதைப் பார்த்த மற்றவர்களும், காந்தியைத் தெரியாத வரும் இருக்கின்றாரே என்று ஆச்சரியப்பட்டனராம்.

## 8. சத்தியமூர்த்தியும் திருப்பதி ஐதீகமும்

அண்ணா பள்ளி மாணவராக இருந்தபோது காங்கிரசுத் தலைவர்களின் பேச்சைக் கேட்கும்வாய்ப்பு

பல நேரங்களில் கிடைத்து இருந்தது. அதில் சத்திய மூர்த்தி பேசுவதும் உண்டு. நீதிக்கட்சியைப் பற்றி அவர் பேசிய பேச்சு வேடிக்கையானதாகும். நீதிக் கட்சி காலத்தில், திருப்பதி உண்டியலில் விழும் பண மெல்லாம் மக்கள் கல்விக்காகச் செலவிடப் படவேண் டும்; உண்டியல் பணத்திற்கு கணக்குக் காட்டவேண் டும் என்று சொன்ஞர்கள். அதைச் சத்தியமூர்த்தி போன்ற காங்கிரசுக்காரர்கள் எதிர்த்தார்கள்.

திருப்பதி உண்டியலில் விழுகின்ற பணத்துக் கெல்லாம் 'மகந்து'கள் என்று சொல்லப்படுபவர்கள் தான் சொந்தக்காரர்கள். இரவு 12 மணிக்கு மேல் வெங்கடாஜலபதிக்குப் பொழுது போகாதாம். அதனுலே அவர் மகந்துகளை அழைத்து வைத்துக் கொண்டு சொக்கட்டான் ஆடுவாராம். இதனுலே உண்டியல் பணம் முழுவதும் மகந்துகளுக்கு கொடுத்து விட வேண்டுமாம். இப்படி ஒரு ஐதீகம் சொல்லப்பட்டு வந்தது. இந்த முறையை மாற்றி, "உண்டியலில் போடப்படும்பணம் மதக் காரியங்களுக் காகத்தான் போடப்படுகிறது; கல்விக்காக அந்தப் பணம் செலவிடப்படவேண்டும்" என்று நீதிக்கட்சி யார் சொன்ஞர்கள். இதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்த சத்தியமூர்த்தி, 'உண்டியலில் போடப்படும் பணம் யாவும் நீதிக்கட்சிகாரர்கள் அள்ளிக்கொண்டு போவதாக மக்களிடம் சொன்ஞர்கள். அப்பொழுது காங்கிரசுத் தலைவரான சத்தியமூர்த்தியே அப்படி பிரச்சாரம் செய்ததை பள்ளி மாணவராக இருந்த அண்ணு கேட்டு ஆச்சரியப்படுவாராம்.

## 9. பரீட்சையில் பொடி !

பள்ளி இறுதி வகுப்பு பரீட்சை நடந்து கொண்டு இருந்த நேரம்..... திடீரென்று அண்ணாவுக்கு 'பொடி' நினைவு வந்து விடவே, சுற்றுப்புற சூழ்நிலை எதையும் கவனிக்காமல், மடியிலிருந்த மட்டையை எடுத்து யாருக்கும் தெரியாவண்ணம் ஒரு 'சிட்டிகை' எடுத்து கைக்குட்டையால் முகத்தை மறைத்து முகத்தின் அருகில் கொண்டு போனார். உடனே பார்வையாளராக வந்திருந்த ஆசிரியர் இதை கவனித்து விட்டார். கவனித்த அவர் கண்டுங்காணாதது போல் இராமல் அருகே வந்தார் ..... வந்ததோடு நில்லாமல் "மடியில் இருந்து என்ன எடுத்தாய் ஏதாவது பரீட்சைக் குறிப்புகளை எழுதி எடுத்துவந்திருந்தாயா? என்றார்.

"அதெல்லாமொன்று மில்லை" என்று அண்ணா எவ்வளவோ மழுப்பியுங் கூட அவர் விடவில்லை !

"ஒன்றுமில்லை யென்றால் மடியிலிருந்து எடுத்ததை என்னிடம் காண்பி" என்றார் ! நிலைமை தர்ம சங்கடமாகப் போய் விடவே, அண்ணா அவர்கள் வேறு வழியின்றி புன்முறுவலோடு மடியிலிருந்து எடுத்த அந்த மட்டையை அவரிடம் காண்பித்து. "இதைத்தான் எடுத்தேன் ! இது இருந்தால் எழுத்து ஜோராய் ஓடுகிறது, தயவு செய்து இதை யாரிடமும் சொல்லாதீர்கள் !" என்ற விவரத்தை வெளியிட்டு பணிவன்புடன் வேண்டிக்கொண்டாராம்! பார்வையாளர் என்ன செய்வார்? பதிலுக்கு ஒரு புன்முறுவலை உதிர்த்து விட்டு போய் விட்டார் !

## 10. படிப்பதற்கு நிபந்தனை !

கல்லூரியில் படிக்கும்போது 'இன்டெரில்' முதல் வகுப்பில் அண்ணா தேர்ச்சி பெற்றதைக் கண்ட பச்சையப்பன் கல்லூரித் தலைவராக இருந்த திருவாளர் சின்னத்தம்பி பிள்ளை அவர்கள், அண்ணா அவர்களை பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சேரும்படி கேட்டுக் கொண்டாராம். ஆனால் அண்ணாவோ தனது பொருளாதார நிலையை எண்ணி ஆனர்ஸ் படிக்க விரும்பவில்லை.

"ஆனர்ஸுக்கு படிக்க வேண்டுமென்றால் மூன்றாண்டுகள் படிக்க வேண்டியதிருக்கிறது, அதற்கேற்ற வசதி என்னிடமில்லை. ஆகையால் இரண்டாண்டுகளில் முடியும் சாதாரணமான பி.ஏ. போதும். அந்தப் பட்டத்தை வைத்துக்கொண்டு ஏதாவது வேலை தேடலாம் என்றிருக்கிறேன்" என்றாராம். கல்லூரித் தலைவருக்கோ நன்றாகப் படித்து முன்னேறக்கூடிய ஒருவர் வீணாகிறாரே என்ற வருத்தம் ஏற்பட்டது. எப்படியாவது அண்ணாவை ஆனர்ஸ் வகுப்பில் சேர்த்து விட்டுவிட வேண்டும் என்பது கல்லூரித் தலைவரின் எண்ணம். அதன் பொருட்டு அண்ணாவைத் தனியாக அழைத்து, "அண்ணாத்துரை நம்மைச் சேர்ந்தவர்களில் உன்னைப்போல் நன்றாகப் படித்து, தேர்வில் பெரும் எண்கள் பெற்று, முதல் வகுப்பில் வருவதென்பது மிகவும் அரிது. மிகச் சிலரே அப்படியுள்ளனர். அப்படியிருப்பவர்கள் முன்னேற வேண்டியது அவசியமல்லவா?" என்று கேட்டு, அண்ணாவின் இலவசப் படிப்புக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் தான் செய்து தருவதாக உறுதி கூறினாராம்.

கல்லூரித் தலைவரின் அன்பான பேச்சு 'அண்ணா' வின் மனதைக் கொஞ்சம் மாற்றியது. சரி என்று ஒப்புதல் அளிக்கவும் விரும்பினார். இருந்தாலும், மேலும் ஒரு சலுகையையும் கல்லூரித் தலைவரிடமே கேட்டுக்கொண்டார். "கல்லூரிக்கு வேண்டிய பாடப் புத்தகங்களையும் வாங்கிக் கொடுத்தால் பி ஏ. ஹனர்ஸ் படிக்க தடையில்லை என்றாராம். அண்ணா வின் வேண்டுகோளுக்கு கல்லூரித் தலைவர் ஒப்புக் கொண்ட பின்னரே, அண்ணா அவர்கள் ஆனர்ஸ் வகுப்பில் சேர இசைந்தார்.

## 11. வெற்றிலைப் பாக்கு பைத்தியம்!

பொடிப் பழக்கத்தைப் போன்றே வெற்றிலைப் பாக்கு புகையிலையும் போட்டு பழகிக்கொண்டார். அதில் அண்ணாவுக்கு அளவற்ற மோகம். கல்லூரி மாணவராயிற்றே, வெற்றிலைப் பாக்கு போட்டால் நாகரீகத்தில் திளைத்துள்ள மற்ற கல்லூரி நண்பர்கள் கேலி செய்வார்களே என்ற எண்ணத்திற்கு அண்ணா ஒரு சிறிதும் கவலைப்படுவதே இல்லை.

வெற்றிலைப்பாக்கு மீது அவர் கொண்டிருந்த மோகம், கல்லூரி வகுப்பறையில்இருக்கும்போதுகூட அவரை விடவில்லை. வகுப்பு நடந்துக்கொண்டிருக்கும் போதுகூட வெற்றிலைப் புகையிலையை உபயோகிக்க ஆரம்பித்தார். வெற்றிலைப் போடுவதை ஆசிரியர் பார்த்துவிடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக வீதிபக்கமாக இருக்கும் சன்னல் ஓரமாக உள்ள பெஞ் சில் அண்ணா உட்கார்ந்து கொள்வார். எப்படி எப் படியோ முயன்றும் நீண்ட நாட்களுக்கு பேராசிரியர்

களை அண்ணாவால் ஏமாற்ற முடியவில்லை. ஒரு தடவை மோசூர் கந்தசாமி என்ற தமிழ்ப்பேராசிரியர், அண்ணா வெற்றிலைப்பாக்கு புகையிலையுடன் வகுப்பில் இருப்பதைக்கண்டு கடிந்து கொண்டாராம்.

## 12. 'அடா' என்று அழைத்தவர்!

பச்சையப்பன் கல்லூரியில் அண்ணா படித்த காலத்தில் மோசூர் கந்தசாமி புலவர் என்பவரும் மணி திருநாவுக்கரசு என்பவரும் தமிழாசிரியர்களாக இருந்தார்கள். அவர்கள் பிற தமிழாசிரியர்கள் கூனிக் குறுகி. அச்சத்துக்கும் ஆயாசத்துக்கும் உட்பட்டு செல்வதைப் போலல்லாது, அந்தக் காலத்திலேயே நிமிர்ந்த நடையோடு நேரிய பார்வையோடு நடந்துக் கொள்வார்கள். அந்த துணிவு மிக்க ஆசிரியர்களிடம் பாடம் கேட்ட காரணத்தால்தான் எந்த தொல்லைகளையும் ஏற்று, எந்த பிரச்னைக்கும் ஈடு கொடுத்து சமாளிக்க அண்ணாவால் முடிகிறது. மோசூர் கந்தசாமிப் புலவர் முதல்முதலாக வகுப்புக்கு வந்ததும் அண்ணா போன்ற மாணவர்களைப் பார்த்து "உங்களை நான் கூப்பிடும்போது அவன் இவன் என்றோ, அது இது என்றோ கூறமாட்டேன். அவன் இவன் என்று கூறுவது அவ்வளவு சரியாக எனக்குப் படவில்லை; அது, இது என்று கூறுவதோ அஃறிணையைக் குறிக்கும், அடா! என்று அழைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், அதுதான் அன்புச் சொல். அன்பின் சின்னம்தான் அது!" என்று கூறினாராம். அண்ணாவின் கல்லூரி படிப்பு காலத்திலேயே தன்மான உணர்ச்சியும், வீர உணர்ச்சியையும் பெற தமிழாசிரியர்களும் காரணமாக இருந்தார்கள்.

## 13. கட்டுரையில் கை வண்ணம் !

பச்சையப்பன் கல்லூரியில் அண்ணா படித்துக் கொண்டிருந்த போது கல்லூரி பேராசிரியர், மாண வர்களிடம் கட்டுரை ஒன்று எழுதி வரும்படி கூறி யிருந்தார். மறுநாள் மாணவர்கள் எழுதி வந்த கட்டு ரைகளை திருத்துவதற்காக பேராசிரியர் எடுத்துச் சென்றார். அண்ணாவின் கட்டுரையை திருத்துவ தற்கு, அண்ணாவின் கட்டுரையை அவர் எடுத்தபோது பேரதிர்ச்சியுற்றார். அண்ணாவின் கட்டுரையில் தான் எதிர்ப்பாராத பல புதிய செய்திகள் இருப்பதைக் கண்டு வியப்புற்றார். நாம் சொல்லிக் கொடுத்தவை களைத் தானே எல்லா மாணவர்களும் எழுதி இருக் கின்றனர். அப்படியிருக்க நாம் சொல்லாத செய்திகள் புதுப்புது கருத்துக்கள், அண்ணாதுரையால் மட்டும் எப்படி எழுத முடிந்தது. இவ்வளவு உயர்ந்த முறையில் எழுத அவரால் முடியாது; வேறு ஏதாவது ஒரு புத்தகத்தில் இருந்ததை அப்படியே பார்த்து எழுதியிருக்க வேண்டும் என்று தான் அவர் எண்ணி யிருந்தார்.

மறுநாள் கல்லூரி வகுப்பறைக்குள் நுழைந்த பேராசிரியர் முதன் முதலாக அண்ணாவைத் தன் அரு கில் அழைத்து சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, ''அண்ணாத்துரை நீ எந்த புத்தகத்திலிருந்து கட்டுரைக்கு வேண்டிய கருத்துக் களை தொகுத்து எடுத்து எழுதியிருக்கிறாய்?'' என்று கேட்டாராம். பேராசிரியரின் கேள்வியைக் கேட்ட அண்ணா புன்சிரிப்புடன், ''நான் என் கட்டுரையில் எழுதியவைகள் யாவும் என்னுடைய சொந்த கற்பனை யில் தோன்றிய கருத்துக்களே யாகும். அவைகள்

எந்தப் புத்தகத்திலிருந்தும் எழுதப்பட்டவைகள் அல்ல'' என்று கூறினாராம். கல்லூரி பருவத்திலேயே கட்டுரை எழுதுவதில் வல்லமை பெற்றிருந்த அண்ணாவைக் கண்டு பேராசிரியர் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார்.

## 14. ஆசிரியரிடம் வேடிக்கை !

அண்ணா அவர்கள் கல்லூரியில் படிக்கும் பொழுது ஆங்கிலத்தில் கட்டுரை எழுவதிலும், பேசுவதிலும் சிறந்து விளங்கினார்கள். அவர் கல்லூரியில் முதல் வருட வகுப்பு படிக்கும் பொழுதே அவருடைய ஆங்கிலக் கட்டுரைகளை எடுத்து ஆசிரியர்கள், மற்ற மாணவர்களுக்கு வகுப்பில் படித்து காட்டுவார்களாம்.

ஆனால் அவர் இரண்டாவது வருட வகுப்பில் படித்த பொழுது, ஆங்கிலக் கட்டுரை வகுப்பிற்கு வந்த ஆசிரியருக்கு, அண்ணா எழுதுகிற உயர்தர ஆங்கில நடை அவ்வளவாகப் பிடிக்க வில்லை.

''அண்ணாத்துரை! உன்னுடைய கட்டுரையில் நீண்ட வாக்கியங்கள் பல வருகின்றன. கட்டுரையென்றால், சிறுசிறு வாக்கியங்களாக இருக்க வேண்டும்'' என்று ஆசிரியர் சொன்னாராம்.

''சரி! கவனத்தில் வைத்துக் கொள்கிறேன்'' என்று அண்ணா அந்த வகுப்பில் உட்கார்ந்து விட்டார்.

அடுத்த ஆங்கில கட்டுரை வகுப்பில், அண்ணா கட்டுரை எழுதி முடித்ததும், ஆசிரியர் அதை வாங்கிப் படித்தார்.

"ஒரு காலத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவன் பெயர் ராபர்ட்"

இப்படிக் கட்டுரை ஆரம்பித்தது. தான் சொன்னதைப் பையன் அப்படியே கடைப் பிடித்தது அவருக்கு சற்று மகிழ்ச்சியைத் தந்தது. மேற்கொண்டு கட்டுரையைப் படித்தார்.

"அவன் காலையில் எழுந்தான். வெளியில் வந்தான். சந்தையை நோக்கி நடந்தான். சந்தைக்கு வந்தான். அங்கு ஒரு கடையிருந்தது"

இப்படி வாக்கியங்கள் எல்லாம் எழுவாய் பயனிலை இவைகளை மட்டும் கொண்டதாய், மிகச் சிறு சிறு வாக்கியங்களாக இருந்தன. வகுப்பில் இருந்த மற்ற மாணவர்கள் சிரித்து விட்டார்கள். கேலியைப் புரிந்துக் கொண்டதும் ஆசிரியர் கட்டுரையை வைத்து விட்டு, "இப்படி கட்டுரை முழுவதும் சிறு சிறு வாக்கியங்களாகப் போட்டு விட்டாயே, ஏன்?" என்று அண்ணாவைக் கேட்டாராம்.

"நீங்கள் தானே, நீண்ட வாக்கியங்கள் கூடாது; சிறு சிறு வாக்கியங்களாக இருக்க வேண்டுமென்று சொன்னீர்கள்" என்று அண்ணா பதிலளித்தார்.

"அதற்காக ஒரேயடியாக வெறும் சிறு வாக்கியங்களாகவே கட்டுரை முழுவதும் இருக்க வேண்டாம். ஆங்காங்கு சில நீண்ட வாக்கியங்களும் வரலாம்!" என்று ஆசிரியர் சொன்னாராம். அதிலிருந்து அண்ணாவின் கட்டுரையை அவர் குறை கூறுவதே கிடையாது.

## 15. பேச்சுக்குப் பரிசு !

[illegible]-வது வருடம் ஆனர்ஸ் வகுப்புப் படித்துக்

கொண்டிருந்த போது தான் அதுவும் லயோலாக் கல்லூரி மண்டபத்தில் தான் முதல் முதலில் அண்ணு ஆங்கிலத்தில் பேசிஞர்.

லயோலாக் கல்லூரிப் பொருளாதாரக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் பல்வேறு கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

அண்ணு முதன் முதலாக அந்தப் பேச்சுப் போட்டியில் கலந்துக் கொண்டு ஆங்கிலத்தில் பேசிஞர். அங்கு அமர்ந்திருந்த பல பேராசிரியர்களும், அண்ணுவின் பேச்சுத்தான் நன்ருக இருந்தது என்று சிபாரிசு செய்தார்கள். இருந்தாலும் பிரசிடென்சி கல்லூரியைச் சார்ந்த வாரியார் என்னும் மாணவருக்குத்தான் முதல் பரிசு என அறிவிக்கப் பட்டது. உடனே கூடியிருந்த அத்தனை பேரும் "பரிசு அண்ணுத்துரைக்குத் தான் கொடுக்க வேண்டும்" என்று குரல் எழுப்பிஞர்கள். பேராசிரியர்களும் அதை ஆதரித்தார்கள்; கடைசியாக அண்ணுவுக்கும் ஒரு பரிசு கொடுத்தார்கள்.

## 16. சிகரேட்டும் சுதந்திரமும் !

அண்ணு கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஒரு மாணவர் அதிகமாக சிகரேட் பிடித்துக் கொண்டிருந்தார். அவரிடம் சென்று 'ஏன் அதிகமாக சிகரேட் பிடிக்கிருய்' என்று கேட்ட நேரத்தில் அவர் 'பர்னிங் தி பிரிட்டிஷ் கூட்ஸ்' என்று கூறி, இதன் மூலம் வெள்ளைக்காரர்களுடைய பொருளைக் கொளுத்துவதாகவும் இருக்கும், அதே நேரத்தில்

சுதந்திரத்திற்காக தியாகம் செய்ததாகவும் இருக்கும்' என்று சொன்னாராம். அந்தக் காலத்தில் சுதந்திரப் போராட்டத்தின் திட்டங்களை எப்படியெல்லாம் அர்த்தப் படுத்திக் கொண்டு நடந்தார்கள் என்பதை அண்ணா வேடிக்கையாக கூறுவது உண்டு.

## 17. பேராசிரியருக்குப் புகழ் மாலை!

அண்ணா அவர்கள் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 'ஷேக்ஸ்பியர் புகழ்' பேராசிரியர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்களிடம் கல்வி பயின்றவர். திரு. கிருஷ்ணமூர்த்தியை நினைத்தாலே புதிய மாணவர்களுக்குக் குலை நடுக்கம். ஆனால், சில மாணவர்கள் அவரிடம் அடக்குத்துடன் நெருங்கிப் பழகுவார்கள். வேறு சில மாணவர்கள் தோழர்களாவும் பழகுவார்கள். இந்தப் பேராசிரியரைப் பற்றித் அறிஞர் அண்ணா இறுதி ஆண்டின் போது நடந்த பாராட்டு விருந்தில் குறிப்பிட்டவை புகழ்பெற்ற சொற்கள் அவை :

"பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி முதலாண்டில் சர்வாதிகாரி, இரண்டாம் ஆண்டில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட சக்கரவர்த்தி, மூன்றும் ஆண்டில் குடியரசுத் தலைவர், நான்காம் ஆண்டில் தோழர்."

இதைக் கேட்ட பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி உட்பட அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்து மகிழ்ந்தார்களாம்.

## 18. ஆறு மாதம் ஆசிரியர்!

அண்ணா அவர்கள் எம்.ஏ. படித்து முடித்தவுடன் சென்னையிலுள்ள கோவிந்தப்ப நாயக்கன் பள்ளி

யில் ஒரு ஆறு மாதம் ஆசிரியராக பணியாற்றினார். அப்போது கல்வியில் ஒரு புதிய பாடமுறையை புகுத்தினார்கள். அப்போது, அண்ணாவுக்கு உற்ற நண்பர் அண்ணா இடத்தில், நீ ஆசிரியராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன் படி ஒரு ஆறு மாதம் ஆசிரியராக பணியாற்றினார். பின்னால் விலகி பொது வாழ்வில் ஈடுபடத் துவங்கினார்.

## 19. கேட்டது ஒன்று! கிடைத்தது வேறு!!

அண்ணா அவர்கள் உத்தியோகத்தில் இருக்க வேண்டும் என்பது அவரது சிறிய தாயாரின் விருப்பம் ஆனால் அண்ணாவுக்கோ ஒருவரின் கீழ்ப்படிந்து பணி புரிவதிலே விருப்ப மில்லை. சிறிய தாயாரின் சொல்லை அண்ணா எப்பொழுதும் தட்டி பேசிய தில்லை. சிறிய தாயாரின் வற்புறுத்தலின் பேரில் அப்போது குமார ராஜாவாக இருந்த திரு. முத்தையா செட்டியாரை சந்திக்க அண்ணா சென்றார். குமார ராஜா அவர்கள் தன் அரண்மனைக்கருகே ஓடும் அடையாற்றில் படகில் அமர்ந்த படி அண்ணாவுடன் உரையாடிக் கொண்டே சென்றார்கள், 75 ரூபாய் சம்பளம் தரக்கூடிய கல்லூரியில் விரிவுரையாளர் (Tutor) வேலை தரவேண்டுமென்று அண்ணா கேட்டதற்கு, குமாரராஜா "அது வேண்டாம் நம் கட்சிக்கு நல்ல பேச்சாளர் கிடைப்பது பின்னர் அரிதாகி விடும். ஆதலால் எனக்கு பிரதம துணையாளராக (Personal Asst.) ரூ. 120 சம்பளம் தருகிறேன்" என்றார். ஆனால் அண்ணா அவர்கள் வீடு வந்ததும் கீழ் கண்ட முறையிலே ராஜா அவர்களுக்கு கடிதம் எழுதி அனுப்பி விட்டாராம்.

"அன்புள்ள ஐயா, தங்கள் பணியை மேற்கொள்ள இயலாததற்கு வருந்துகிறேன்" என்பதே அவர் எழுதின ரத்தின சுருக்கமான கடிதம்.

## 20. ஜட்ஜ் வேலை கேட்ட மாஜிஸ்ட்ரேட்!

அண்ணு அப்போது தான் அரசியலில் புகுந்த நேரம். ஆர்வமாக அரசியலில் ஈடுபடுவதும் பொதுக் கூட்டங்களில் அதிகமாகப் பேசுவதுமாக இருந்தார் அவர், இந்த மாதிரி அரசியலில் ஈடுபட்டு வேலை ஒன்றும் பார்க்காமல் காலம் கழித்து வந்தால் அண்ணு கெட்டு விடுவார்என்று எண்ணி, அவருக்குத்தெரிந்த சப் மாஜிஸ்ட்ரேட் ஒருவருக்கு குமாஸ்தா வேலைக்காகச் சிபாரிசுக் கடிதம் கொடுத்து அனுப்பிவைத்தார். அண்ணுவும் சிபாரிசுக் கடிதத்துடன் மேற்படி சப் மாஜிஸ்ட்ரேட் வீட்டிற்குச் சென்ருர். அப்போது சப் மாஜிஸ்ட்ரேட் வீட்டின் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். வெளியில் இருந்த வேலைக்காரரிடம் ஒரு பேப்பரில், "சி. என். அண்ணுதுரை, காஞ்சீபுரம்" என்று எழுதிக் கொடுத்து, "இதை சப் மாஜிஸ்ட்ரேட்டிடம் காண்பித்து நான் வந்திருப்பதாக சொல்லு" என்று அனுப்பி விட்டு வெளியில் நின்றுக் கொண்டிருந்தார்.

வேலைக்காரர் கொடுத்த சீட்டைப் பார்த்த சப் மாஜிஸ்ட்ரேட் சாப்பாட்டைக் கூடப் பாதியிலேயே வைத்து விட்டு, வெளியில் வந்தார், "வாருங்கள்! வாருங்கள்! தாங்கள் தான் அண்ணுத்துரையா? 50 வயதாவது இருக்கும் என்று எண்ணினேன். இவ்வளவு இளமையாக இருக்கிறீர்களே!" என்று கூறிக்

கொளாடே'' தாங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். ஆற்காடு திரு. ஏ. இராமசாமி முதலியார் அவர்களிடம் சொல்லி எனக்கு ஒரு ஜட்ஜ் வேலை வாங்கித் தர தாங்கள் தான் சிபாரிசு செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். வேலை தேடி வந்த அண்ணாவோ தனக்கு அரசியலில் நல்ல செல்வாக்கும் எதிர்காலமும்இருப்பதைக் கண்டு வேலை கூடக் கேட்காமல் வீடு திரும்பி வந்தார், அரசியலில் ஈடுபடலானார்.

## 21. ஆற்காடு இராமசாமியின் அறிவுரை!

காலஞ் சென்ற டாக்டர் சி. நடேச முதலியார் மரண படுக்கையில் இருந்த போது ஆற்காடு ஏ. ராமசாமி முதலியாரை சந்திக்க நேரிட்டது. அப்போது டாக்டர் சி. நடேச முதலியார் அவர்கள் ராமசாமி முதலியாரைப் பார்த்து "அப்பா நான் இந்த கட்சியில் உழைத்ததால் கஷ்டங்கள் பல அடைந்தேன், இன்னலுக்கும் தொல்லைக்கும் ஆளானேன். ஆனால் அதற்காக இந்த கட்சியைக் கை கழுவி விட்டு விட வில்லை. இந்த கட்சி மட்டும் இல்லா விட்டால் ஒரு மாபெரும் சமுதாயமே அழிந்து விடும். ஆகையால் நீயும் கடைசி வரையில் இந்தக் கட்சியைக் கைவிடாதே'' என்று கூறினாராம்.

இந்த சந்திப்பு நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முறை அண்ணா அவர்கள் ஆற்காடு ஏ. ராமசாமி முதலியாரைச் சந்திக்க நேரிட்டது, அப்பொழுது அண்ணா அவர்களை நோக்கி ஆற்காடு ராமசாமி முதலியார் கூறினாராம், ''ஏனப்பா கட்சி, கொள்கை என்று

அலை கின்றாய்! செக்ரட்டரியேட்டில் ஒரு வேலை வாங்கித் தருகிறேன். போய் சுகமாக இரு'' என்று.

## 22. திருத்தணி தந்த திகைப்பு!

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சீபுரத்தைச் சார்ந்த ஒருவர் அண்ணாவைத் திருத்தணிக்கு அழைத்துச் சென்றார். திருத்தணிக்கு புறப்படுவதற்கு முன்பு அவரைப் பார்த்து அண்ணா அவர்கள், 'திருத்தணிக்குக் கூப்பிடுகிறீர்களே, நாம் அங்கு போனால் எங்கு தங்குவது?' என்று கேட்டார். 'அதற்கென்னப்பா குறைச்சல்? அங்கு நம்முடைய சத்திரம் இருக்கிறது அதிலே தாராளமாகத் தங்கலாம்' என்றார் அண்ணாவும் சரி தான் என்று ஒப்புக்கு அவருடன் போனார். அந்தச் சத்திரம் மிகவும் பிரமாண்டமான கட்டிடமாக இருந்தது. இருவரும் அதற்குள் நுழைந்த போது, 'யார் ஐயா நீங்கள்?' என்று காவல்காரன் கேட்டான், உடனே அண்ணா திகைத்துப் போனார். 'நம்முடைய சத்திரம்' என்று இவர் சொன்னார், சத்திரத்தில் நுழையும் போது காவல்காரன் 'நீங்கள் யார்?' என்று கேட்கிறானே' என்று தயங்கினார். உடன் வந்த அவரோ, 'நான் காஞ்சீபுரம். இன்ன பெயருடைய முதலியார் தெரிய வில்லையா?' என்று கேட்டார். அதன் பிறகு தான் அவன் எங்களை உள்ளே விட்டான். உடன் வந்த அவர் அண்ணாவிடம்' என் பாட்டனார் கட்டியது தான் இந்த சத்திரம். என் பாட்டனார் ஒரு பெரிய இலட்சாதிபதி, பல இலட்சம் ரூபாய் முதல் போட்டு துணிக்கடை வைத்திருந்தார். என் தகப்பனார் நூல் வியாபாரம் செய்து வந்தார், நான் இப்போது தறி

வேலை செய்து வருகிறேன்; அதனாலே தான் அவன் என்னைத் தடுக்கிறான்!' என்று விளக்கமாகச் சொன்னாராம்.

## 23. இங்கிலீசில் பேசு!

கொஞ்சம் படித்து விட்டால் இங்கிலீசில் தான் பேச வேண்டும். அதிலும் கல்லூரியில் படித்து விட்டால் இங்கிலீசில் பேச வேண்டும் என்ற மனப்பான்மை இருந்த காலம் அது. இங்கிலீசில் பேசினால் அது ஒரு கவுரவம் என்று அப்போது பலர் எண்ணியதுண்டு.

அண்ணா அப்போது சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். ஆறு மாதங்கள் தொடர்ந்து படித்த பின் விடுமுறைக்காக வீட்டுக்குச்சென்றார். அப்போது அவரது பாட்டியார் அவரை அருகில் அழைத்து "கொஞ்சம் பேசு" என்று கூறினார்கள்.

"நாம் இப்போது பேசிக் கொண்டு தானே இருக்கிறோம்" என்றார் அண்ணா.

"இல்லை கொஞ்சம் இங்கிலீசில் பேசு" என்று அவரது பாட்டியார் கேட்டார்கள்.

"இங்கிலீசில் பேசினால் உங்களுக்கு என்ன புரியும் என்று அண்ணா கேட்டார்.

"என்ன சொன்னாய்? இதற்காகவா இவ்வளவு பணம் செலவு செய்து படிக்க வைக்கிறோம்" என்று அண்ணாவின் பாட்டியார் கேட்டு சலித்துக் கொண்டார்களாம்.

## 24. காப்பி அடித்த பேச்சாளர்!

கல்லூரி நபண்ர் ஒருவர் அண்ணுவுடன் தேர்தல் பிரசாரம் செய்வதற்காக வந்தார். மக்களை கவரும் படியாக எப்படி பேசுவது என்று அவர் கேட்டதற்கு, அண்ணு எப்படி பேசுகிருரோ, அப்படியே பேசி விடுங்கள் என்று சிலர் சொல்லி வைத்தார்கள்.

முதல் நாளன்று அந்தக்கல்லூரி நண்பன் அண்ணு பேசிய கூட்டத்துக்கு வந்திருந்தார், அன்று கூட்டம் நடந்தபோது நள்ளிரவு நேரம். எனவே மக்கள் சோர்ந்து அமர்ந்திருப்பதை பார்த்து, ''உங்களுக்கு தொல்லை கொடுப்பதற்காக மன்னிக்க வேண்டும். நீங்கள் அயர்ந்து தூங்கும் நேரத்தில் தொல்லை தருவதற்காக மன்னிக்கவேண்டும்...'' என்று கூறி அண்ணு பேச்சை தொடங்கினுர், மக்கள் புத்துணர்ச்சியுடன் உட்கார்ந்து பேச்சைக் கேட்கத் தொடங்கினுர்கள்.

இதைக் கவனித்து விட்டு சென்ற அந்த நண்பன் மறுநாளும் ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டார். அப்போது மாலை 6 மணி. மக்கள் எல்லோரும் சுறு சுறுப்பாக இருக்கும் நேரம். அந்த நண்பனிடம் 'பேசுகிருயா?' என்று கேட்டவுடன் எழுந்து சென்று பேசத் தொடங்கினுர். கூட்டத்தினரைப் பார்த்து அவர், ''நீங்கள் எல்லோரும் தூக்கத்தில் வந்திருக் கிறீர்கள், உங்களுக்கு தொல்லை கொடுப்பதற்காக மன்னிக்க வேண்டும்'' என்று கூறினுர். இதைக் கேட்டதும் கூட்டத்தினர் கை தட்டவில்லை, கொல் என்று சிரித்தார்கள். அண்ணு பேசினுல் மட்டும் கை தட்டுகிருர்களே நான் பேசும்போது கேலியாக சிரிக்கிருர்களே என்று அன்றிரவு அந்த நண்பன் வருத்தப்பட்டாராம்.

## 25. நேருவிடம் கொடுத்த துண்டு அறிக்கை!

முன்பு ஒருமுறை அண்ணா கல்லூரி மாணவராக இருந்த சமயத்தில், சென்னைக்கு சுற்றுப்பயணம் வந்த நேரு அவர்கள் பிரபாத் டாக்கீசில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தார். 'திலகர் நிதி' பற்றி நாடு எங்கும் பரபரப்புடன் பேசப்பட்டு வந்த சமயம் அது. அதைப்பற்றி அண்ணா அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு அறிக்கை தயார் செய்து அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் நுழைந்து மேடை அருகே சென்று நேருவின் கையிலே அந்த துண்டு அறிக்கையைக் கொடுத்துவிட்டு வந்தார். 'திலகர் நிதி' என்னும் பேரால் காங்கிரஸ்காரர்கள் செய்த மோசடிப் பற்றி ஆங்கிலத்தில் அத்துண்டு அறிக்கை அச்சடிக்கப்பட்டிருந்தது. ஒரு இளைஞன் இவ்வளவு துணிச்சலாக தன்னந்தனியாக நேருவின் கையிலேயே இதைக் கொடுத்துவிட்டானே என்று எல்லோரும் ஆத்திரப்பட்டனர்,

## 26. செங்கல்வராயன் முயற்சி தோற்றது!

ஆங்கிலத்திலும் அருந்தமிழிலும் பேச்சாளராக விளங்கும் காங்கிரஸ் பிரமுகர் திரு. டி. செங்கல்வராயன் அவர்கள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த போது, நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்கிற தேசிய எழுச்சி தீவிரமாக இருந்த நேரம். அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் பலர் ஒன்றுகூடி நாடு விடுதலை பெற வேண்டும் என்ற ஆர்வத்தினால் தக்க அரசியல் பயிற்சி பெறவேண்டும் என்று எண்ணி கல்லூரி மாணவர் மன்றம் ஒன்று

துவக்கி, அதில் மேடைப் பேச்சுகளை பயின்று வந்தார்கள். அப்போது ஒரு தோழர் திரு. செங்கல்வராயன் அவர்களிடம் அண்ணு அவர்களின் பேச்சாற்றல் பற்றி கூறினர். நன்றாகப் பேசக் கூடியவர், அவரை நீங்கள் அவசியம் சந்திக்கவேண்டும் என்று வலியுறுத்தினர். நண்பர் விருப்பப்படி அண்ணு அவர்களை சந்தித்தார். அந்த சந்திப்பின் மூலம் அறிஞர் அண்ணுவின் கூர்மையான பார்வை, நல்ல பண்புள்ள இயல்பு, அன்புமிக்க நட்பு இவைகளை அண்ணுவிடம் கண்டார், திரு, செங்கல்வராயன். அண்ணுவைக் கண்டதும், அவரை தேச சேவையில் தன்னிடத்திலுள்ள இயக்கத்தில் ஈடுபடுத்த சேரு மாறு பெருமுயற்சி செய்தார். அண்ணு அவர்களோ, செங்கல்வராயன் விருப்பப்படி அந்தக் கல்லூரி மாணவர் மன்றத்தில் சேர்ந்தார். ஆனல் அவர் சார்ந்துள்ள கட்சியில் மட்டும் தன்னை சேர்த்துக் கொள்ளவில்லை. அரசியலில் மாறுபட்ட கருத்துக்கள் ஆழமாக அமைந்துவிட்டன. திரு. செங்கல்வராயன் தன் தலைவர் சத்தியமூர்த்திக்காக டெல்லி சட்டசபை தேர்தலில் கடுமையாக உழைத்தார். அண்ணு நீதிக் கட்சியின் வேட்பாளர் ஆன உயர் திரு. இராமசாமி முதலியார் பக்கம் நின்று ஆதரவு திரட்டினர். அது முதல் இருவரும் அரசியலில் பிரிவுதான், என்ருலும் நட்பில் மட்டும் பிளவு ஏற்படவில்லை.

## 27. தேர்தல் பிரச்சாரம்!

19்ரி-ம் ஆண்டு சென்னை நகரசபைக்கு நடந்த உறுப்பினர் பதவிக்காக அண்ணு அவர்கள் போட்டியிட்டார்கள். பெத்து நாய்க்கன் பேட்டைப் பகுதித்

தொகுதிக்கு அவர் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் நின்ருர், அண்ணு அவர்களை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் தோழர் பாலசுப்ரமணிய முதலியார் என்பவர் நிறுத்தப்பட்டார்.

அண்ணுவைப் போலவே அவரும் எம்.ஏ. பட்டம் பெற்றவர் ஆனுல் அவருக்கு கூட்டங்களில் பேச வராது.

அண்ணு அவர்கள் கூட்டங்களில் பேசும் போது, "நானும் எம்.ஏ. வரை படித்தவன். என்னை எதிர்த்து நிற்பவரும் எம்.ஏ. வரை படித்தவர். நாங்கள் இருவரும் செல்ல விரும்பும் இடம் உங்கள் சார்பாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய நகரசபை. நான் உங்கள் முன் பேசுகிறேன். அவரையும் பேசச் சொல்லி நீங்கள் கேளுங்கள். இருவரில் எவரை அனுப்பலாம், அனுப்பினுல் பலன் ஏற்படும் என்பதைப் பிறகு தீர்மானித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விடுவார்.

காங்கிரஸ் தேர்தல் கூட்டம் நடக்கும் போது பொது மக்கள் தேர்தலுக்கு நிற்கும் தோழர் பாலசுப்ரமணிய முதலியாரை பேசும்படி வற்புறுத்துவார்கள். காங்கிரஸ் தொண்டர்களும் அவரை கொஞ்ச நேரம் பேசும்படி கெஞ்சுவார்கள். "நான் தேர்தலில் வேண்டுமானுலும் நிற்காமல் நின்று விடுகிறேன். ஆனுல் பொதுக் கூட்டங்களில் பேசமட்டும் மாட்டேன்" என்று கூறி விடுவார். அவருக்கு பதிலாக பேசுகிருேம் என்று தோழர்கள் டி. செங்கல்வராயன், கோபால ரத்தினம், சத்திய மூர்த்தி ஆகியோர் முன் வந்து பேசுவார்கள்.

அடுத்து அண்ணு அவர்கள் பேசும் போது, "நகர சபையில்பேசப்போவது பாலசுப்ரமணியமா? அல்லது செங்கல்வராயனு? கோபாலரத்தினமா? என்பதை பொதுமக்களே நீங்கள் தீர்மானியுங்கள்" என்று பதிலிறுப்பார்.

தம்மை எதிர்த்து நின்ற தோழர் பாலசுப்ரமணிய முதலியரைப் பற்றி பேசும் போது அண்ணு அவர்கள் 'என்னுடைய நண்பர் பாலசுப்ரமணியம் நெய்க்கு தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்ற தத்துவத் துறையைப் பற்றி படித்தவர். நான் நெய்யும், தொன்னையும் மக்களுக்கு கிடைக்கச் செய்வது எப்படி என்று ஆராயும் பொருளாதார துறையைப் பற்றி படித்தவன். இருவரில் யார் உங்களுக்கு பயன்படுவோம் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்" என்று குறிப்பிடுவார்.

## 28. நந்தவனமும் நாயும்!

1936-ம் ஆண்டில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டையில் அண்ணுவை எதிர்த்து நின்ற காங்கிரஸ்காரருக்கு ஆதரவாக பலப் பல சொற்பொழிவாளர்கள் வந்தார்கள், அவர்களில் ஒருவர் திரு. வி. கலியாணசுந்தரனர் ஆவார்.

தேர்தல் கூட்டமொன்றில் திரு. வி. க. அவர்கள் சொற்பொழிவாற்றும் பொழுது நந்தவனத்தில் நாயொன்று செத்துக் கிடந்தால் மக்கள் நாயை அகற்றுவரோ! நந்தவனத்தை அழிப்பரோ! நந்தவனத்தை ஒருக்காலும் அழிக்கார்! நாயையே அகற்றுவர். அதுபோல காங்கிரஸில் தீயவர் சிலர்

இருந்தால், தீயவரை அகற்றுவது நன்ரு? அல்லது அதற்காக காங்கிரஸையே அழிப்பது நன்ரு? கூர்ந்து பார்மின்! தீயவரை அகறறுவதன்ருே நல்லவரின் கடமை? நந்தவனத்தை தூய்மைப் படுத்தி, காப்பாற்றுவதால் காங்கிரஸையும் காப்பாற்ற வேண்டும் என்பர்'' என்று கூறிஞர்.

அடுத்து நடைபெற்ற கூட்டத்தில் அண்ணு அவர்கள் பேசும் போது, ''திரு. வி. கலியாணசுந்தரஞர் பேசும் போது நந்தவனத்தில் நாய் செத்துக் கிடந்தால் நாயை அகற்றுவதா? அல்லது நந்தவனத்தை அழிப்பதா? என்று கேட்கிருர். நல்லவர்கள் சுகம் பெறவும், நலிவடைந்தோர் குணம் பெறவுமே நந்தவனம் அமைந்திருக்கிறது. நல்ல மனிதர்கள் நுழைய வேண்டிய நந்தவனத்தில் நாய் நுழையலாமா? நாய் நுழைந்தால் பின் அது நந்தவனமாகுமா? நலிந்தவர்க்கும் நலம் பயக்க வேண்டிய நந்தவனம் நாயை சாகடிக்குமா? நாயும் சாகிற தென்ருல், நந்தவனத்தில் மணம் வீசவில்லை விஷக்காற்று வீசுகிற தென்று தானே பொருள்படும், நாயையும் சாகடிக்கும் விஷக்காற்று வீசும் நந்தவனம் ஊரின் நடுவே இருக்கலாமா? அதனை அழித்து புதிதாக தோற்றுவிப்பது தானே நல்லவர் செய்யும் கடமையாக இருக்க முடியும்'' என்று பதிலுரைத்தார்.

காங்கிரஸ்காரர்கள் வழக்கம் போல் அதற்கு சமாதானம் கூற முன்வர முடியாமல் வேறு முறைகளில் திரும்புவார்களாம்.

## 29. கோவிலுக்கு விளக்கா ?

சென்னை மாநகராட்சி மன்ற தேர்தலில் அண்ணு போட்டியிட்டபோது, பெத்துநாயக்கன் பேட்டை

வட்டாரத்தில் அப்பொழுது கோயில்களுக்கும், மெர்க் குரி விளக்குகள் போடப்பட்டு வந்தன. அந்த நேரத்தில் அண்ணாவுக்கு எதிராகக் காங்கிரஸ்காரர்கள் நோட்டீசு அடித்து வெளியிட்டார்கள். அப்பொழுது நடைபெற்ற 'ஜெய பாரதம்' பத்திரிகையிலும் அண்ணாத்துரைக்கு ஓட்டுப்போட்டால் ஆலயங்களில் விளக்கு எரியாது என்று எழுதியிருந்தார்கள்.

அதற்கு அண்ணா பதிலளிக்கையிலே, 'இந்த நகரத்திலுள்ள சேரிகளெல்லாம் பன்னெடுங்கால மாக இருளில் மூழ்கி இருக்கின்றன. அந்த சேரி களுக்கெல்லாம் விளக்கு போட்ட பிறகு ஏழை எளிய மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் விளக்குப் போட்ட பிறகு, பணமும், மின்சாரமும் மிச்சப்பட் டால் கோயிலுக்கு விளக்கு எரியும். சேரிப் பகுதி களிலே இருட்டிலே மக்கள் வசிக்கிறார்கள், அங்கு நண்டு கடித்தாலும், நட்டுவாய்க்காலி கடித்தாலும் அந்தத் துன்பங்களையெல்லாம் மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கிறது; அவர்களுக்கு விளக்கு போடா மல் ஆண்டவனுக்கு விளக்குப் போட்டால் ஆண்ட வன் முகம் கருக்குமேயொழிய ஒளி பெறாது'' என்று சொன்னார், ''அப்படியானால் உனக்கு ஓட்டு இல்லை என்றார்கள்;'' ''அப்படிப்பட்ட ஓட்டு எனக்கு வேண் டாம்'' என்றார் அண்ணா. அதனால் தேர்தலில் தோற்றார்.

## 30. என். வி. நடராசனை சேரியில் சாப்பிடவைத்தார் !

சென்னையில் அண்ணா அவர்கள் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டபோது ஓட்டு கேட்பதற் காக சேரிக்கு சென்றிருந்தார்கள், அங்கே ஓட்டையும்

கேட்டுவிட்டு அவர்கள் வீட்டிலேயும் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். வரும்போது அவர்களைப் பார்த்து, "இன்று நான் ஓட்டுகேட்க வந்தேன், உங்கள் வீட்டில் சாப்பிட்டேன். நாளை காங்கிரஸ்காரர்கள் வருவார்கள் அவர்களையும் நீங்கள் சாப்பிடச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு வந்தார். அதேபோல், மறுநாள் காங்கிரஸ்காரர்கள் போனார்கள். அப்போது தோழர் என். வி. நடராசன் காங்கிரசில் இருந்தார்; அவரும் அவர்களுடன் போனார். அவர்கள் போய் 'ஓட்டு' கேட்டதும், சாப்பிட வாருங்கள் என்று கையைப் பிடித்துக் கொண்டனர், என்ன செய்வார்கள்? சீனுவாச அய்யர் என்ற ஒரு காங்கிரஸ் பிரமுகர் அவரும், என். வி. நடராசனும் முதல் தடவையாக சேரியில் சாப்பிட்டார்கள். காங்கிரஸ்காரர்களை சேரியில் முதல் தடவையாக சாப்பிட வைத்த பெருமை அண்ணா அவர்களையே சாரும்.

## 31. சன்னப் பொடி கலந்த பேச்சாளர்!

திருச்சி நகரசபை நாடக கொட்டகையில் ஜஸ்டிஸ் கட்சி மாநாடு பெரிய அளவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அம்மாநாட்டிற்கு வந்திருந்த பெருந் தலைவர்கள் தங்களது 'ஆங்கில' பேச்சை தமிழில் எடுத்து கூற மொழி பெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யும்படி அம்மாநாட்டின் ஏற்பாடுகளை கவனித்து வந்த திருச்சி தி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களைக் கேட்டு கொண்டார்கள். முன்னேற்பாடு இல்லாததால் திடீர் என்று இதற்கு ஆள் பிடிப்பது விசுவநாதத்திற்கு பெரும் பிரச்னையாகிவிட்டது. ஆங்கிலம் அறிந்த அனைவரையும் அணுகி கேட்டுக்கொண்டார், மறுத்து

விட்டனர், வழக்கறிஞர் ஒருவரை வேண்டினூர். அவரும் மன்னிக்கும்படி வேண்டினூர், இந்நிலையில் ஒருவர் விசுவநாதத்தினிடம் வந்து "மொழி பெயர்க்க ஆள் வேண்டுமா?" என்ருர். "வேண்டும் யார் அது?" என்ருர் விசுவநாதம். "கல்லூரி மாணவர் ஒருவர் வந்திருக்கிருர். மொழி பெயர்ப்பார்" என்ருர். பெரிய தலைவர்களின் அரசியல் பேச்சுக்களை பள்ளிக் கூடத்துப் பிள்ளைகளைக்கொண்டு மொழி பெயர்ப் பதை விசுவநாதம் விரும்பவில்லை. நிலைமையோ சங் கடமாக இருந்தது. தலைவர்களின் நச்சரிப்பை அவ ரால் தாங்க முடியவில்லை. "மொழி பெயர்க்க ஆள் வந்து விட்டதா?" என்ற கேள்வி தலைவர்களிட மிருந்து வந்த வண்ணமிருந்தது. வேறு வழி இல்லா மல் கி. ஆ. பெ. விசுவநாதம் அந்த மாணவரிடமே சென்று "நன்ருக மொழி பெயர்ப்பீர்களா?" என்ருர். "ஏதோ கொஞ்சம் தெரியும்" என்று அந்த மாணவரி டமிருந்து பதில் வந்தது. அந்த பதிலில் கொஞ்சம் குறும்பும் கலந்திருந்ததை விசுவநாதம் கண்டார்; அதனுல் அவருக்கு சிறிது நம்பிக்கையும் ஏற்பட்டது. மொழி பெயர்க்க அந்த மாணவரை அழைத்தனர். மொழி பெயர்ப்பு முடிந்தவுடன், அந்த மாணவரிடம் சென்று பெயர் என்ன என்று கேட்டார் கி. ஆ. பெ. விசுவநாதம். அண்ணுத்துரை என்ருர் அந்த மாணவர், இதை மாநாட்டினருக்கும் மகிழ்ச்சியுடன் அறிவித் தார் கி. ஆ. பெ. விசுவநாதம். அத்துடன் நில்லாமல் பேச்சாளரிடம் சென்று மொழி பெயர்ப்பு எப்படி? என்று கேட்டார். அதில் சிறிது சன்னப் பொடியும் கலந்திருந்தது எனக் கூறி புன்னகை புரிந்தார் பேச் சாளர். முதலில் கேட்ட வழக்கறிஞரிடம் கி. ஆ. பெ. விசுவநாதம் சென்று, "மொழி பெயர்க்க மறுத்தீர்

களே! பார்த்தீர்களா? என்று பெருமிதத்துடன் கேட்டார். மறுத்ததினுல்தான் ஒரு நல்ல மொழி பெயர்ப்பாளர் கிடைத்தார் எனக் கூறி அவரும் ஒரு சிறு புன்சிரிப்புத் சிரித்தார்.

## 32. போக்கிரியை அடக்கினுர்!

சென்னை பெத்து நாயக்கன் பேட்டையில் நகர சபை தேர்தலுக்கு அண்ணு போட்டியிட்ட போது காங்கிரஸ்காரர்கள் ஒரு போக்கிரிக்குக் கூலி கொடுத்து அண்ணுவின் கூட்டத்தைக் கலைக்க ஏற்பாடு செய்திருந்தார்கள்; அவன் வேலை எப்படியாவது கூட்டத்தை கலைக்க வேண்டுமென்பது தான். அவனும் அங்கு நடு ஓரமாக நின்று கொண்டிருப்பான். அண்ணுவுக்கு தெரியும் அவன் எதற்காக வந்திருக்கிருன் என்று. அப்பொழுதெல்லாம் ஒலி பெருக்கி இல்லாததால் எல்லோருக்கும் கேட்க வேண்டும் என்பதற்காக எல்லா பக்கமும் திரும்பிப் பேசுவது வழக்கம். யார் யார் எப்படி இருக்கிருர்கள். என்னென்ன நோக்கத்தோடு வந்திருக்கிருர்கள் என்பதை அறிந்தபடி ''தோழர்களே; உங்களுடைய வலிவை கேவலம் எட்டணு, பத்தணுவுக்கா விற்க வேண்டும்?'' என்று கேலியாகப் பேசுவார். அண்ணு அப்படிப் பேசியதும் அந்த போக்கிரி ஏதும் செய்யாத நிலையில் சும்மா இருந்து விடுவான். கூட்டத்தை அவன் கலைக்காமல் போனதும் அவர்கள் அவனைப் பார்த்து 'நீயும் அண்ணுத்துரை பேச்சைக் கேட்டுக்கொண்டு இருந்து விட்டாயா?' என்பார்கள். என்ன செய்ய? அவன் ஏதாவது வம்பு பேசினுல் தானே கலகம் செய்யலாம் என்

பான். "அப்படியானுல் உனக்கு நாளையிலிருந்து கூலி யில்லை" என்பார்கள், உடனே அவன் 'கூலிதராவிட்டால் நாளை முதல் உங்கள் கூட்டத்தில் கலகம் செய்வேன்' என்பான். ஆகவே தேர்தல் முடியும் வரை அவனுக்குக் கூலி கொடுத்துக் கொண்டு வந்தார்கள்.

## 33. அண்ணுவின் தீர்க்கதரிசனம்!

தோழர் என். வி. நடராசன் அவர்கள் காங்கிரசில் தீவிரமாக இருந்து பாடுபட்டுக்கொண்டு வரும் போதே அவர் அண்ணுவோடு நெருங்கிய நட்புறவு கொண்டு பழகும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். கட்சிப் பிரச்னை வரும்போது தம்மை ஒரு தீவிர தேசிய வாதியாக காட்டிக்கொள்வதிலும், மற்ற நேரங்களில் அண்ணு அவர்களை எந்த அளவுக்கு எதிர்த்து நிற்க துணிவு கொள்வதிலும் தோழர் என். வி. நடசராசன் அவர்கள் தவறுவதில்லை.

தோழர் என். வி. நடராசன் அவர்களின் உள்ளம், உணர்ச்சி, ஊக்கம் ஆகியவற்றை கண்ட அண்ணு அவர்கள், "நடராசன் நீ என்றைக்கேனும் ஒரு நாள் என் கட்சிக்கு வந்து சேரத்தான் போகிருய் பார்!" என்று நடராசனிடம் அடிக்கடி சொல்லுவார்கள். "அண்ணு! அதுதான் முடியாது! எப்பேர்பட்ட நிலைமை வந்தாலும் நான் தேசியத்தை விட்டு, உங்களைப்போல் ஏகாதிபத்ய தாசனுக மாறமாட்டேன்!" என்று பதலிறுப்பார். "ஏன் இப்பொழுது வீராப்பு பேசுகிருய் போகப் போகப் பார்!" என்று அண்ணு அவர்கள் சிரித்துக்கொண்டே கூறுவார்கள்.

தோழர் நடராசன் அவர்கள் அண்ணுவிடம்

பேசும்போது காங்கிரசு, தாய் மொழி தமிழுக்குத் தான் ஊக்கமளிக்குமே தவிர, இந்தியை ஒருக்காலும் புகுத்தாது. மக்களின் நலத்திற்கு மாறுபாடாக காங்கிரசு ஒருபோதும் நடக்காது" என்று அடிக்கடி கூறுவார். ஆனால் ஆச்சாரியார் அமைச்சரவை 1938இல் இந்தியை கட்டாய பாடமாக புகுத்தியது. அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் நடராசனைப் பார்த்து "இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்கள், "இந்தியை கட்டாய பாடமாக்குவது காங்கிரசின் திட்டமல்ல. எனவே நான் அதனை எதிர்க்கப் போகிறேன்," என்று தோழர் நடராசன் அவர்கள் அதற்கு மறுமொழி பகன்றார்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் மிக மும்முரமாக நடை பெற்றுக் கொண்டிருக்கும்போது, காங்கிரசுப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் தோழர் நடராசனுக்கு மிகச் சங்கடமான நிலை ஏற்பட்டது. காங்கிரசுக்காரர்கள் பலரும் கட்டாய இந்தியை ஆதரித்துப் பேசினர். ஆதரித்துப் பேசினால் அண்ணா வின் கேலி பிறக்கும். எதிர்த்துப் பேசினால் பிற காங்கிரஸ்காரர்களின் சினம் சீறும். இறுதியில், தமக்குப்பட்ட கருத்து வழி நின்று, அண்ணாவின் கேலி மொழிக்கு இடங்கொடாமல், இந்தியை எதிர்த் துப் பேசவே தலைப்பட்டார். இது காங்கிரஸ் வட்டாரத்தில் பெரும் புயலைக் கிளப்பிவிட்டது. இந்தி பிரச்னை பற்றி முடிவெடுக்க மாவட்ட காங் கிரசு செயற்குழு கூட்டம் அவசரமாக கூட்டப் பட்டது.

இந்தி பிரச்னை பற்றி முடிவு எடுக்க காங்கிரசின்

செயற்குழு கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. அதற்கு நடராசன் போயிருக்கிறார் என்ற செய்தியை கேள்வியுற்ற அண்ணா அவர்கள் தம் உற்ற நண்பரான டாக்டர் சி. கணேசன் அவர்களை அவசரமாக அழைத்து. 'இன்று காங்கிரசு செயற்குழு கூட்டம் நடைபெறுகிறது. தோழர் நடராசன் சென்றிருக்கிறார். அவர் இந்தியை எதிர்த்து பேச போகிறார். பெரும்பாலோர் இந்தியை ஆதரித்து தீர்மானம் செய்யப்போகிறார்கள். தோழர் நடராசன் அந்தக் கணமே விலகல் கடிதம் கொடுத்துவிட்டு வெளியேறப் போகிறார். அதற்குள் நீ இன்று மாலை நடைபெறும் நமது இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் 'காங்கிரசை விட்டு வெளியேறிய தோழர் என். வி. நடராசன் அவர்களும் கலந்து கொள்வார்' என்று துண்டு அறிக்கை அச்சடித்து, எடுத்துக் கொண்டு கூட்டம் நடைபெறும் வாயிலண்டை போய் நில். தோழர் நடராசன் விலகல் கடிதம் கொடுத்து விட்டு வெளி வந்தால், துண்டு அறிக்கைகளை அவரிடமும், மற்றவர்களிடமும் கொடு. நிலைமை வேறுவிதமாக இருந்தால் அப்படியே எடுத்துக்கொண்டு வந்து விடு'' என்று சொல்லி அனுப்பினார்.

அண்ணா அவர்கள் முன் கூட்டி நினைத்தவாறே நிகழ்ச்சி நடந்தேறி, தோழர் நடராசன் விலகல் கடிதத்தை தோழர் சத்தியமூர்த்தி அவர்களிடம் கொடுத்துவிட்டு வெளியே வந்தபோது தோழர் கணேசன், நடராசன் அவர்களிடம் துண்டு அறிக்கையை நீட்டினார். நடராசன் துண்டு அறிக்கையைப் பார்த்து திடுக்கிட்டுப் போனார். அண்ணாவின் சூழ்ச்சி என்று எண்ணிக்கொண்டு, வேறு வழியின்றி

அன்று மாலைப் பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொண்டார்.

## 34. பெரியாரை சந்தித்தார்!

1935-ம் ஆண்டில் அண்ணா சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார் பி. ஏ. (ஆனர்ஸ்) பரீட்சை எழுதி முடிவு தெரியாத நேரம் அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் செங்குந்த மித்திர இளைஞர் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டிற்கு தலைமை வகிக்க அண்ணா அழைக்கப் பட்டிருந்தார். திருப்பூருக்கு அருகிலுள்ள காங்கேயம் என்ற ஊரைச் சார்ந்த நடேசன் என்பவர் தான் அண்ணாவை பேச அழைத்தவர். பெரியாரும் இம்மாநாட்டிற்கு அழைக்கப் பட்டிருந்தார். பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்கள் அதற்கு முன்பே அண்ணாவுக்கு பிடித்திருந்தது. அதற்கு, முன்னால் ஈரோட்டிலிருந்து வெளி வந்த "குடி அரசு"ப் பத்திரிகை, அதை எதிர்த்து எழுதி வந்த 'தேசபந்து, 'சுதேசமித்திரன்,' பத்திரிகைகளைப் படித்திருக்கின்றார். ஆனால் பெரியாரை முதன் முதல் சந்தித்தது அந்த மாநாட்டில் தான். அண்ணாவுக்கு பெரியார் மீது பற்றும் பாசமும் ஏற்படக் காரணமாக இருந்தது அந்த மாநாடே. பெரியார் அண்ணாவைப் பார்த்து, என்ன செய்கிறாய் என்று கேட்டார். 'படிக்கிறேன், பரீட்சை எழுதி இருக்கிறேன்'' என்றார் அண்ணா "உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?'' என்றார் பெரியார். இல்லை, உத்தியோகம் பார்க்க விருப்ப மில்லை, பொது வாழ்வில் ஈடுபட விருப்பம்'' என்று பதிலளித்தார் அண்ணா அன்று முதல் பெரியார் அண்ணாவுக்கு தலைவரானார் பெரியா

ருக்கு அண்ணா சுவீகாரப் பிள்ளையானார் பொது வாழ்வில் அன்று முதல். இப்படி 14 வருடங்கள் அவரோடு பழகினார். அந்தத் தொடர்பு 1949-ல் அறுபட்டது பெரியார் செய்து கொண்ட திருமணத்தால்.

## 35. வேலைக்கு அழைத்தார் ஜி. டி. நாயுடு !

ஈரோட்டில் ஈ. வெ. ரா. பெரியார் விடுதலை பத்திரிகை நடத்தி வந்தார். அதன் துணையாசிரியராக அண்ணா இருந்தார்.

ஒரு முறை ஈரோட்டுக்கு வந்த ஜி. டி. நாயுடு, "என் செயலாளராக கோவைக்கு வந்து விடுங்கள்" என்று அண்ணா அவர்களை அழைத்தார். "மாதச் சம்பளம் ரூ. 250ம் ஒரு காரும் பங்களாவும் தருகிறேன்" என்றார்.

ஆனால் அவர் அழைப்பை அண்ணா ஏற்கவில்லை. "மக்களுக்கு தொண்டு செய்யவே பெரியாரிடம் வேலை பார்க்கிறேன்" என்று கூறிவிட்டார்.

அண்ணாவுக்கு பெரியார் அப்போது தந்த சம்பளம் ரூ. 60 மட்டும் தான்.

## 36. பெண்களும் பொதுவுடைமையா ?

அந்தக் காலத்தில் அண்ணா அவர்கள் பெரியாருடன் சுயமரியாதைப் பிரச்சார கூட்டங்களில் பேசும் போது, எதிரிகள் அருவருக்கத்தக்க பல கேள்விகளை கேட்பார்கள். இதற்கெல்லாம் சுடச்சுட பதில் தருவதில் பெரியார் சளைப்பதில்லை. ஒரு முறை திருப்பூரில்

பெரியார் பேசிக் கொண்டிருந்தார். அப்போது பெரியார் தீவிரமாக பொதுவுடைமைப் பிரச்சாரம் செய்தால் அவரிடம் ஒரு கேள்வித்தாளை, காங்கிரசார் கொடுத்தார்கள். அப்பொழுது பெரியாருடன் 3 பெண்களும் மேடையில் அமர்ந்திருந்தார்கள். அந்தக் கேள்வித்தாளில் "மேடையிலிருக்கும் பெண்களை பொதுவுடைமையாக்குவீரா?" என்று குறும்பாக கேட்டிருந்தனர்.

அதற்குப் பெரியார் கொஞ்சமும் தயங்காமல் 'உனக்கு ஆற்றலிருந்தால் உனக்குக் கிடைத்தால் இந்தப் பெண்களைப் பெற்றுக் கொள்' என்று சொன்னார்.

## 37. அரும்பு மீசை வெளுத்தது!

ஈரோடு அருகில் உள்ள சென்னிமலையில் ஒரு பொதுக் கூட்டத்திலே பெரியார் பேசிக்கொண்டிருந்தார். அந்த மேடையில் அண்ணாவும் அமர்ந்துக் கொண்டிருந்தார். அதற்குப் பக்கத்திலே ஒரு ஆள் இருந்து கொண்டு ஒரு சிறுவன் மூலம் சாம்பலை வீசச் செய்தார். அந்தப் பையன் சாம்பலை வீசிக் கொண்டே இருந்தான். பெரியாருக்காவது வெள்ளைத் தாடி; அண்ணாவோ அப்பொழுது நல்ல வாலிபம். அண்ணா மீசையெல்லாம் சாம்பல் பட்டு வெளுத்து விட்டது. சாம்பலைத் தட்டினால், எதிரிகள் கேலி செய்வார்கள்; சாம்பலோடு இருப்பதற்கும் வெட்கமாக இருந்தது. அப்போது அங்கே இருந்த போலீஸ் அதிகாரியிடம் அண்ணா சென்று, அங்கு நடக்கும் அக்கிரமத்தைப் பற்றிச் சொன்னார், அதற்கு அவர், 'நீங்கள்

பேசுவது மக்களுக்குப் பிடிக்க வில்லே; பிடித்திருந்தால் இப்படி செய்ய மாட்டார்கள்; மக்களுக்குப் பிடிக்கும் படியாகப் பேசி, நீங்களே இதைத் தடுத்து விடுங்க ளேன்' என்ருர். அந்தக் காலத்திலே போலீஸ் பாது காப்பு அப்படி இருந்ததைக் கண்டு அண்ணு வருந் திஞர்.

## 38. அண்டப்புளுகு பேச்சு!

அப்போது அரசியலில் மிகச் சூடான பிரச்னே, திலகர் சுய ராஜ்ய நிதி என்ற பேரால் திரட்டப்பட்ட ஒரு கோடி ரூபாய், காங்கிரஸ்காரர்களால் பாழாக்கப் பட்ட பயங்கர சம்பவம்தான். டி. ஏ. வி. நாதன் எனும் அண்ணுவின் நண்பரும், சண்டே அப்சர்வர் ஆசிரியரும் அண்ணுவை 'ஜஸ்டிஸ்' கட்சிக்கு இழுத்துச் சென்றவருமான பி. பாலசுப்ரமணியமும், ஜஸ்டிஸ் இதழில் வெளுத்து வாங்கிஞர்கள், திலகர் சுயராஜ்ய நிதி மோசடி பற்றி.

கடப்பையில், ஜஸ்டிஸ் மாநாடு; அதிலே அண்ணு பேசிஞர்—திலகர் நிதி மோசடி குறித்து—அப்போது அண்ணு 'அரும்பு மீசை'க் காரர்—அதற்கேற்ற வகை யில், ஆங்கிலத்தில்! பெருந்தலேவர்கள், வழக்கப்படி கைக் கடிகாரத்தை பார்த்துக் கொண்டனர்—முகம் சுளித்தபடி அல்ல; ஆங்கிலத்துக்கு மதிப்பளிக்க வேண்டுமல்லவா, அதஞல், கேட்டுக்கொண்டிருந் தனர்.

ஒரு மணி நேரம்—ஆத்திரம் தீரப் பேசி முடித் தார்—அங்கே கூடி இருந்தவர்கள் அனேவரும்

எதிரிகள் போலவும், அவர்கள் யாவரும் திலகர் நிதி மோசடியே நடைபெறவில்லை என்று வாதாடக் கச்சையைக் கட்டிக்கொண்டு நிற்பது போலவும், எண்ணிக்கொண்டு அண்ணா பேசினார்—பழுப்பேறாத மிளகாய் அண்ணா அப்போது, அதனால்.

தேநீர் விருந்துக்காக கலந்து சென்றார்கள்—அண்ணா கற்பனைக் காற்றில் மிதக்கின்றார்—இனிப் பரவாயில்லை—திலகர் நிதி மோசடி பற்றி நாடே சீறி எழும் என்று எண்ணியபடி—ஒரு தலைவர், அண்ணாவின் மதிப்பினைப் பெற்றவர்—முதுகில் அண்ணாவைத் தட்டிக் கொடுத்தபடி, தனியே அழைத்துச்சென்று, "அண்ணாத்துரை! இதென்ன ஏதோ பேசிவிட்டாய்! உன் ஆங்கில நடை அழகை நான் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் நீ பேசிய அண்டப் புளுகுகளை எப்படி ஏற்றுக்கொள்ளுவேன்? இப்படி எதற்காக பேசினாய்?" என்று கேட்டார்.

அண்ணா அவர்களோ நாட்டு மக்களுக்கு ஒரு பேருண்மையை விளக்கிவிட்டோம், காங்கிரஸ் கட்சியினர் செய்த ஒரு கயமைத் தனத்தை அம்பலப் படுத்திவிட்டோம் என்ற பூரிப்பில் 'ராஜ நடை' போட்டுக்கொண்டு செல்கின்றார். இந்தப் பெரியவரோ அண்டப் புளுகு பேசுவது அழகா என்று அண்ணாவைக் கேட்கிறார். அண்ணாவின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்.

அண்ணா, கூச்சத்துடன் ஆனால் துணிவினை தருவித்தபடி, திலகர் நிதி மோசடி பற்றி அவரிடம் விளக்கலானார்.

அண்ணா அவருக்கு 'சாமான்யன்'-பிரமுகருக்கு!!

தொண்டன்-தலைவருக்கு அப்படியா? உண்மையா கவா? ஒரு கோடியா? பாழாகிவிட்டதா? என்று மேலும் மேலும் ஆச்சரியத்தால் தாக்குண்ட நிலையில் கேட்டார் அவர். அண்ணு திகைத்துப் போஞர்.

"அதென்ன பெரியவரே! இதெல்லாம் தெரியாது என்கிறீரே? பத்து கட்டுரைகள் வந்தனவே இது குறித்து நம் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையில் என்ருர் அண்ணு. அமைதியாக அருந்தலைவர் சொன்ஞராம் "நான் ஜஸ்டிஸ் படிப்பதில்லை" என்று.

அவரோ ஜஸ்டிஸ் கட்சியிலே முக்கியஸ்தர்—மற் ருேர்முறை ஜஸ்டிஸ் கட்சி மந்திரிசபை அமைத்திருந் தால், அவர் நிச்சயம் மந்திரியாகி இருப்பார்! அவர், 'ஜஸ்டிஸ் படித்திடும் வழக்கமில்லை என்பதை, பதரு மல் கூறுகிருர். அதைக் கேட்ட அண்ணு ஆச்சரிய மும் ஆயாசமும் அடைந்தார்.

## 39. இடத்துக்கு திண்டாட்டம்!

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பெரியாரும் அண்ணுவும் தஞ்சையிலே ஒரு மாநாடு நடத்த வேண்டுமென்பதற்காகப் பலரை அணுகி இடம் கேட்டார்கள், யாரும் தர முன் வரவில்லை. இடம் வைத்திருந்த ஒவ்வொருவரிடமும் சென்று பண்டாரம் போல கெஞ்சிக் கேட்டார்கள்; இரண்டு நாள் சுற்றியும், தஞ்சை நகரிலே இடம் கிடைக்காத காரணத்தால், கடைசியில் தஞ்சையில் ஒரு ஒதுக்கிட மான பள்ளி அக்கிரகாரம் என்ற இடத்தில் மாநாடு நடத்திஞர்கள்.

## 40. போஸ்டர் ஒட்டினர்

1938-ல் ஆச்சாரியாரின் காங்கிரசு ஆட்சி சென்னையில் நடந்துக் கொண்டிருந்த நேரத்தில் கட்டாய இந்தியை எதிர்த்து தமிழ் நாட்டில் புயல் வீசிக் கொண்டிருந்தது, அன்று அண்ணு அவர்கள் இந்தி எதிர்ப்பு தளபதிகளில் ஒருவராக இருந்ததோடு, சூருவளி பிரச்சாரம் செய்துக் கொண்டிருந்தார். அண்ணு அவர்கள் கூட்டங்களில் பேசி விட்டு நடைபெற இருக்கும் கூட்டங்களைப் பற்றி உடன் உள்ள தோழர்களுடன் கலந்து பேசுவார். அந்தக் காலத்தில் 100 சுவரொட்டிக்கு அச்சுக் கட்டணம் ரூ. 1.50 தான். அதற்கே கையில் காசு இருக்காது. அந்த நூறு தாள்களை ஒட்டுவதற்குக் கட்டணம் ரூ. 1.00 தான் அதற்கும் காசு இருக்காது. 'ஒர்க் மென் பிரசில் கடனுக சுவரொட்டிகளை அனுப்புவார்கள். ஆனுல் அவைகளைச் சுவரில் ஒட்ட வேண்டும்; அதற்கு என்ன செய்வது என்று யோசிப்பார்கள். கூட்டம் முடிந்தவுடன் அண்ணு அவர்கள் நடராசன் போன்றவர்களை அழைத்துக் கொண்டு இரவெல்லாம் விழித்துச் சுவரொட்டிகளை ஒட்டும் பணியினை முடித்து விடுவார். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து பிராட்வேயிலுள்ள தேநீர் கடையில் தேநீர் அருந்தி விட்டு வீடு திரும்புவார்கள்.

## 41. தமிழ்த் தாயின் விலாசம் !

ஒரு முறை அண்ணு கும்பகோணத்தில் பேசிக் கொண்டிருந்த போது, காங்கிரசுக்காரர்கள் அண்ணுவிடம் ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தார்கள்; "தமிழ்த்

தாய் தமிழ்த்தாய் என்கிறீர்களே உங்கள் தமிழ்த்தாய் எங்கே இருக்கிருள்?'' என்று அதில் எழுதி இருந் தனர். அதற்கு அண்ணு ''உங்கள் பாரதத்தாய் எங்கு இருக்கிருளோ, அவளுக்குப் பக்கத்திலேயே தமிழ்த் தாயும் இருக்கிருள்; பாரதத்தாயைக் காட்டிஞல், அதன் பிறகு தமிழ்த்தாயைச் காட்டுகிறேன்'' என்று பதில் சொன்னுர். கேள்வி கேட்டு அண்ணுவைத் திணற அடித்து விடலாம் என்று நினைத்த எதிரிகள் வெட்கித் தலை குனிந்தனர்.

## 42. டிரைவரின் வெறுப்பும் விருப்பும்!

இன்றைக்கு அண்ணு அவர்கள் பொது வாழ்க்கை யில் பலராலும் பாராட்டும் படி சகல சம்பத்துக்கும் உரியவராக விளங்கிஞர். இந்த நிலை அவர் பொது வாழ்க்கையில் நுழைந்த போது இல்லை. பெரியாரின் தொடர்பு ஏற்பட்ட பிறகு சிலகாலம் ஜஸ்டிஸ் கட்சி பிரச்சாரகராக இருந்தார். அப்போது அவர் மாநாடு கூட்டங்களுக்கு சென்ருல் அப்போது அவ ருக்கு ஏற்படும் அனுபமே வேறு விதமாக இருந்தது. முன்பெல்லாம் மாநாடுகளுக்குச் செல்வ தென்ருல் அவருக்காக ரயிலடியில் கார் வந்து காத்து இருக்கும். ரயிலை விட்டு இரங்கியதும் காரில் உட்கார்ந்து கொள் வார். கார் புறப்படும், கார் ஓட்டும் டிரைவர் காங் கிரஸ்காரனுக இருப்பான். காருக்குச் சொந்தமான வர் ஜஸ்டிஸ் கட்சிக் காரனுயிருப்பார். டிரைவருக்கு அண்ணுவை பார்த்தாலே கோபம் அதிகரிக்கும். அதை அவனுடைய முகம் மட்டுமல்ல, காரில் ஏறும் போதும்; மூடும் கதவும் காட்டும்; சத்தம் நன்ருக வெளிப்படுத்தும். ஆனுல் இன்றைய நிலை என்ன? கார்

டிரைவர் அவரது ஆதரவாளராக, கட்சி காருக்கும் சொந்தமானவர், அன்று அண்ணாவை காண சகியாத டிரைவர் இன்று எங்கேயாவது போகும் போது வழி யில் அண்ணாவை பார்த்து விட்டால் காரை உடனே நிறுத்தி எங்கே போக வேண்டும் ஏறுங்கள், கொண்டு போய் விட்டு விட்டுப் போகிறேன் என்று கூறு வார்.

## 43. செருப்புத் தோரணங்களால் வரவேற்ற சிவகங்கைச் சீமை!

ஒருமுறை அண்ணா அவர்களையும் பெரியாரையும் சிவகங்கையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற் காக அவ்வூர் தோழர்கள் அழைத்திருந்தார்கள், பொதுககூட்டத்தில் பேசுவதற்கு முன்பாக ஒரு ஊர்வலம் நடத்த அத்தோழர்கள் முடிவுசெய்து அதன்படி அண்ணா அவர்களையும், பெரியாரையும் ஒரு காரில் உட்காரவைத்து ஊர்வலம் நடத்தினார்கள். ஊர்வலம் கடைவீதி வழியாக சென்றுக்கொண் டிருந்தபோது கடைவீதி இருமருங்கும் செருப்புக்களை தொங்கவிட்டிருந்தார்கள். அண்ணாவும் மற்றவர் களும் அதுகண்டு, அந்த வேலையைச் செய்தவர்களுக் காக வருத்தப்பட்டார்கள். "எத்தனை நாள் சென்று கஷ்டப்பட்டு யார் யாரிடம் சென்று செருப்புக்களைச் சேகரித்து இந்தக் காரியத்தை செய்ய என்னவெல் லாம் கஷ்டப்பட்டார்களோ!" என்று எண்ணி பரிதா பப்பட்டார்கள். செருப்புகளை தோரணங்களாகக் கட்டி வரவேற்றதோடு அவர்கள் நின்று விடவில்லை. இந்த நிகழ்ச்சி நடந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு

அண்ணா ஒருமுறை பேச அழைக்கப்பட்டு போயிருந்தார். அண்ணா அவர்கள் பேசுவதற்காக கூட்டத்தில் மேடையில் எழுந்து நின்றார். அப்போது அண்ணாவுக்கு எதிரிலேயே ஒரு காங்கிரஸ் பிரமுகர் இன்னொரு நாற்காலி போட்டு உட்கார்ந்துகொண்டார். அண்ணா அவர்கள் பேச வாயெடுத்து ஒரு வார்த்தை கூறுவார், உடனே எதிரே நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்த காங்கிரஸ் பிரமுகர் கூச்சல் போட்டு அண்ணா பேச்சை தடைசெய்வாராம் அன்றைய காங்கிரஸ்காரர்கள்.

## 44. புரட்சி வீரர் தயாரித்த புலவு!

ரஷ்ய நாட்டில் லெனின் புரட்சி நடத்திக் கொண்டிருந்த நேரத்தில் லெனினுக்குப் பக்கத்தில் இருந்துக் கொண்டு பேரறிஞர் எம். என். ராய் பணியாற்றியவர் அறிஞர் எம். என். ராயின் அழைப்பின் பேரில் பெரியார் இராமசாமியோடு அண்ணா அவர்கள், வடநாட்டுச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டுச் சில முக்கியமான நகரங்களில் சொற்பொழிவு ஆற்றினார்கள், அப்பொழுது டேராடூனில் அறிஞர் ராயின் விருந்தினராக இருக்கும் வாய்ப்பு அண்ணாவுக்கு ஏற்பட்டது. எம். என். ராயும் அவரது துணைவியார் எலன் ராயும் மகிழ்ச்சியோடு வரவேற்று, அண்ணாவோடும் பெரியாரோடும் பேசி மகிழ்ந்திருந்தார்களாம். அண்ணாவுக்கு அடிக்கடி டீ சாப்பிடுவதில் மிக விருப்பம் என்பதைத் தெரிந்து கொண்ட எலன் ராய், அடிக்கடி டீ போட்டுக்கொண்டு வந்து கொடுப்பார்களாம். எம். என். ராய் சொல்லுவதை குறிப்பதும், மடல்களுக்கு விடை

யிறுப்பதும், டைப் அடிப்பதும் ஆன செயல்களை ராய்க்கு உதவியாக எலன் ராய் அவர்கள் செய்வார்களாம். சமையல் செய்யும் போது, இருவரும் சேர்ந்தே செய்வார்களாம். ராய் அவர்களது எளிய வாழ்வும், சலிப்படையாமல் பேசும் பண்பும், ஆழ்ந்த அறிவும் அன்புச் சொல்லும் அண்ணா உள்ளத்தை பெரிதும் கொள்ளை கொண்டு விட்டன.

ஒரு நாள் எம். என். ராயும், அவர் மணந்துக் கொண்டிருந்த ஜெர்மன் மாது, எலன்ராயும் அண்ணா அவர்களை உபசரிக்கும் முறையில் 'புலவு' செய்து விருந்து வைத்தார்கள். அதைக் கண்ட அண்ணா அவர்கள் எம். என். ராய் அவர்களைப் பார்த்துக் கேட்டார், "இது என்ன சமையற் காரரைக்கொண்டு செய்தீர்களா?" என்று. அதற்கு ராய் அவர்கள் "இல்லை நானே தான் செய்தேன், எப்படி இருக்கிறது" என்று திரும்ப கேட்டார் எம். என். ராய். அதைக் கேட்ட அண்ணா அவர்களோ ஆச்சரியமுற்று "உங்களுக்கு எப்படி இந்த நல்ல புலவு செய்யத்தெரிந்தது?" என்று கேட்டதற்கு எம். என். ராய் கூறினாராம், 'இதென்ன அண்ணாத்துரை, நான் செய்து போடுகின்ற புலவு இவ்வளவு நன்றாக இருக்கிறது என்று நீங்கள் புகழ்வதில் ஆச்சரியம் என்ன? லெனினே புகழ்ந்திருக்கிறார் என்று கூறினாராம் எம். என். ராய்.

## 45. ஜும்மா மசூதியில் துவாரங்கள் ஏன்?

பெரியாரும் அண்ணா அவர்களும், வட நாட்டிற்குச் சென்றிருந்த போது, லாகூரில் உள்ள ஜும்மா மசூதியைப் பார்க்கச் சென்றிருந்தனர் தாஜ் மகா

லுக்கு அடுத்த படியாக அழகு மிகுந்தது என்று கருதப்படுவது ஜும்மா மசூதி. அம்மசூதியைக் காட்டுவதற்காகக் காலஞ் சென்ற பேரறிஞர் எம். என். ராய் அவர்கள் எம். ஏ. பட்டதாரிகளான இரு இளைஞர்களை இவர்களுடன் அனுப்பிவைத்தார். அவ்விருவர்களில் ஒருவர் முகம்மதியர், மற்றொருவர் இந்து. அவர்கள் இருவரும் எம். ஏ. படித்த பட்டதாரிகள். அந்த மசூதியின் உத்திரத்தில் 5, 6, துவாரங்கள் இருந்தன; இந்த துவாரங்கள் ஏன் என்று ஒருவரை அண்ணு கேட்டார் அவர் அண்ணு அவர்களைத் தனியாக அழைத்துச் சென்று "இந்த துவாரம் இருக்குமிடத்தில், மசூதியைக் கட்டிய முகலாயர்கள் நவரத்தினகற்களைப் பதித்திருந்தனர், பின்னர் வந்த இந்து மன்னர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு விட்டனர்" என்று கூறிஞர். அப்படிக் கூறிய அவ்விளைஞர் ஒரு முகமதியர். பிறகு மற்ற இரண்டாவது இளைஞரை அண்ணு அது பற்றிக் கேட்டார், "ஏன் இந்த துவாரங்கள்" என்று அவர் கூறிஞர்.

"முகம்மதிய மன்னர் கட்டிய இந்த மசூதியை, பாதுஷாக்களால் கட்டிக் காக்க முடியவில்லை; அது தான் பாழடைந்து விட்டது" என்று. கூறியவர் ஒரு இந்து. வடக்கில் மத உணர்ச்சி எந்த அளவு வேலை செய்கிறது என்பதை இந்த சம்பவம் அண்ணுவுக்கு அறிவுறுத்தியது.

## 46. சைவம் கலந்தது!

அண்ணுவின் குடும்பத்தினர் புலால் உணவு கொள்வது வழக்கம். ஆனுல் அண்ணு சிறு வயதிலேயே புலால் உணவை ஏற்பதில்லை. பதினைந்தாவது

வயது வரையில் இந்த 'விரதம்' நீடித்தது. இதற்காக அவருக்கு பரிசுகள் கூடக் கிடைத்திருக்கிறது.

பிறகும் அவர் சைவமாகத்தான் இருந்தார். ஒரு சமயம் பெரியார் அவர்களை சந்திக்க அரித்துவாரம் போய்க் கொண்டிருந்தார். பால்கர்ச் என்னும் ரெயில் நிலையத்தில் சாதமும் கூட்டும் கொண்டுவரச் சொன்னார். ஆனால் அவருக்கு வந்து சேர்ந்தவை சாதமும் இறைச்சிக் கூட்டும், அவருக்கோ படும் பசி, பேசாமல் சாப்பிட்டுவிட்டார்; அன்று முதல் அசைவம் ஆகி விட்டார்.

## 47. சின்ன சாமியார் !

பல ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா ஈ. வெ. ரா. பெரியாருடன் வடநாட்டில் சுற்றுப் பயணம் செய்தார். அவர்கள் அரித்துவாரத்துக்கு சென்றார்கள். கங்கை கடலுடன் கலக்கும் புனிதமான இடம், அது.

மாலை நேரங்களில் பெரியார் கங்கை நதி தீரத்தில் உலாவச் செல்வார். வெண்தாடி பளபளக்க, மஞ்சள் நிற சால்வை போர்த்திக் கொண்டு பெரியார் முன்னே செல்வார். கம்பளிக்கோட்டு இல்லாததால் குளிர் தாங்காமல் அண்ணா கைகளை இருகக் கட்டிக்கொண்டு அவர் பின்னாலேயே செல்வார்.

இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள், பெரியார் அவர்களை பெரிய சாமியார் என்றும், அண்ணா அவர்களை சின்ன சாமியார் என்றும் கருதி விட்டார்கள்! பலர் பெரியார் காலில் விழுந்து கும்பிட்

டார்கள், பெரிய சாமியாருக்கு இருக்கின்ற சக்தியில் சீடருக்குக் கொஞ்சமாவது இருக்காதா என்று கருதி; அண்ணா காலிலும் பலர் விழுந்து கும்பிட்டார்களாம்.

அரித்துவாரத்தில் இருந்தவர்கள் இவர்கள் இருவரையும் சாமியார்களாகவே கருதிவிட்டார்கள்.

## 48. இந்து சாயா! முஸ்லீம் சாயா!!

வடநாட்டு சுற்றுப் பயணத்தின்போது ஒரு முறை அண்ணா, பெரியார் மற்றும் சிலரும் அசாமுக்குச் சென்றார்கள். அசாமுக்குச் செல்வதற்கு பிரம்ம புத்திரா நதியைக் கடக்க வேண்டும். நதியைக் கடப்பதற்கு ஒரு படகு இருக்கிறது; அது பெரிய கல்லூரி மணிமண்டபம்போல் இருக்கும்; அதில் இரண்டு தாழ்வாரத்திலும், தேநீர்க் கடை இருக்கிறது; தேநீர் குடிப்பதற்காக ஒரு கடைக்குச் சென்றார்கள். அவர்களுடன் இருந்த மற்றொரு பிரயாணி அண்ணாவின் சட்டையைப் பிடித்து இழுத்து என்ன வேண்டுமென்று கேட்டார்—பேச்சில் அல்ல—எல்லாம் சாடையிலேயே!—இவர்கள் இருப்பதோ ஒரு படகு—அதில் உள்ளவர்களோ எந்த வகையிலும் இவர்களுக்குத் தொடர்பில்லாதவர்கள் —அவர் இவர்களைப் பார்த்து, 'உங்களைப் பார்த்தால் இந்துக்கள் போல் தெரிகிறது; நீங்கள் ஒரு முஸ்லீம் கடையிலா தேநீர் அருந்துவது?' என்றார். 'எங்களுக்குத் தெரியும்—எந்தக் கடையில் தேநீர் அருந்தினால் நன்றாக இருக்கும் என்பது' என்று சொல்லிவிட்டு அந்த முஸ்லீம் கடைக்கு அண்ணா சென்றார்.

அப்போது அந்தத் தேநீர்க் கடைக்காரர், எதிர்க்

க்கடைக்காரரிடம் செல்லுமாறு கூறினார். அண்ணா திகைத்துப் போய், 'ஏன்' என்று கேட்டார். அதற்கு அவர் 'நீங்கள் இந்து; நான் முஸ்லீம்; நான் உங்களுக்குத் தேநீர் தந்தால், நீங்கள் போனபிறகு எதிர்த்தாற் போல் உள்ள இந்து தேநீர் கடைக்காரர் என்னுடன் சண்டைக்கு வருவார்' என்று கூறினார். இதன் மூலமும் வடநாட்டை அறிய அண்ணாக்கு மேலும் வாய்ப்பு ஏற்பட்டது.

## 49. பேசாதே! பெரியார் கண்டிப்பு!

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் அவர்களுடன் அண்ணா வடநாட்டில் சுற்றுப் பயணம் செய்தார். அப்பொழுது லக்னோ பல்கலைக் கழகத்தில், பெரியார் இராமசாமி அவர்கள் தமிழில் பேசினார்; அதை அண்ணா ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கூறினார். மொழி பெயர்த்தான பிறகு அந்த மாணவர் கூட்டத்தின் தலைவராக இருந்தவர், அண்ணா அவர்கள் எம்.ஏ. படித்தவர் என்பதை அறிந்து, அண்ணா அவர்களை சிறிது நேரம் ஆங்கிலத்திலேயே பேசுமாறு கூறினார்.

அண்ணா அவர்கள் பெரியார் இராமசாமியை திரும்பிப் பார்த்தார். பெரியார் 'பேசாதே' என்றார், பேசவில்லை என்றார் அண்ணா. மறுபடியும் அவர்கள் வற்புறுத்தினார்கள்—மீண்டும் பெரியாரைக் கேட்டார் அண்ணா; இல்லை பேசாதே என்றார். மூன்றாம் முறையாக மீண்டும் வலியுறுத்தினார்கள். மூன்றாம் முறை பெரியார் என்னிடம் சொன்னார்—' நான் பேசுவதற்கு வரவில்லை, பெரியாரின் பேச்சை மொழி

பெயர்க்கத்தான் வந்திருக்கிறேன் என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லு' என்ருர். அண்ணு அதன்படியே அம்மாணவர்களுக்கு எடுத்து சொன்ஞர். அந்நாளில் அவ்வளவு அடக்க ஒடுக்கமாக பெரியாரிடம் நடந்து கொண்டார் அண்ணு.

## 50. வயதையும் வருமானத்தையும் கேட்காதே !

**இரயிலிலே பயணம் செய்யும் போதோ, வேறு எந்த நேரத்திலேயாகிலும் சரி—ஆங்கிலேயர்கள் பக்கத்திலேயிருப்பவர்களிடம் (அறிமுகமில்லாமல்) பேசமாட்டார்கள். இன்ஞெருவர் வந்து அறிமுகப்படுத்தி வைத்தால் தான் பேசுவார்கள். வெள்ளேக்காரர் நாட்டில் ஒருவரைப் பார்த்து, உங்கள் சம்பளம் என்ன ? என்று கேட்பதே இழிவாகக் கருதப்படுகிறது.**

ஒரு சமயம் அண்ணு அவர்கள் வடநாடு சென்றிருந்தபோது அவருடன் இன்று சைவ சித்தாந்தத்தில் திளேத்திருப்பவரும், அன்று சுயமரியாதை வீரராக இருந்தவருமான திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம் அவர்களும் சென்றிருந்தார்கள். இவர்களுக்கு டாக்டர் அம்பேத்காரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவருடன் அனேவரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். திரு. கே. எம். பாலசுப்ரமணியம் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களே நோக்கி, "வக்கீல் தொழிலில் உங்களுக்கு மாதம் வருமானம் எவ்வளவு வருகிறது", என்று கேட்டார். இந்தக் கேள்வியைக் கேட்டதும், அம்பேத்காருக்கு தூக்கி வாரிப்போட்டது. ஏனென்ருல் டாக்டர்

அம்பேத்கார் அவர்கள் மேல் நாட்டிலே நெடுநாள் தங்கி மேல் நாட்டுப் பண்பை ஓரளவு கொண்டிருந் தவர். மேல் நாட்டிலே இதைப் போல வருவாயைப் பற்றியும், வயதைப் பற்றியும் எவரும் கேட்கமாட் டார்கள். இது அண்ணா அவர்கள் அறிந்திருந்த ஒன்று. ஆகவே அவர் இப்படி கேட்டது நாகரீக மாகாது என்று வேறு பேச்சுக்களை பேசிக் கொண் டிருந்தார். இது கே. எம். பாலசுப்ரமணியத்துக்கு தெரியவில்லை. எனவே கேட்டுவிட்டார். அப்போது பாலசுப்பிரமணியத்தை பார்த்து டாக்டர் அம்பேத் கார் அவர்கள், "இளைஞரே உமக்கு அந்த கவலை வேண்டாம்," என்று முதுகிலே தட்டிக்கொடுத்து சொன்னார். இது போன்ற நேரங்களில் சாமர்த்திய மாக நடந்து கொள்வதிலும் முறை தெரிந்தவர் அண்ணா அவர்கள்.

## 51. ஜின்னாவை சந்திக்க அண்ணா மறுப்பு!

1940-ம் ஆண்டு பெரியார் வட நாட்டுக்குச் சென் றிருந்த போது! தனி நாடு பிரிவினைக்கு ஆதரவு திரட் டுவதற்காக வட நாட்டில் உள்ள காங்கிரஸ் எதிர்ப்பு இயக்கத் தலைவர்களை சந்தித்து தனது கருத்தைவெளி யிட்டு, அவர்களின் ஆதரவினை பொறுவதற்கும் பெரி யார் முயற்சித்தார். அதன் படி ஜின்னாவை சந்திக்க ஏற்பாடு செய்யப் பட்டது, அந்த சுற்று பயணத்தின் போது பெரியாருடன் அன்று சண்டே அப்சர்வர் பி. பாலசுப்பிரமணியம், டி, எ. வி. நாதன், கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உடன் சென்றிருந்

தனர். ஆனால் ஜின்னாவை சந்திக்க பெரியார் சென்ற போது அண்ணா மட்டும் உடன் செல்ல மறுத்து விட்டு தன் இருப்பிடத்திலேயே தங்கி விட்டார். 'தோழர் ஜின்னாவை ஒரு திடமான முடிவை வைத்துக் கொண்டு பாருங்கள், வெறும் உபச்சாரத்திற்காகப் பார்ப்பதில் பலன் ஏதும் இல்லை' என்று பெரியாரிடம் அண்ணா எடுத்துக் கூறினார். ஆனால் பெரியார் அண்ணா கருத்தை காதில் போட்டுக் கொள்ளாமலேயே ஜின்னாவை சந்தித்தார்.

அந்த சந்திப்பு அண்ணா எண்ணியது போல வெறும் உபசார சந்திப்பாகவே போனது. பெரியாருடன் சென்ற பி. பாலசுப்பிரமணியம், டி. ஏ. வி. நாதன், கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகிய மூவரும் ஜின்னாவை சந்தித்து விட்டு வரும் போது மனக்கசப்புடனே வந்தார்கள். அதே போலத்தான் டாக்டர் பி. ஆர். அம்பேத்காரை சந்திக்கப் போன போதும் பயனற்றுப் போனது.

## 52. கைத்தடியும் செருப்பும் !

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அண்ணா காயல் பட்டினத்துக்குச் சென்றிருந்தார்; அப்பொழுது அவருடன் திருப்பூர் மொய்தினும், மகமது உசேன் நயினார் அவர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் மூவரும் முகம்மது நபி விழாவிலே பேசினார்கள். அந்த விழாவிலே பேசிய ஒருவர், இஸ்லாமிய கதை ஒன்றைச் சொல்லி, குரானுக்கும் அதற்கும் சம்பந்தப் படுத்தி விளக்கினார்.

யாரோ ஒருவர் காட்டு வழி செல்லுகையில்,

தனது செருப்பையும், கைத்தடியையும் மற்ெருரு வருக்குத் தானம் கொடுக்கும்படி ஆண்டவன் கட்டளை யிட்டாராம்; உடனே அவர் தானம் கொடுத்து விட் டாராம்; அதன் பிறகு அவர் காட்டு வழியே செல்கை யில் கள்வரிடம் சிக்கிக் கொண்டாராம்; அந்த சமயத் தில் முன்பு தான் தானம் கொடுத்த கைத்தடியும், செருப்பும் வந்து அவரைக் காப்பாற்றினவாம்.

அந்த கதையைக் கேட்டதும் அண்ணுவுக்கு ஒரு சந்தேகம் வந்தது, தனது அருகிலிருந்த முகம்மது உசேன் நயினுர் அவர்களிடம் இக்கதையைப் பற்றிக் கேட்டார் -- 'இந்தக் கதை குரானில் இருக்கிறதா? முகம்மது நபி இதைச் சொல்லி இருக்கிருரா?' என்று. அதற்கு அவர் — 'அதெல்லாம் ஒன்று மில்லே. குரா னுக்கும் இதற்கும் சம்பந்த மில்லே; பிற்காலத்தில் யாராலோ கட்டிவிடப் பட்ட கட்டுக் கதை இது!' என்ருர்.

அதன் பிறகு அண்ணு பேசுகையில் இதைப் பற் றிக் குறிப்பிட்டு கட்டுக் கதை என்பதை விளக்கி, இப்படிப்பட்ட அற்புதங்களே காட்ட வேண்டுமென் பது ஐயன் கட்டளேயல்ல என்பதையும் எடுத்துச் சொன்ஞர். காயல் பட்டினத்து மக்கள் அதனுலே அண்ணு அவர்களே எதிர்க்கவோ, கண்டிக்கவோ இல்லே; 25 ஆண்டுகளுக்கு முன்பே அங்குள்ள மக்கள் அண்ணு எடுத்துச் சொன்ன உண்மையை உணர்ந் தார்கள்.

## 53. ஏன் முஸ்லீம் ஆகக்கூடாது?

தஞ்சை மாவட்டம் என்ற ஊரில் ஓர் நண்பர். அவரது பெயர் கபீர் உன்னிசா என்பது அவருடைய

பெயர். நீங்கள் இவ்வளவு நன்றாக முகமது நபியை யும், இஸ்லாமியக் கோட்பாடுகளையும் பற்றி பேசு கிறீர்களே; நீங்கள் ஏன் இஸ்லாமிய மதத்தில் சேர்ந்து விடக்கூடாது? என்று அண்ணா அவர்களை கேட் டார்கள்.

அவர்களுக்கு அண்ணா அளித்த பதில் இதுதான்:

' இஸ்லாத்தில் மார்க்க கட்டளை என்றும், திட் டங்கள் என்றும் சில உண்டு. இஸ்லாமிய சமுதாய அமைப்புக்கு ' ஜமாத் ' என்று பெயர். இஸ்லாமிய கோட்பாடுகளை—மார்க்கத் துறையை ஏற்று, அதிலே தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் ஏக தெய்வம் என்ற கொள்கை உடையவர்களாக இருக்க வேண்டும். ஆண்டவனுக்கு உருவம் கொடுத்து, அதற்குப் பூசை செய்து பிறரை ஏமாற்றும் எண்ணம் கூடாது. அந்த வகையிலே பார்த்தாலே நான் இஸ்லாமியன்தான். ஆனால் இஸ்லாமிய ' ஜமாத் ' திலே நான் இல்லை.

நான் இஸ்லாத்திலே சேர்ந்து அதன் பிறகு பாராட்டுவதிலே அருமை பெருமையில்லை. என்வீடு மிக நல்லவீடு என்று நானே எடுத்துச் சொல்வது எப்படி சரியில்லையோ, அதைப்போலத்தான் அது அமையும். என் வீட்டைப்பற்றி நான் பெருமைப் படுவதிலே ஆச்சர்யமில்லை. ' ஜமாத் 'திலே சேரா மலே இஸ்லாத்தின் நன்மைகளை எடுத்துச் சொல்வது தான் பெருமை.

எச். ஜி. வெல்ஸ், ஜார்ஜ் பெர்னாட்ஷா, காந்தி போன்ற பெரியார்கள் முகம்மது நபியைப்பற்றி கூறி யுள்ளார்கள். அந்தப் பெரியார்களெல்லாம் இஸ் லாமியர் அல்லாதவர்களானதால்தான் அவர்கள் பாராட்டியதிலே பெருமை இருக்கிறது. எனவே

ஆயிரத்தோடு ஆயிரத்தொன்று என்று என்னை யும் இஸ்லாமியனாக்குவதிலே பெருமையில்லை" என்றார்.

## 54. பிரயாண அனுபவம்!

பெரியார் ஈ.வெ.ராவும் அண்ணா அவர்களும் சில சமயங்களில் சேர்ந்து பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது உண்டு. அந்த நாட்களில் நெடுந்தூரம் செல்வதாயின் ஒரே முறையாக டிக்கெட் எடுப்பதை விட, வழியில் உள்ள இரயில் நிலையங்களில் இறங்கி இறங்கி டிக்கெட் வாங்கிச் சென்றால் அதனால் சிறி தளவு கட்டணம் மிச்சப்படும். ஈ.வெ.ராவும், அண்ணாவும் ஒரு சமயம் ஈரோட்டிலிருந்து திருச்சிக்கு புறப்பட்டனர், கொஞ்சம் பணம் மிச்சமாகும் என்று எண்ணி கரூர் வரையிலும் இருவருக்கும் டிக்கெட் வாங்கும்படியும், கரூரில் இறங்கி மீண்டும் திருச்சிக்கு டிக்கெட் வாங்கலாம் என்று பெரியார் ஈ.வெ.ரா. கருதினார். ஆனால் திருச்சிக்கே டிக்கெட் வாங்குமாறும், கரூரில் இறங்கி நம்மால் டிக்கெட் வாங்க இயலாமற் போகுமென்றும் அண்ணா கூறினார். ஈ.வெ.ராவோ அதற்கு இசையாமல் கரூர்வரை டிக்கெட் வாங்கினார். கரூர் வந்ததும் அண்ணாவை அனுப்பி டிக்கெட் வாங்கிவரச் சொன்னார் ஈ.வெ.ரா. டிக்கெட் கொடுக்கும் இடத்தில் ஜனநெரிசல் அதிக மாக இருந்ததால் அனைவருக்கும் பின்னால் சென்று கியூ வரிசையில் நின்றார் அண்ணா. நீண்ட நேரம் ஆகியும் அண்ணா வரவில்லை. அங்கிருந்த அனைவரும் டிக்கெட் வாங்கி அண்ணா டிக்கெட் வாங்குவதற்குள் வண்டி

புறப்பட மணி அடித்தாகிவிட்டது. அண்ணா வர வில்லை; வண்டியும் புறப்பட்டு விட்டது என்ற இக் கட்டான நிலைமை ஏற்பட்டவுடன், பெரியார் தமது பெட்டி படுக்கை முதலியவைகளை கீழே தள்ளிவிட்டு தாமும் குதித்து விட்டார். பிறகு அண்ணா டிக்கெட் டுடன் வந்து சேர்ந்தார்.

"ஏன் இவ்வளவு நேரம்? என்ன செய்து கொண் டிருந்தீர்கள்!" என்று பெரியார் சினத்துடன் கேட்டார்.

"இப்பொழுதுதான் டிக்கெட் தந்தார்கள்!" என்று அமைதியுடன் பதில் சொன்னார் அண்ணா.

"இந்த டிக்கெட் வாங்க முடியவில்லை உங்களால்! இப்பொழுது இரயில் போய்விட்டதே, இனி என்ன செய்வது?" என்று அவர் கோபித்துக் கொண் டாராம்.

"நான்தான் அப்பொழுதே சொன்னேனே, திருச்சிக்கு டிக்கெட் வாங்குங்கள் என்று! நீங்கள் தான் கேட்கவில்லை!" என்று அண்ணா கூறினார். பின்னர் வேறு வழி இல்லாமல் கரூரிலேயே தங்கி விட்டு அடுத்த ரயில் வண்டியில் திருச்சிக்குச் சென் றார்கள். அன்று முதல் அண்ணா அவர்களை டிக்கெட் வாங்கும் வேலைக்கு பெரியார் அனுப்புவது கிடை யாதாம்.

## 55. அண்ணா என்ன சாதி?

அண்ணாவைப் பார்ப்பதற்காக பீகாரைச் சேர்ந்த ஒருவர் வந்திருந்தார். அவர் பீகார் அரசியலில் நீண்ட

னாளாகப் பங்கேற்றிருப்பவர். அவர் அண்ணாவைப் பார்த்ததும் கேட்ட முதல் கேள்வி, "நீங்கள் என்ன சாதி?" என்பதுதான். "நான் திராவிடன்" என்றார் அண்ணா. உடனே அவர், "நான் அதைக் கேட்கவில்லை. என்ன சாதி?" என்று மீண்டும் கேட்டார். அண்ணா மீண்டும் "திராவிட இனத்தை சேர்ந்தவன்" என்றார். அவர் சொஞ்சம் தயங்கி, "இங்குள்ள எல்லோரும் திராவிடர்தான், இருந்தாலும் நீங்கள் பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரா? முன்னணிச் சமூகத்தைச் சார்ந்தவரா என அறிய விரும்புகிறேன், நான் கூட எங்கள் மாநிலத்திலிலுள்ள பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன்தான்" என்றார். அதன் பிறகு 'நானும் பிற்பட்ட சமூகத்தில் வந்தவன்தான்' என்றார் அண்ணா.

## 56. சாதியைக் கூற தயக்கம்!

முன்பு எல்லாம் அண்ணா அவர்கள் காஞ்சீபுரத்தில் இருந்து சென்னைக்கு ரயிலில்தான் அடிக்கடி வருவார்கள். அப்படி அவர்கள் சென்னைக்கு வரும்போது, ஒரு டிக்கட் பரிசோதகர் நாள்தோறும், அண்ணா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பல விஷயங்களைப் பற்றிப் பேசுவார். அவர் ஒரு நாள் ஆதி திராவிடர்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார்; ஏன் நீங்கள் அந்த ஜாதிதானே? என்று அண்ணா கேட்டார். 'ஆமாம்' என்று அந்த டிக்கெட் பரிசோதகர் தயங்கிப் பதில் கூறினார். உடனே அண்ணா அவர்கள், 'ஏனையா, உங்கள் ஜாதியை வெளியே சொல்ல வெட்கப்படுகிறீர்?'

என்று அண்ணா கேட்டதற்கு அவர் சொன்னார். "என்ன சார் செய்வது? ஒரு சிலர் தவறாக நினைத்துக் கொள்வார்கள் அதனால்தான்" என்றாராம் அந்த டிக்கெட் பரிசோதகர்.

## 57. ஜின்னாவின் விருந்தில் அண்ணா!

பூகோளப் படத்தில் புதியதோர் நாட்டின் பெயரினைப் பொறித்த மாவீரன் ஜனாப் ஜின்னா அவர்கள் ஒருமுறை சென்னையில் விருந்தொன்றிற்கு வந்திருந்தார். அந்த விருந்தில் முத்தையா செட்டியார், முத்தையா முதலியார், பெரியார், அண்ணா போன்ற 23 பேர் மட்டும் இருந்தனர். அப்போது ஜின்னா அவர்கள் பெரியாரிடம் திராவிட பிரிவினைப் பற்றிக் கேட்டபோது, பெரியார் அவர்கள் கூறினார்கள்— 'உங்கள் முஸ்லீம் இனத்தைப்போல் அல்ல, இங்கு உள்ளவர்கள், இங்கே கூடி இருக்கின்ற 23 பேர்களும் 23 வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள். முஸ்லீம்களைப் போல, கராச்சியில் இருந்து, 'பாக்கிஸ்தான் ஜிந்தா பாத்' என்றால், தென் கோடியிலிருக்கும் முஸ்லீமும் 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்று கூறுவார்கள்; அந்த ஒற்றுமை இங்குள்ளவர்களிடம் இல்லை; எனவேதான், திராவிடநாடு இன்னும் அமையாமலிருக்கிறது என்று ஜின்னாவுக்கு விளக்கமளித்தார் பெரியார்.

## 58. படாடோபத்திற்குப் பணியாமை!

நீதிக் கட்சியினர் கோலோச்சிய அந்த நாட்களில், நீதிக் கட்சி தலைவர்கள் மக்களோடு மக்களாய்ப்

பழகும் எளிய வாழ்வை ஏற்படுத்திக் கொள்ளாமல், பிறர் கண்டு தங்களை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மிக்க ஆடம்பரமான முறைகளை விரும்பி மேற்கொண்டிருந்தனர். நீதிக் கட்சி நாளடைவில் செல்வாக்கு அற்றுப்போனதற்கு அதுவும் ஒரு காரணம் என்று தான் சொல்லவேண்டும்.

நீதிக் கட்சித் தலைவர்களான பொப்பிலி அரசர், சர். கே. வி. ரெட்டி, ஏ. இராமசாமி முதலியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், குமார இராசா முத்தையா செட்டியார் போன்றவர்கள் சென்னையை விட்டு எப்போது வெளியூருக்குக் கிளம்பினுலும், வெளியூரிலிருந்து சென்னைக்கு எப்பொழுது திரும்பினுலும் கட்சியின் பிற தலைர்களும் தொண்டர்களும், நண்பர்களும் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று, செல்லும் தலைவர்களுக்கு மாலை சூட்டி வழியனுப்புவதும், வரும் தலைவர்களுக்கு மாலையணிவித்து வரவேற்பதும் அக்காலத்தில் கையாண்ட ஆடம்பரங்களிலே ஒருவகையைச் சார்ந்தனவாகும்.

இந்த முறை பெரியார் அவர்கள் நீதிக் கட்சித் தலைவர் பதவி ஏற்ற சிறிது நாட்கள் வரையிலும் கூட நடைபெற்றது. சேலம் மாநாட்டிற்குச் சிறிது நாட்களுக்கு முன்பு பெரியார் அவர்கள் சென்னை வந்து விட்டு, மத்திய புகைவண்டி நிலையத்திலிருந்து (சென்ட்ரல் ஸ்டேஷன்) ஈரோட்டுக்குப் புறப்பட்டார்கள், அப்பொழுது வழக்கப்படி பெரியாரை வழியனுப்பக் குமார ராசா முத்தையா செட்டியார் போன்ற பலரும் புகைவண்டி நிலையத்திற்கு வந்திருந்தார்கள். அண்ணு அவர்களும் பெரியாரைப் பார்த்து விட்டு வழியனுப்பிவைக்க வந்திருந்தார்கள்.

அண்ணா அவர்கள் பெரியார் அருகில் நின்று ஏதோ உரையாடிக் கொண்டிருக்கும்போது, அப்பால் நின்று வேறு யாரோடோ பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பிய குமாரராசா அவர்கள், அண்ணா அவர்களிடம் நெருங்கி, "என்ன அண்ணாத்துரை? சௌக்கியமா?...... இப்படி வாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அண்ணா அவர்கள் தோளின் மீது கையைப் போட்டுத் தனியே இரகசியம் பேச அழைப்பது போல அழைத்தார். பலர் குழுமியிருக்கும்போது இப்படிப்பட்ட ஆடம்பர நடிப்பை நடித்துக் காட்டுவது படாடோபக்காரர்களிடத்தில் பொதுவாகக் காணக்கூடியதேயாகும். அத்தகைய ஆடம்பர நடிப்பு குமாரராசாவிடத்தில் காணப்பட்டதில் வியப்பில்லை, அது அவரது ஆடம்பர வாழ்க்கைக்கு ஏற்ற இயல்பு. அத்தகைய படாடோபப் பசப்பு நடிப்புக்களுக்கும், பசப்பு மொழிகளுக்கும் மதிப்புத்தர விரும்பாத அண்ணா அவர்கள், உடனே தம் தோளைச் சுற்றிப் போட்டிருந்த குமாரராசா அவர்களின் கையை மெல்ல எடுத்துக் கீழே விட்டு, "நான் ஐயாவோடு பேச வேண்டியிருக்கிறது. இப்பொழுது உங்களோடு பேசநேரமில்லை. பிறகு உங்களைப் பார்க்கிறேன்!......" என்று சொல்லிவிட்டு பெரியார் நின்றுகொண்டிருந்த பக்கம் திரும்பிக் கொண்டார்கள்.

அண்ணா அவர்களிடம் இருந்து இப்படிப்பட்ட விடைவரும் என்று குமாரராசா எதிர்பார்க்கவே இல்லை. அவருடைய முகம் வெட்கத்தைத் தாங்காமல் சுருங்கிக் கறுத்து விட்டது,

குமாரராசா கூப்பிட்டு அண்ணா போக மறுக்

கிறுரே என்பதைக் கண்ட பெரியார் அவர்களுக்கு, உள்ளுக்குள்ளே அடங்காத சினம் பொங்கிற்று. " குமாரராசா என்ன நினைத்துக் கொள்வார்களோ ? ஏது நினைத்துக் கொள்வார்களோ ? ராசாவின் தயவு இனி இல்லாமல் போய்விடுமோ ?" என்பன போன்ற அச்சங்கள் அவரது உள்ளத்தைக் குடைந்தன.

பெரியார் அவர்கள் அண்ணு மீது எரிந்து விழுந்து " ராசா கூப்பிடுகிறுர் ! போங்களேன் ! ... என்னிடத்தில் என்ன பேசவேண்டியிருக்கிறது !......' என்று கண்டிப்புக் குரலில் பேசினுர்கள்.

அண்ணு அவர்கள், குமாரராசாவைப் பொருட்படுத்தாதவர் போல் பெரியார் அவர்கள் முன்னிலையில் நின்றுக்கொண்டு "நான் அவரிடம் பேச வேண்டியது இப்பொழுது ஒன்றுமில்லை !..." என்று கூறி விட்டு வேறு பக்கம் எதையோ பார்ப்பதைப் போல் பார்வையைச் செலுத்தினுர்களாம்.

## 59. வருத்தம் தெரிவிக்க மறுப்பு !

லார்டு ரெங்கின் என்பவர் சென்னை மாநில ஆளுநராக பதவி ஏற்றிருந்த சமயம். அவர் ஆளுந் திறமையற்றவர் என்பது அண்ணுவின் கணிப்பு. அவருடைய ஆற்றலற்ற தன்மைகளை விளக்கி, விடுதலை ஏட்டில் தலையங்கமே எழுதிவிட்டார் அண்ணு. அது எல்லோரையுமே திடுக்கிட வைத்தது.

நீதிக் கட்சி தலைவர்களில் பலர் வெள்ளையர்களோடு இணங்கி நடப்பது நல்லது என்று நம்பிக் கொண்டிருந்த காலம் அது. அண்ணுவோ தம் கட்சி

யினரின் கண்டனத்துக்கு ஆளாக நேரிடுமே, ஆளு நரின் தண்டனைக்கு இலக்காக நேருமே என்றெல்லாம் அஞ்சாமல் எழுதிவிட்டார் தலையங்கத்தை. அது ஆளுநரின் பார்வைக்கும் சென்று விட்டது. உடனே ஆளுநரின் மாளிகையிலிருந்து சர். ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்களுக்கு தாக்கீது ஒன்று வந்தது.

அந்த தலையங்கத்திற்கு வருத்தம் தெரிவித்து அதே விடுதலையில் எழுதியாக வேண்டும்— என்று அதில் கண்டித்திருந்தது. அத்தாக்கீதை எடுத்துக் கொண்டு நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு. பன்னீர்செல்வம் அவர்கள், அதே கட்சியின் சார்பில் வெளிவரும் 'விடுதலை' ஏட்டின் துணையாசிரி யராம் அண்ணாவை சந்திக்க ஈரோடு சென்றார். ஆளு நரின் தாக்கீதை காட்டி, தலையங்கம் தீட்டியதற்கு வருந்துவதாக 'விடுதலை'யில் எழுதுமாறு அண்ணாவை மிக்க அன்போடு கேட்டுக் கொண்டார். ஆனால், துணிவிற்கும், தன்மான உணர்வுக்கும் பேர்பெற்ற அண்ணாவோ,

'லார்டு ரெங்கினைப் பற்றி 'விடுதலை'யில் எழுதியது எழுதியதுதான் என் கையால் அதற்கு வருத்தம் தெரிவித்து எழுத முடியாது"—என்று கண்டிப்பாக கூறிவிட்டார்.

திரு. பன்னீர்செல்வம் அவர்கள் திகைப்பில் ஆழ்ந்தார். அண்ணாவின் குருவான 'பெரியாரை' பார்த்து முறையிட்டாவது தாம் வந்த நோக்கத்தை நிறைவேற்றி விடலாம் என்று நினைத்தார் அவர். ஆனால் பெரியாரோ, அண்ணாவின் கருத்தே சரி என்று அடித்துப் பேசிவிட்டார். திரு. பன்னீர்செல்வம் அவர்களின் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

அதன் பின்னர் பலநாட்கள் சென்று அண்ணாவை சந்தித்த பன்னீர்செல்வம் அவர்கள்,

" ...ரெங்கினைப் பற்றி எழுதியதற்கு வருத்தம் தெரிவித்து எழுத முடியாது என்று தாங்கள் கூறியது மிக மிகச் சரி, ரெங்கின் நிருவாக திறமையற்றவர் என்று நீங்கள் முன்கூட்டியே மதிப்பிட்டு எழுதியது மிகவும் பொருத்தம் தான்!"

—என்று அண்ணாவின் கணிப்பு ஆற்றலை மிகுதியாகப் புகழ்ந்தாராம்.

## 60. கவர்னர் கதி கலங்கினார்!

1939-ம் ஆண்டில் சக்கரவர்த்தி சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் இருந்த காங்கிரசு மந்திரி சபை ராஜினாமா செய்தவுடன் நீதிக்கட்சியை பதவியேற்குமாறு கவர்னர் அழைத்தார். அப்பொழுது நீதிக்கட்சிக்கு பெரியார் தலைவராகவும், ராஜாசர் முத்தையா செட்டியார் துணைத்தலைவராகவும் இருந்தார்கள், ராஜா சர். முத்தையா செட்டியாருக்கு பதவியேற்க விருப்பம், பெரியாருக்கு விருப்ப மில்லை. ஆகையினால் உடனே பெரியார் அவர்களுக்குத் தந்தி கொடுத்து வரவழைத்து தமது அடையாறு மாளிகையில் நீதிக்கட்சியின் நிர்வாகக்கமிட்டியைக் கூட்டினார். அன்று அடையாறு மாளிகையில் பெரிய விருந்து நடைபெற்றது. ஆந்திரம், கேரளத்தில் இருந்தெல்லாம் தலைவர்கள் வந்திருந்தார்கள். அப்பொழுது அண்ணா அவர்கள் முத்தையா செட்டியாரிடம்,

'சோறு போட்டு எங்களை ஏமாற்றி விடலாம் என்று பார்க்கிறீர்கள். இன்னும் கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்' என்றார். பின்னர் விருந்து முடிந்ததும் கூட்டம் துவங்கியது. 'ஆச்சாரியார் பதவியை விட்டு விலகியதும் நாம் பதவி ஏற்க வேண்டும்' என்று ஓர் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. உடனே அண்ணா அவர்கள், "வெள்ளை ஏகாதிபத்யம் இந்த நாட்டை விட்டு அகன்றே ஆகவேண்டும், சுதந்திரம் எப்படி அமைய வேண்டும் என்பதில் வேண்டுமானால் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் இடைக்கால அமைச்சரவையை ஏற்கக் கூடாது" என்ற கருத்துப் பட, அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று வற்புறுத்தினார், அப்பொழுது ராஜா சர். முத்தையா அவர்களின் "பதவியை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்" என்ற தீர்மானத்திற்கு ஆதரவாக பெரும் எண்ணிக்கை பலம் இருந்தது. அண்ணா அவர்களுடன் ஆதரவாக ஒரு நான்கைந்து பேர்கள் மட்டும் தான் இருந்தனர். அந்தக் கூட்டத்தில் சர். ஏ. டி. பன்னீர்செல்வம், டபிள்யூ. பி. ஏ. சௌந்தர பாண்டியன் ஆகியோரும் இருந்தனர். இரு தரப்பினர்க்கும் ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. இதைக் கண்ட பெரியார் அவர்கள், 'அண்ணாத்துரை சொல்வதை நானே ஒரு தீர்மானமாககொண்டு வருகிறேன்', என்று சொல்லி 'பதவி ஏற்கக் கூடாது' என்கிற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார், பெரியார் தீர்மானம் நிறைவேறியது. ராஜா. சர் முத்தையா செட்டியார் ஆசையில் மண் விழுந்தது. இப்படி ஒரு முடிவுக்கு வருவார்கள் என்பதை எதிர்பார்க்காத கவர்னரே கதி கலங்கினார்!

## 61. எழுதியது எழுதியதுதான்!

*1939-ஆம் ஆண்டில் அண்ணா 'விடுதலை'யின் ஆசிரியர் பொறுப்பில் இருந்த போது ஒரு தலையங்கம் தீட்டினார். தலையங்கத்தை பெரியார் பார்ப்பது வழக்கம் அதில் திரு. குமார ராஜா (இன்றைய ராஜாசர்) அவர்களைத் தாக்கி இரண்டு வரிகள் இருந்தன. அந்த இரண்டு வரிகளை நீக்கி அச்சிட்டு விடுமாறு செய்தி அனுப்பினார் பெரியார். அண்ணாவின் உள்ளம் அன்பும் பாசமும் பற்றும் கொண்டது. ஆனால் அதே சமயத்தில் அது எதைக் கண்டும் அஞ்சாத எஃகு உள்ளம் படைத்ததாய் அமைந்தது. எனவே அண்ணாவின் உள்ளம் பேனாவை வளைக்கவோ, கொள்கையை விட்டுக் கொடுக்கவோ தயங்கியது. தந்தைப் பாசம் போன்று பெரியாரிடம் வைத்த அந்த பாசத்தையும் பொருட் படுத்தாமல் அந்த இரண்டு வரிகளோடு தான் தலையங்கம் வெளி வர வேண்டும், இல்லையேல் நான் வெளியேறுகிறேன் என்று சொல்லி செய்தி அனுப்பி விட்டார். அப்பொழுது அன்று அவர்கள் சிந்தாதிரிப் பேட்டை சாமி பண்டாரம் தெருவில் குடியிருந்தார்கள், உடனே பெரியார் அண்ணாவின் இல்லம் வந்து கேட்டுக்கொண்டும் மறுத்து விட்டார். உள்ளத்தில் உள்ள உணர்ச்சிகளை வெளியிடும் உண்மையான பேனா வீரர் அண்ணா என்பதை அதன் மூலம் நிலை நாட்டினார்.*

## 62. ரிப்பன் மண்டபத்து மகான்கள்!

*ஈரோட்டிலே விடுதலைக் காரியாலயத்தில் அண்ணா வேலை பார்த்துக் கொண்டிருந்த நேரம் அது. அப்*

போது விடுதலையில் சென்னை கார்ப்பரேஷன் பற்றி ஒரு தலையங்கம் தீட்டினார். "ரிப்பன் மண்டபத்து மகான்கள்" என்பது அதன் தலைப்பு. விடுதலையில் தலையங்கக் கட்டுரை வெளி வந்த அன்று மாலை அண்ணா அவர்கள் ஈரோட்டிலே பெரியாரின் மூன்றடுக்கு மாளிகையில், கடைசி மாடியில் உலாவிக் கொண்டிருந்த நேரத்தில் பெரியார் மூன்று மாடிகளையும் கஷ்டத்துடன் படியேறி கடந்து வந்து அண்ணா முதுகைத் தட்டி, "அண்ணாத்துரை, உன் தலையங்கம் ரொம்ப நன்றாய் இருந்தது. எனக்கு மிகவும் சந்தோஷம்" என்று வெகுவாகப் பாராட்டினார். இதைக் கேட்ட அண்ணா "இதற்காக ஏன் இவ்வளவு கஷ்டப் பட்டு மாடி ஏறி வர வேண்டும்? நான் சாப்பிட கீழே வரும் போது, சிரமமின்றிக் கூறியிருக்கலாமே இதனை" என்று தெரிவித்தார். அதற்குப் பெரியார், "என் மனதில் நல்லெண்ணம் தோன்றியது. சந்தோஷப்பட்டேன். அதை உடனே கூறி விடவேண்டுமென்று நினைத்தேன். ஏனென்றால் நான் பிறரைப் புகழ்ந்து கூறி பழக்கப்பட்டவனல்ல, ஆகவே உடனே சொல்லி விடவேண்டுமென்று வந்து சொல்லி விட்டேன்." என்று சொன்னாராம்.

## 63. முடிவுபெறாத விவாதம்!

பெரியார் அவர்களிடம் பத்திரிகை ஆசிரியர்களாக இருந்தவர்கள் ஏராளமானவர்கள். தங்கப் பெருமாள் பிள்ளை, நகர தூதன் மணவை ரெ. திருமலைசாமி, சாரநாதன், துடுப்பதி பண்டித முத்துசாமி, வெங்கடாசலம், இப்படிப்பட்டவர்கள் அண்ணா

ஆசிரியராக வருவதற்கு முன் இருந்தார்கள். அவர்களெல்லாம் தலையங்கம் எழுதுவதாக இருந்தாலும், எப்படிப்பட்ட கட்டுரைகள், செய்திகள் எழுதுவதென்பதையும் பெரியார் அவர்களிடம் கேட்டே போடவேண்டும், அது தான் பெரியாரிடம் பழகியவர்களின் வழக்கமாக இருந்து வந்தது. அந்த முறையை மாற்றியமைத்து ஆசிரியர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தந்தவர் அண்ணு ஆவார்கள்.

பெரியாரின் விடுதலைப் பத்திரிகையில் அண்ணு ஆசிரியராக இருந்த போது அவருக்கு முழுச் சுதந்திரம் உண்டு, பல சமயங்களில் பெரியாருக்குப் பிடிக்காக செய்திகளைக் கூட அண்ணு எழுதினர்.

ஒரு முறை 'இழந்த காதல்' என்ற நாடகத்துக்கு அண்ணு தீட்டிய மிக நீண்ட விமர்சனம் பெரியாருக்கு பிடிக்கவில்லை. அண்ணுவை அழைத்து ஒரு இரவு முழுவதும் 'காதலை'ப் பற்றி விவாதித்தார். காதல் ஒரு போலித்தனமானது என்பது பெரியாரின் வாதம்; காமத்துக்கு மறு பெயர் காதல் என்று ஒரே பிடிவாதமாக இருந்தார். உயர்ந்த காதல் தூய்மையானது—புனிதமானது என்று அண்ணு வாதாடினர், வாதம் முடிவு பெருமலே முடிந்தது.

## 64. பெரியார் பாராட்டிய அண்ணுவின் தலையங்கம்!

அண்ணு பத்திரிகைக்கு பெரும்பாலும் இரவிலே தான் எழுதுவார். இரவில் வரும் பத்திரிகைகளை ஒரு முறை புறட்டிவிட்டு பதினைந்து நிமிடத்தில் தலையங்

கம் எழுதும் ஆற்றல் படைத்தவர் அண்ணா. எழுதி முடித்த பிறகு ஏறத்தாழ விடியற்காலம் ஆறு மணிக்குப் படுக்கைக்குப் போவார்.

ஒருநாள் காலை ஒன்பது மணி. பெரியார் தினசரிகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். செய்திகளைப் படித்து வந்த அவர் பரபரப்போடு வெளியாகி வந்த ஒரு செய்தியை இரண்டு முறைப் படித்தார். அவர் கண்கள் சிவந்தன.

முகம் கடுகடுவென்று மாறிவிட்டது. அங்கிருந்த ஒருவரை அழைத்து "எங்கே அண்ணாத்துரை! இதைப் பற்றி ஒரு தலையங்கம் இன்றைக்கு எழுதச் சொல்லு" என்று அந்த செய்தி வந்த பத்திரிகையைச் கொடுத்தனுப்பினார். தலையங்கம் எழுதிக் கொடுத்து விட்டார் என்ற பதில் அண்ணாவிடம் இருந்து வந்தது.

என்ன வெங்காயம் எழுதினார் ? என்று பெரியார் கேட்டார்.

தெரியாது! அவர் எழுதிக் கொடுத்தது தான் தெரியும்.

"கூப்பிடு அண்ணாத்துரையை".

"அவர் தூங்குகிறார்".

வெங்காயம்! - எழுப்பி வாயேன், ஆத்திரம் பொங்கியது பெரியாருக்கு.

அவர் போய் அண்ணாவை அழைத்து வந்தார்.

சாஸ்திரி சொல்லி இருப்பதைப் பார்த்தீர்களா?

பார்த்தேன்.

அதையல்லவா தலையங்கம் எழுத வேண்டும்?

'அதைத்தானே தலையங்கம் எழுதியிருக்கிறேன்' என்றார் அண்ணா.

அண்ணா தலையங்கத்தை எடுத்துவரச் சொல்லி படித்துக் காட்டினார்.

''ரொம்ப நல்லா இருக்கு; நான் நினைத்ததை அப்படியே எழுதி இருக்கிறீர்கள்'' என்று பெரியார் அண்ணாவை உளமாரப் பாராட்டினார்.

## 65. நண்பர்களின் கோபம்!

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடன் நெருங்கிப் பழகிய அன்பர்களில் பலர் வெளியேறிக் கொண்டேயிருப்பது வழக்கம். சுயமரியாதை இயக்கம் தோன்றிய நாளிலிருந்து இது தொடர்ந்து நடப்பது வாடிக்கை. பெரியாரை விட்டுப் பிரிந்தவர்களை வெறுத்தும், பெரியாரை ஆதரித்தும் வந்தவர்கள் அணி ஒன்று அவ்வப்போது தோன்றிக் கொண்டிருக்கும். அதன்படி ஒருமுறை திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் பெரியாரை விட்டு விலகினார். காலியான அவருடைய இடமும் உடனே நிரப்பப்பட்டது. செயலாளர் வேலைக்கு அண்ணாத்துரையும், பொருள் வசூலுக்கு பொன்னம்பலனாரும், சமாதானம் சொல்ல சாமி சிதம்பரனாரும் அமர்த்தப்பட்டனர். பின்னர் அவர்கள் மூவரும் பெரியாரிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்ததால் வழக்கப்படி அவர்களின் விலகும் முறையும் வந்து விட்டது; ஒரே அறிக்கையில் மூவரும் கையெழுத்திட்டு பெரியாரிடத்திலிருந்தும், விடுதலையிலிருந்

தும் விடுதலை பெற்றுக் கொண்டனர். இதில் இம் மூவருக்காக முன்னணியில் நின்றவர் அண்ணா அவர்கள் தான், பின்னால் நிலைமையை உணர்ந்து சீர் தூக்கிப் பார்த்து மற்ற இருவரையும் விட்டு விட்டு தான் மட்டும் பெரியாருடன் சேர்ந்து கொண்டார் அண்ணா. இதைக்கண்டித்து மற்ற இருவரும் 'மூவரும் சேர்ந்து ஒன்றாக கையெழுத்திட்டு அறிக்கை விட்டு வெளியேறிய பிறகு, அண்ணாத்துரை திரும்பவும் பெரியாரோடு சேர்ந்த பொழுது எங்களைக் கலந்திருக்க வேண்டும்'' என்று குறைபட்டுக் கொண்டிருந்தார்கள்.

## 66. கோயிலில் நுழைய தடை!

கொச்சிக்கு ஒரு முறை அண்ணாவும் குத்தூசி குருசாமியும் சென்றிருந்தார்கள். அப்போது அங்கு காலம் சென்ற சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் திவானாக இருந்தார்—இவர்கள் போனபோது ஆர். கே. சண்முகம் அவர்கள் ஊரில் இல்லாவிடினும் இவர்களுக்கு வேண்டிய வசதிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் போயிருந்தார். அண்ணாவும் குத்தூசி குருசாமியும் சுற்றிப்பார்த்து வருவதற்காக ஒரு கோவிலுக்குச் சென்று இருந்தார்கள். அங்கு இவர்களை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. 'நாங்கள் யார் தெரியுமா—திவான் வீட்டிலிருந்து வருபவர்கள்' என்று கூறினார்கள். அதற்கு அங்கிருந்த கோவில் நிர்வாகி 'அதனால்தான் நீங்கள் கோவிலுக்குள் வரக்கூடாது என்கிறோம்; திவான் ஒரு செட்டியார்; அவர் வகையினரான செட்டியார்கள் இந்த கோவிலுக்குள் வரக்கூடாது' என்று கூறி

ஞர்கள். உடனே இவர்கள் இருவரும் 'நாங்கள் செட்டியார்களல்ல; அங்கு விருந்தாளிகளாய் வந்திருப்பவர்கள்; அவ்வளவுதான்' என்ருர்கள். பின்னர் தான் இருவர்களையும் அந்தக் கோவிலுக்குள் அனுமதித்தார்களாம்.

## 67. ஆகஸ்ட் புரட்சியில் அண்ணு !

திராவிடர் கழகம் தோன்றுவதற்கு முன்பு அண்ணு பெரியாரின் படை வீரர்களில் பிரதான வீரராக விளங்கினர். அப்போது 1942-ம் ஆண்டு ஆகஸ்டு புரட்சி நாடெங்கும் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருந்தது. வெள்ளையன் வெளியேற வேண்டும்—நாடு விடுதலைப் பெற வேண்டும் என்கிற ஆசை அப்போது அண்ணுவுக்கு படிப்படியாக தலை தூக்கிக் கொண்டிருந்தது. அப்போது நமது தோழர்களும் இந்த ஆகஸ்ட் கிளர்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்று அண்ணு வற்புறுத்தினர். ஆனுல் பெரியார் இந்த யோசனையை ஏற்க மறுத்து விட்டார் வெள்ளைக் காரனுவது இந்த நாட்டை விட்டுப் போகிறதாவது, எம்புட்டு எம்புட்டு கட்டிடத்தை பீச் ரோடில் கட்டிப் போட்டிருக்கான், அதை யெல்லாம் விட்டு விட்டா போகப் போகிருன்? போகவே மாட்டான், அதனுலே புரட்சியிலே சேரவேண்டாம் என்று பெரியார் அவர்கள் கூறினர். அண்ணுவுக்கு அப்போது ஆதரவாளர்கள் அதிகம் இல்லாததால் பெரியாரை மீறி ஒன்றும் சொல்வதற்கு முடியாமல் தன் கருத்தை வலியுறுத்துவதை நிறுத்திக் கொண்டார் அண்ணு.

## 68. கருணாநிதியின் இளமை பலி!

1942-ம் ஆண்டில் ஈரோடு விடுதலையிலிருந்து விலகி அண்ணு அவர்கள் தனது சொந்தப் பத்திரிகை 'திராவிட நாடு' வார இதழை காஞ்சியில் ஆரம்பித்து நடத்திக்கொண்டு வந்தார்கள். அப்போது, அதற்கு திருவாரூரிலே இருந்து ஒரு மாணவர் 'இளமை பலி' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்பி வைத்தார். அந்தக் கட்டுரையைப் படித்துப் பார்த்த அண்ணு அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து, அடுத்த வாரமே தனது 'திராவிட நாடு' இதழியில் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

இந்த கட்டுரை வெளிவந்த இரண்டு வாரங்கள் கழித்து திருவாரூரில் நடைபெற்ற 'நபிகள் நாயகம்' விழாவில் கலந்துகொள்ள அண்ணு அவர்கள் சென்றிருந்தார்கள். திருவாரூருக்கு வந்தவுடன் அண்ணு அவர்கள் அவ்வூர் நண்பர்களைப் பார்த்து இவ்வூரில் கருணாநிதி என்பவர் இருக்கிருர், அவரைப் பார்க்க வேண்டும் என்று அழைத்துவர ஆள்விட்டு அனுப்பி இருந்தார்,

அவ்வூர் கட்சி பிரமுகரான டி. என். இரமனுடன் கருணாநிதியும் அண்ணுவைப் பார்க்கச் சென்ருர். அண்ணு இராமனிடம் கருணாநிதி எங்கே என்று கேட்க, இராமன் அவர்கள் அரைக்கால் சட்டையுடன் சின்னஞ் சிறுவனுக இருந்த கருணாநிதியை காட்டிஞர்கள். "நீதான் கருணாநிதியா?" என்று அண்ணு ஆச்சரியத்துடன் கேட்டார்கள். "ஆம்" என்ருர் கருணாநிதி..

"என்ன செய்கிருய்" என்ருர் அண்ணு.

"படித்துக்கொண்டு இருக்கிறேன்" என்றார் கருணாநிதி. அதன் பிறகு அண்ணா கருணாநிதியின் முதுகில் தட்டிக்கொடுத்து "இனி கட்டுரை எழுதாதே, ஒழுங்காகப் படித்து முடி!" என்று அறிவுரை கூறிவிட்டு வந்தார்கள்.

## 69. புலியைக் காட்டி மிரட்டினார்!

சேலத்தில் நீதிக் கட்சியை திராவிடர் கழகமாக மாற்றி அமைக்கும் மாநாடு நடந்தபோது, அதில் சில முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. அதில் முக்கியமான தீர்மானங்களில் ஒன்று "கட்சியில் உள்ளவர்கள், சர்க்கார் தந்த பட்டம் பதவிகளைத் துறக்கவேண்டும். தேர்தலுக்கு நிற்கக்கூடாது" என்பது. இந்தத் தீர்மானத்தை கொண்டுவரும் முயற்சியில் தீவிரம் காட்டியவர் அண்ணா அவர்கள். இது ஒரு சில நீதிக்கட்சிப் பிரமுகர்களுக்கு பிடிக்கவில்லை. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அண்ணாவுடனே தொடர்புகொண்டு இருந்தார்கள். இந்த தீர்மானத்தை எப்படியேனும் நிறைவேற்றாமல் செய்துவிட வேண்டும் என்று அவர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள். அந்த மாநாடு நடந்துக்கொண்டு இருந்த இடத்துக்கு பக்கத்தில் அப்போது ஒரு சர்க்கஸ் நடந்துக் கொண்டிருந்தது. அதை அண்ணாவுக்கு அந்த பிரமுகர் காட்டினார். சர்க்கஸ் நடப்பதை போய் பார்க்கலாம் என்று அண்ணாவைக் கூப்பிட்டார். இருவரும் சர்க்கஸைப் பார்த்துக்கொண்டு வரும்போது அந்த பிரமுகர் அண்ணாவைப் பார்த்து "சர்க்கஸ் பார்ப்பதற்காக உன்னை அழைக்கவில்லை.

தேர்தல் தீர்மானத்தை நீ இந்த மாநாட்டில் நிறை வேற்றினால், இதனுள் இருக்கும், புலிக் கூண்டைத் திறந்து மாநாட்டுப் பந்தலுக்குள் விட்டுவிடுவேன் ஜாக்ரதை'' என்று கூறி உறுமியதோடு உதட்டைக் கடித்தார். "செய்யுங்கள் தைரியமிருந்தால், நாங்கள் பயப்படமாட்டோம். சேர, சோழ, பாண்டியன் பரம்பரை வழிவந்தவர்கள். புலிக் கொடியேந்தி புலவர்களைப் புறமுதுகிடச் செய்த பரம்பரையைச் சேர்ந்த காளைகள் கூடியிருக்குமிடம் இது. புலியோ, சிறுத்தையோ, சிங்கமோ அவர்களை ஒன்றும் செய்துவிடாது. ஆனால் அவர்கள் மத்தியில் புகும் புலியை பூனைக்குட்டி யாக்குவர் எமது தோழர்கள்'' என்று அண்ணா உறுதியுடன் கூறினார். பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'சீமான்களும், பூமான்களும், பட்டைச் சரிகை வேட்டிகளும் வெளி யேறினர்.

## 70. பேச முடியாமற்போன ஒரே கூட்டம்!

அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழ கம், திராவிடக் கழகம் ஆகிய அமைப்புகள் தோன்று வதற்கு முன்னால், நீதிக் கட்சியில் சார்ந்திருந்து, பகுத்தறிவு இயக்கக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்த போது, தென் ஆற் காடு மாவட்டத்தைச் சேர்ந்த அவலூர்ப் பேட் டைக்கு ஒரு முறை அழைக்கப் பட்டிருந்தார்கள்.

அவ்வூர் வைதீகப் பெரியவர்கள், பணக்காரர்கள் ஆகியோரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த காலம் பகுத்தறிவியக்கக் கொள்கைகளிலே பற்று கொண்ட

ஒரு சில இளைஞர்கள் அண்ணா அவர்களை வரவழைத்து அவ்வூரில் எப்படியேனும் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தி விட வேண்டும் என்று முயன்று அரும் பாடு பட்டுக் கூட்டினார்கள்.

அவலூர்ப்பேட்டையில் மணியக்காரராய் இருந்த பெரியவர் ஒருவர் தம்மைப் பொருட் படுத்தாமல் 'பொடியர்கள்' பொதுக் கூட்டம் கூட்டுகிறார்களே என்பதைக் கண்டு சினங் கொண்டு, எப்படியேனும் கூட்டத்தை நடத்தவொட்டாமல் செய்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார்.

பொதுக் கூட்டம் ஆரம்பமாகி அண்ணா அவர்கள் எழுந்திருக்கும் போது, அந்த மணியக்காரர் கூட்டத் திடை வந்து நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டு, அவர் முன்னரே ஏற்பாடு செய்து வைத் திருந்தபடி பறையடிப் போரைப் பார்த்து "தப்பட் டையை அடியுங்கடா" என்று கட்டளை பிறப்பித் தார். அவ்வளவு தான்! கூடியிருந்தோர் காது செவிடு படும்படியாகப் பறையடிப் போர் பறையொலி கிளப் பினர். அண்ணாவால் ஏதும் பேசமுடியவில்லை. "நான் சிறிது நேரத்தில் முடித்துக் கொள்கிறேன். அதைக் கொஞ்சம் நிறுத்தச் சொல்லுங்கள்!" என்று அண்ணா அவர்கள் அந்த மணியக்காரரை கேட்டுக் கொண்டார் கள். "அதெல்லாம் முடியாது! அடியுங்கடா..." என்று மணியக்காரர் மேலும் கடுமையாகக் கட்டளை யிட்டார்.

'அதிக நேரம் பேசப் போவதில்லை, சிறிது நேரந் தான்" என்றார், மீண்டும் அண்ணா அவர்கள்.

"யாரைக் கேட்டுக்கொண்டு பேச வந்தாய்?

என்னையா கேட்டுக்கொண்டு வந்தாய்? இல்லையே?'' என்றார் மணியக்காரர்.

''பொதுமக்கள் கூடி விட்டார்கள். இவர்களை எழுந்து போகச் சொல்வது உங்கள் ஊருக்கு நல்லதல்ல. இப்பொழுதுதான் கேட்கிறேன், பேச விடுங்கள்!'' என்று அண்ணா அவர்கள் கேட்டார்கள்.

''அப்படியானால் ஐந்து நிமிடம் பேசு'' என்று அவர் அனுமதி தந்தார். அவரது கட்டளையின் பேரில் தப்பட்டை ஒலி நின்றது. அண்ணா அவர்கள் பேச்சைத் தொடங்கி பேசிக் கொண்டேயிருந்தார்கள். ஐந்து நிமிடங்கள் ஆனவுடனேயே பறையொலி எழுப்பும்படி மணியக்காரர் கட்டளையிட்டு விட்டார். பறைகள் பெரும் ஓசை கிளம்பின, அண்ணா அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மணியக்காரர் கூட்டம் நடத்த அனுமதிக்கவேயில்லை. மணியக்காரரை எதிர்த்துப் பேசும் ஆற்றல் அப்பொழுது யாருக்கும் ஏற்படாததால், எல்லோரும் வாளா இருந்துவிட்டனர். கூட்டம் கூட்டிய இளைஞர்கள் அப்பொழுது அண்ணா அவர்கள் எதிரில் வர அஞ்சி மறைந்து விட்டனர். அண்ணா அவர்கள் பேச முடியாமல் இறங்கிய ஒரே மேடை அதுதான்.

மறுநாள் காலையில் சிற்றுண்டி அருந்த ஒரு உணவு விடுதிக்கு அவ்வூரில் அண்ணா சென்றபோது, அங்கிருந்த மணியக்காரர் அண்ணாவை வரவேற்றுச் சிற்றுண்டி முதலியவைகளை வாங்கி வழங்கினாராம். முதல் நாள் இரவுக் கூட்டம் ஏன் தன்னால் நிறுத்தப் பட்டது என்பதற்கான காரணத்தை அவர் சொல்லும் போது, கூட்டத்தை நடத்த விட்டால், இளைஞர்கள், எப்பொழுதும் தம்மை மதிக்காமல் போய்

விடுவார்கள் என்றும், அவர்களுக்கு அத்து இருக்க வேண்டும் என்பதற்குத்தான் கூட்டத்தைத் தாம் நிறுத்தினதாகவும் கூறினாராம்.

## 71. சொன்னதைச் செய்தார்!

அண்ணா அவர்கள் கல்லூரி படிப்பை முடித்துக் கொண்டு வெளியில் வரும்போது, ஜஸ்டிஸ் கட்சியில் ஈடுபாடு உடையவராக இருந்தார்கள். அப்போதெல்லாம் அவரைப் போன்ற இளைஞர்களெல்லாம், தேசீய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். அவர்கள் அண்ணாவைப் பார்த்து 'ஜஸ்டிஸ் கட்சி சரிகைத் தலைப்பாகைகள் நிரம்பியதாயிற்றே சிற்றரசர்களும் சீமான்களும் நிறைந்த கூடாரமாயிற்றே, ஜஸ்டிஸ் கட்சி. நீங்கள் எப்படி அந்தக் கட்சியில் ஈடுபாடு கொள்கிறீர்கள்' என்று கேட்கத் தலைப்பட்டனர். அண்ணா அவர்கள் அவர்களுக்கெல்லாம் கூறிய பதில் இதுதான், 'சரிகைத் தலைப்பாகைக்காரர்கள் மட்டுமல்ல, ஏழைகள் பால் இரக்கமும், அறிவாலும், ஆற்றலாலும் சிறந்த நல் உருவம்—திருவுருவமாம் டாக்டர் நடேசனார் போன்றவர்களும் அங்கே இருக்கிறார்கள்" என்றார். அவர்களைப் போன்றே ஜஸ்டிஸ் கட்சி ஆக்கப்படவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதன் படியே ஜஸ்டிஸ் கட்சியை பாட்டாளிகளின் கட்சியாக மாற்றியும் அமைத்தார்.

## 72. பழைய பல்லக்கையே தூக்குகின்றேன்!

1944-ம் ஆண்டு சேலத்தில் ஜஸ்டிஸ் கட்சி மாநாடு நடப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்

கொண்டிருந்தன. இந்த மாநாடு பழமை விரும்பி களுக்கும் புத்துலக அமைப்பாளர்களுக்கும் இடையே நடந்த பலப்பரீட்சை மாநாடாகவே விளங்கியது. இந்த மாநாட்டில்தான் ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகமாக மாற்றி அமைக்கப்பட்டது.

அப்போது அந்த மாநாட்டை நடத்திய வரவேற்புக் கமிட்டியார், பெரியாரை தலைமை பீடத்தில் அமர்த்துவதற்குப் பதிலாக, அன்றைய குமாரராஜா முத்தையா செட்டியாரை தலைவராக்க பெரும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ராவ் சாகிப் ரத்தின சாமிப்பிள்ளை அவர்களும், சண்டே அப்சர்வர் பாலசுப்பிரமணியம் முதலியவர்கள் இதில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். திரு. எஸ். வி. லிங்கம் அவர்கள் இதைத் தகர்ப்பதற்காக வேலை செய்து கொண்டிருந்தார்கள் கட்சியைப் பாமரர் பக்கம் கொண்டு வருவதா? அல்லது பணக்காரர் பக்கமே அனுப்பி விடுவதா? என்ற கேள்வி எழுந்த நேரம் அது. இந்த செய்திகள் நாடெங்கும் பரவிக் கொண்டிருந்த பொழுது அண்ணா அவர்கள் காஞ்சீபுரத்தில் இருந்தார்கள். உடனடியாகப் புறப்பட்டு வரும்படி தந்தி ஒன்று பெரியாரிடம் இருந்து அண்ணா அவர்களுக்கு வந்து சேர்ந்தது. அண்ணா அவர்களும் உடனே புறப்பட்டு ஈரோடு போய் சேர்ந்தார்கள். அண்ணா அவர்களைக் கண்டதும் பெரியார் அவர்கள் பெரிதும் வரவேற்று சேலத்தில் நடைபெற்று வரும் செய்திகளை மிகவும் விளக்கமாக கூறினார்கள். எல்லாவற்றையும் கூறி முடித்தவுடன் கடைசியாகப் பெரியார் அவர்கள், "சேலத்தில் பல்லக்குத் தயாராகிவிட்டது. மூன்று பேர் ஏற்கனவே பல்லக்கைத்தூக்கத் தயாராகி விட்டார்கள். அவர்கள்

உன்னை நான்காவது ஆளாகச் சேர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள். உன் விருப்பம் என்ன?'' என்று கேட்டார். உடனே அண்ணா அவர்கள், ''பல்லக்கு தூக்குவதுதான் என் வேலை என்பது முடிவானால், நான் பழைய பல்லக்கையே தூக்குகின்றேன்'' என்றார்.

## 73. அண்ணாத்துரை தீர்மானம்!

சேலத்தில் நடைபெற்ற தென்னிந்திய நிலவுரிமை சங்க மாநாட்டில், 'யார் யார் கழகத்தில் சேர விரும்புகிறார்களோ அவர்களெல்லாம் தங்கள் தங்கள் பதவிகளை துறக்க வேண்டும். போராட்டங்களில் ஈடுபட அழைக்கும்போது தயாராக இருக்க வேண்டும்' என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். அந்த தீர்மானத்திற்குத் தலைப்பிடுவது பற்றி அண்ணாவிடம் யோசனை கேட்டபோது, 'பதவி துறப்புத் தீர்மானம்'' என்று போடலாம் என்று பெரியாரிடம் அண்ணா கூறினார். பெரியார் சந்தோஷம் கலந்த கோபத்தோடு அண்ணாவைத் தட்டிக் கொடுத்து இது, 'அண்ணாத்துரை தீர்மானம்' என்றே இருக்கட்டுமே என்று கூறித் தமது பொன்னான கரத்தாலேயே எழுதினார். அந்த தீர்மானத்திற்குப் பின்னர் தான் சீமான்களிடத்திலே இருந்த கட்சி ஏழைகள் மத்தியில் வந்தது. அரண்மனையில் குடியேறி இருந்த கட்சி ஆலமரத்தடியில் கூடிற்று. மக்களைச் சந்தித்து உழைத்து உழைத்து அதனால் மேனி கறுத்தவர்களை நேருக்கு நேர் சந்தித்தது.

## 74. குழப்பத்தைப் போக்கினர்!

1944-ல் ஈரோட்டில் இரண்டாவது நாடகக்கலே மாநாடு சர். ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது பெரியாரைப் பின் பற்றுவோருக்கும், ஆர். கே. சண்முகத்தைப் பின் பற்றுவோருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்து வந்தநேரம். இதற்கெல்லாம் காரணம் கம்பராமாயண எதிர்ப்பு கிளர்ச்சி. இரு தரப்பினருக்கும் மாநாட்டில் கலவரம் ஏற்படும் என்ற வதந்தி உலவியது. பேசுவதற்கென்று பெரியார் கோஷ்டி சார்பில் அண்ணு அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். மாநாட்டில் இருந்த சூழ்நிலே அவருக்கு நிலேயை விளக்கியது. தனது பேச்சில்:

'தலேவர் எங்கள் மீது வருத்தப்பட்டுக் கொண்டிருந்தால் தயவு செய்து அந்த எண்ணத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டும். கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று நாங்கள் கூறுவதெல்லாம் அந்த நூலின் மீது எங்களுக்குள்ள வெறுப்பைக் காட்டுவதற்கே ஒழிய, உள்ளபடியே கம்பராமாயணத்திற்கு தீ வைக்கும் கயவர்கள் நாங்களல்ல' என்று ஒரு விளக்கப் போடு போட்டார். மாநாட்டில் இருந்த குழப்பநிலே மாறியது. தலேவர் சண்முகம் அவர்கள் சிரித்தார்கள். தன்னுல் மாநாட்டில் குழப்பம் ஏற்பட்டது என்ற நிலே பிறக்கக் கூடாது என்பதில் மிகவும் பொறுப்புள்ளவர் அண்ணு அவர்கள் என்பதை அந்த நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தினர்.

## 75. அண்ணாவைத் தெரியாத தமிழ் ஆசிரியர்!

திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டாண்மைக் கழகத் தலைவராக இருக்கும் போது, அண்ணா அவர்கள், அவரோடு காரில் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர் பகுதிக்குச் செல்ல வேண்டிய வாய்ப்பு ஒன்று ஏற்பட்டது. இது நடைபெற்றது ஏறத்தாழ 1944-ஆம் ஆண்டில்.

தோழர் டி. சண்முகம் அவர்கள் காரில் சென்று கொண்டிருக்கும்போது இடையில். ஒரு சிற்றூரில், மாவட்டாண்மைக் கழகத்தைச் சேர்ந்த துவக்கப் பள்ளி ஒன்றைக் கண்டாராம். அதனைப் பார்வையிடலாம் என்று கருதிக் காரை நிறுத்திவிட்டு, அண்ணாவையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தில் நுழைந்தாராம். அந்த பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியர் அரசியல் அறிவும், பொது அறிவும் அற்ற ஒருவராக இருந்ததால் அண்ணாவை அவரால் கண்டு கொள்ள முடியவில்லை. தோழர் டி. சண்முகம் தலைமையாசிரியரிடம் பள்ளிக்கூடத்து நிலைமைகளைப் பற்றிச் சிறிது நேரம் கேட்டறிந்துவிட்டு. அண்ணாவைச் சுட்டிக் காட்டி "இவர் யார் தெரியுமா?" என்று தலைமை ஆசிரியரைக் கேட்டாராம்.

"யார் என்று தெரியவில்லையே!" என்று தயக்கத்துடன் தலைமையாசிரியர் கூறினாராம்.

"இவரைத் தெரியாது?......என்னய்யா நீ தலைமையாசிரியர்!" என்று கூறினார் தோழர் சண்முகம்.

"எங்கேனும் பார்த்திருப்பேன். சரியாக நினைவு இல்லை!" என்று கூறினாராம் தலைமையாசிரியர்.

"இவர் தெரியாது!......அண்ணாத்துரை" என்று தோழர் டி. சண்முகம் சொல்ல, அப்பொழுதும் அண்ணாவை யாரென்று அந்த தலைமை ஆசிரியரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"இவர் தானய்யா அண்ணாத்துரை!......சந்திரோதயம்!......நாடகம்!......தெரியாது?" என்று தோழர் சண்முகம் மீண்டும் கேட்டாராம்.

"ஓகோ! நாடகக் காண்ட்ராக்ட்காரரா..." என்று இழுத்தாற்போல் கூறினாராம் தலைமையாசிரியர்.

"இல்லையா!...சந்திரோதயம்! துரைராஜ் வேஷம் ...நடிக்கல்லே?......" என்று கேட்டாராம்.

"ஓகோ! நடிகரா ?..." என்று புரிந்து கொண்டவர் போல தெளிவுபடுத்திக் கொண்டாராம் தலைமையாசிரியர்.

"என்னய்யா இது !...இவரைத் தெரியாது? பேசுவாரு! - அண்ணாத்துரை! தெரியாது?..." என்று மேலும் விடாமல் விளக்கினாராம்.

தலைமையாசிரியரோ புரிந்து கொள்ளாததை இனியும் காட்டிக்கொள்ளக்கூடாது என்று கருதி, "ஓகோ! - இப்பொழுது தெரியுது! பார்த்திருக்கிறேன்! - இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது!" என்று கூறினாராம். உள்ளபடியே அப்பொழுதும் அவர் புரிந்து கொள்ளவில்லையாம்.

இந்த உரையாடல்களுக்கு இடையே அண்ணு அவர்கள் நின்றுகொண்டு என்ன செய்வதென்று தோன்ருமல் தத்தளித்தாராம்; அந்த இடத்தை விட்டு அகன்ருல் போதும் என்ருகிவிட்டது அண்ணுவுக்கு.

## 76. பணக்கார கட்சியா?

நாவலர் நெடுஞ்செழியன், க. அன்பழகன் ஆகியோரெல்லாம் மாணவர்களாக இருந்தபொழுது, முதன் முதலாக அண்ணு அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்துக்குச் சென்றிருந்தார். அப்போது அவர்களெல்லாம் அண்ணு அவர்களை, புதிதாக மிருகக் காட்சி சாலைக்கு வந்திருக்கும் மிருகத்தைப் பார்ப்பது போல கூடிநின்று, பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அண்ணு அவர்களை எத்தனையோ கேள்விகளை அம் மாணவர்கள் கேட்டார்கள். ஆங்கிலத்தில் எதுவரை படித்திருக்கிறீர்கள்! என்றனர். எம். ஏ. வரை என்ருர் அண்ணு. என்ன பாடம் என்றனர் மாணவர்கள். பொருளாதாரம் என்ருர் அண்ணு. அப்படியானுல் கார்ல் மார்க்ஸை பற்றி படித்திருப்பீர்களே? என்று வினவினர். ஆம், படித்திருக்கின்றேன் என்ருர். உடனே அவர்களெல்லாம் கார்ல் மார்க்ஸின் தத்துவங்களை படித்த பின்புமா இந்தக் கண்ருவி ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருக்கிறீர்கள்? என்று கேட்டனர். அப்போது அவர்களுக்கு அண்ணு தந்த பதில் ''நான் ஜஸ்டிஸ் கட்சியில் நுழைந்திருப்பது அதிலுள்ளவர்களையெல்லாம் வெளியே துரத்தி விட்டு உங்களைச் சேர்த்துக்

கொள்ளத்தான்" என்று கூறினர். அன்று அம் மாணவர்களிடம் கூறியது போலவே சீமான்களிடம் சிக்கியிருந்த ஜஸ்டிஸ் கட்சி பாட்டாளிகளின் கட்சியாக--ஏழைகளின் கட்சியாக மாறியது. அண்ணாவைச் சந்தித்து கேள்விகள் கேட்ட இரு மாணவர்களில் இன்றைய கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவர் கே. பாலதண்டாயுதமும், மற்றொருவர் நாவலர் நெடுஞ் செழியனும் ஆவார்கள்.

## 77. அண்ணாவும் ஆலயப் பிரவேசமும் !

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் சேலத்தில் திராவிடர் கழகமாக மாறிய பிறகு முதல் மாநாடு திருச்சி புத்தூர் மைதானத்தில் பெரியார் தலைமையில் நடைபெற்றது. அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப் படும்போது மாநாட்டின் தலைவர் என்ற முறையில் பெரியார் ஆலயப் பிரவேச தீர்மானத்தை முன்மொழிந்தார். இந்த தீர்மானத்தை எதிர்த்து தூத்துக்குடி எம். எஸ். சிவசாமி பேசும்போது, "கோவிலுக்குப் போவதை பெரியார் எதிர்த்து வருகிறார். அங்கு போனல் மக்கள் அறிவு பாழாகும் என்று கூறுகின்றார். அப்படி இருக்கும் போது ஆதிதிராவிடர்களுக்கு ஆலயப் பிரவேசம் வேண்டுமென்பது சரியாகாது" என்று கூறினர். சிவசாமியை ஆதரித்து, அன்றைய இளந்தாடி இரா. நெடுஞ்செழியன் நீண்ட நேரம் பேசி கூடியிருந்தவர்களை தன் பக்கம் திருப்பிவிட்டார். பெரியார் முன் மொழிந்த தீர்மானம் தோற்றுவிடும் நிலை ஏற்பட்டது, மேடைக்கு அருகில் இருந்த அண்ணாவை அழைத்து

வந்து பேசச் சொன்னார்கள். அண்ணா பேசும்போது சிவசாமி, நெடுஞ்செழியன் ஆகியோரை ஆதரித்து பேசிவிட்டு "கோவிலுக்குள் என்னதான் நடக்கிறது என்பதை ஆதிதிராவிட மக்கள் தெரிந்து கொள்ளட்டுமே" என்று பேசி பெரியார் தீர்மானத்தை ஆதரித்தார். பெரியார் தீர்மானமும் நிறைவேறியது.

## 78. யார் இந்த அண்ணாத்துரை!

1937-ம் ஆண்டு, சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் ஒருவிவாதத்திற்கு ஏற்பாடாகி இருந்தது. சி. ராஜகோபாலாச்சரியார் நடுவராக அமர்ந்திருந்தார். பலர் ஆதரித்தும், எதிர்த்தும் பேசினர். ராஜாஜி அவர்களிடம் ஒரு சீட்டு அனுப்பப்பட்டது. அதை அருகிலிருந்த ஒரு தலைவர் பார்த்துவிட்டு, "தயவு செய்து இந்த அண்ணாத்துரையை மட்டும் பேச அனுமதிக்காதீர்கள்" என்றார். ராஜாஜி "இந்த அண்ணாத்துரை யார்? இவரைப் பத்து நிமிடம் பேச விட்டால் என்ன குடிமுழுகிப் போய்விடும்?" என்று கேட்டு அண்ணாத்துரையைப் பேச அனுமதித்தார்.

அண்ணா தமக்கே உரிய வெண்கலக் குரலில் மடை திறந்தாற்போல் பேசலானார். அவர் பேச்சு அன்று மிகவும் சிறப்பாக அமைந்தது.

அந்த சம்பவத்திற்கு மறுநாள் ராஜாஜி சில காங்கிரஸ் தலைவர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது, 'நீங்களும் தான் பேசுகிறீர்கள் நேற்று அண்ணாத்துரை என்ற ஓர் இளைஞன் பேசினான். பேச்சாகவா பேசினான்; நெருப்பையல்லவா கொட்டினான்?" என்று சொன்னாராம்.

## 79. மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை !

1938-ல் இராஜகோபாலாச்சாரியார் மந்திரி சபை தமிழகத்தில் நடந்துக் கொண்டிருந்தபோது, அண்ணா இந்தி எதிர்ப்பு மறியலில் கலந்துக் கொண்டதற்காக கைதுசெய்து வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கின் தீர்ப்பில் அண்ணா அவர்களுக்கு நான்கு மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சென்னை சிறையில் பெரியார் அவர்களுடன் ஒரே கொட்டடியில் தங்கும் வாய்ப்பும் அண்ணாவுக்கு கிட்டியது, சிறைக்குள் வந்த அண்ணா அவர்களைப் பார்த்த பெரியார் அவர்கள், "வா, வா, நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்" என்று மனம் மகிழ வரவேற்றார். அந்த சிறைச் சந்திப்பை பற்றி அண்ணா அவர்கள் ஓரிடத்தில், 'தமிழ், தமிழ்' என்று பேசி உணர்ச்சிவயமாகவே இருந்து வந்தோம்; ஒரே குறை; பெரியாருடன் பகலில் பனிரெண்டு மணிநேரம் தான் ஒன்றாக இருக்கமுடிந்தது. இரவில் எங்களைப் பிரித்து தனித்தனியாகப் பூட்டு விடுவார்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

## 80. அண்ணாவைப் போற்றிய ஜின்னா !

இந்தியத் துணைக் கண்டத்தில் தனி நாடு கண்ட ஜனாப் ஜின்னா உயிரோடு இருந்த காலத்தில், பாகிஸ்தான் பிரிவினைக்கு பேராதரவினை திரட்ட, தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பெரியாரைச் சந்தித்து, நாட்டின் அரசியல் நிலையைப் பற்றி உரையாடினார். அப்பொழுது இவர்களுடனிருந்து

ஜஹப் ஜின்னுவின் ஆங்கிலப் பேச்சை தமிழில் மொழி பெயர்த்து பெரியாருக்கு கூற உதவியாக விளங்கினுர் அண்ணு.

அண்ணுவின் ஆங்கில மொழித் திறமையை ஜஹப் ஜின்னு கண்டார். அண்ணுவின் முகத்தை கூர்ந்து நோக்கினுர். அவரது பரந்த முகம், அகன்ற நெற்றி, செழித்த புருவம், விசாலமான விழிகள், அவைகளில் ஊடுருவி நின்ற ஆற்றல், ஒளி எல்லாம் சேர்ந்து ஜின்னுவுக்குப் பிரமிப்பூட்டின.

''இந்த இளைஞன் யார்?'' என்று ஜின்னு கேட்டார்.

''நம்ம பையன் தான்'' என்ருர் பெரியார்.

''இந்த இளைஞன் சாதாரண மானவனுகத் தோன்றவில்லை! இவனுடைய அகன்ற விழிகள் என்னென்னவோ சொல்ல வைக்கின்றன. ஆசியாக் கண்டத்தையே ஆட்டிப்படைக்கும் ஆற்றல் கொண்டவை என்று எனக்குத் தோன்றுகிறது. இப்படிப் பட்டவனை நீங்கள் எப்படி உங்களுடன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''—குறையாத வியப்போடு தமது கருத்தை வெளியிட்டார் ஜின்னு.

''நீங்க சொல்வதெல்லாம் உண்மைதானுங்க, பையன் ரொம்பக்கெட்டிக்காரனுங்க. ஆனுல் ரொம்ப அடக்கமானவனுங்க. நமக்கு புள்ளை மாதிரிங்க ...'' பெரியார் தெரிவித்த இந்தக் கருத்தையும் அண்ணு தான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டியிருந்தது.

## 81. பேச்சாளர் ஆனது எப்படி?

அண்ணா அவர்கள் நாடறிந்த பேச்சாளர் என்பதை யாவரும் அறிவர். அவர் பேச்சுத்துறையில் பிரபலம் ஆவதற்கு காரணமாக இருந்த சம்பவத்தை அவரே ஒரு முறை வேடிக்கையாக வெளியிட்டார்.

"நான் சிறுவனாக இருந்த பொழுது, என்னை என் சிறிய தாயார் வெகுசெல்லமாக வளர்த்தார்கள். தெருவிலே இறங்கி, காலிலே மண் பட்டால் ஆயிசு குறையும் என்று யாரோ சொன்னார்களாம். ஆகவே என்னைத் தெருவில் இறங்கவே விடமாட்டார்கள் என் தாயார். தலைவாரிப் பின்னி, நகைபோட்டு, திண்ணையில் உட்கார வைத்து விடுவார்கள். மற்ற பையன்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டே இருப்பேன்.

அதனால் யாருடனும் சண்டைபோட எனக்கு வாய்ப்பில்லாது போய்விட்டது. பள்ளில் சேர்ந்த பிறகும் விளையாட்டுக்களில் என் மனம் நாடவில்லை. நிறையப் பேசவும், ஒழிந்த நேரங்களில் நூல் நிலையங்களில் பொழுதைப் போக்கவும் மனம் சென்றது. ஆகவேதான், பேச்சாளனானேன் நான்" என்றார்.

## 82. அறிஞர் ஆனது எப்போது?

1947-க்கு முன்பு அண்ணா அவர்கள் எழுத்தாளர் மாநாடுகளிலோ, எழுத்தாளர் சங்கங்களிலோ, அதிகம் தொடர்பில்லாதவராகவே இருந்து வந்தார். அவரது எழுத்தாற்றலையும், பேச்சு வன்மையையும் அறிந்திருந்த, ஒரு சில எழுத்துலக பிரமுகர்கள், ஒரு

சிறப்புச் சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்திருந் தனர். அந்த கூட்டத்திற்கு கல்கி. ஆர். கிருஷ்ண மூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார்கள். மற்றும் சில பேச்சாளர்களும் பலபொருள்பற்றி பேசுவதற்கு அண்ணு அவர்களுடன் அழைக்கப்பட்டிருந்தார்கள். கூட்டம் நடந்த தினத்தன்று குறிப்பிட்ட நேரத்திற் குள் கல்கி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வந்து விட் டார்கள், என்ன காரணத்தாலோ, சொற்பொழி வாளர்களில் அண்ணு அவர்களைத் தவிர வேறு யாரும் வெகு நேரமாகியும் வரவில்லை. கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை.

கல்கி. கிருஷ்ணமூாத்தியும் பொறுமையோடு உட் கார்ந்திருந்தார். சட்டென அண்ணு கல்கியின் காதோடு காதாக சொல்லிவிட்டு பேச எழுந்தார் தனக்கென ஒதுக்கப்பட்டிருந்த பொருள் பற்றி மட்டு மன்றி, மற்றவர்களுக்கெனக் குறிக்கப்பட்டிருந்த பல பொருள்களைப் பற்றியும் வெகு அழகாகவும், மிகத் தெளிவாகவும், சொல்மாரி பொழிந்து விட்டு அமர்ந் தார். கரகோஷம் சபையையே அதிர வைத்தது.

அதன் பின் கல்கி. கிருஷ்ணமூர்த்தி எழுந்தார். "நான் பேசவேண்டுமென்பதையே மறந்து, வியப்புக் கடலில் ஆழ்ந்து போயிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமையை அன்பர் ஸ்ரீ ஸி. என். அண்ணுத்துரை தமது அரிய சொற்பொழிவால் ஏற்படுத்தி விட்டார்.

இப்படிப் பல பொருள்கள் பற்றி, முன் தயாரிப் பின்றி, முன் அறிவிப்பின்றி, தட்டுத் தடங்கலின்றி, விரிவாக யாராலும் பேசமுடியாது. பொருள்கள்

என்றால் எப்படிப்பட்டவை, ஒன்றிற்கொன்று சம்பந்தமில்லாதவை, இப்படிப் பலவகைப்பட்ட விஷயங்களைப் பற்றியும் விரிவாகப் பேசக்கூடிய இவர் சாதாரண அண்ணாத்துரை அல்ல, அறிஞர் அண்ணாத்துரையாகவே எனக்குப் படுகிறது. இவரை அறிஞர் அண்ணாத்துரை என்று எல்லோரும் அழைப்பது மிக மிகப் பொருத்தம்" என்று கூறினபோது, கூட்டத்தினர் அதை ஆரவாரத்துடன் ஆமோதித்தனர். அன்றிலிருந்து அவர் அறிஞர் அண்ணாத்துரை ஆனார்.

## 83. அண்ணாவால் முடியாதது!

தேதி கொடுத்து விட்டு கூட்டத்துக்கு வராமல் இருந்து விடுவது, கூட்டத்திற்கு நேரங்கழித்து வருவது என்பதெல்லாம் அண்ணாவுக்கு தண்ணீர் பட்ட பாடு. இதையே ஒரு பெரும் குறையாக அவருடைய எதிரிகள் சுட்டிக்காட்டி வந்தார்கள். அப்படிப்பட்ட சம்பவம் ஒன்றுக்கு அவர் கொடுத்த விளக்கம் மிகவும் வேடிக்கையானது.

ஒருமுறை திருச்சி விசுவநாதம் அவர்களுடன் அண்ணா அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது, ஒரு அன்பர் வந்தார், 9-ம் தேதி கூட்டத்திற்கு வரவேண்டும் என்றார். விசுவநாதம் ஒப்புக் கொண்டார். அண்ணா அவர்களையும் அந்த அன்பர் அழைத்தார். அவரும் ஒப்பினார், அழைத்தவர் மகிழ்ச்சியுடன் சென்று விட்டார். அவர் சென்ற பிறகு 9-ம் தேதி வேறு வேலை இருப்பதாக என்னிடம் சொன்னீர்களே! எப்படி கூட்டத்திற்கு வருவீர்கள்? என விசுவநாதம்

கேட்டார். "நான் கூட்டத்திற்கு போகப் போவ தில்லை" என்று அண்ணு பதில் கூறிஞர். "இந்த உண்மையை அழைத்த அன்பரிடமே கூறி இருக்க லாமே" என்ருர் விசுவநாதம். "சொன்ஞல் அவர் நம்மை விட்டுப் போய் இருக்கமாட்டார். நம்மையும் பேச விட்டிருக்கமாட்டார்" என்ருர் அண்ணு. "இதற்காக பொய் சொல்லுவதா?" என்ருர் விசுவ நாதம். "உண்மையைச் சொன்ஞல் ஒப்புக்கொள்கிற வரையில் பொய் பேசுவதில் தவறு ஒன்றும் இல்லை" என்ருர் அண்ணு. "அந்தக் குணத்தை நாம் தான் உண்டாக்க வேண்டும். அதற்காக சிறிது தியாகமும் செய்யலாம்" என்ருர் விசுவநாதம். "தன் ஞல் அதுமட்டும் இயலாது" என்ருர் அண்ணு.

## 84. பெருச்சாளி அடித்த அன்பழகன்!

அண்ணு அவர்களுக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் சொந்த வீடு கிடையாது. சென்னைக்கு வந்தால் அங்கப்ப நாயக்கன் தெருவில் தேவராஜ முதலியார் என்ற தமது நண்பர் வீட்டில் தங்குவது வழக்கம்.

அந்த வீட்டில் பெருச்சாளிகள் தொல்லை அதிகம். எப்படியாவது அவற்றை அடித்து ஒழிக்க வேண்டு மென்று முயற்சி செய்தார்கள்; ஆஞல் முடியவில்லை.

அண்ணு அந்த வீட்டுக்காரர்களைப் பார்த்து, "கொஞ்சம் பொறுங்கள். பெருச்சாளி அடிக்க சரி யான டிஆளக் கூட்டி வருகிறேன்" என்ருர்.

மறுநாள் ஒருவரைக் கூட்டியும் வந்தார். ஒரு பெருச்சாளி அடிபட்டுச் செத்தது; வந்தவரின் திறமையால்.

அண்ணு கூட்டி வந்த ஆள் வேறு யாருமல்ல. திரு. க. அன்பழகனே ஆவார்.

அந்த வீட்டிலிருந்த குறுகலான சந்துக்களின் வழியே பெருச்சாளிகளைத் துரத்திச் சென்று தாக்கி ஒழித்து விட்டு வர, ஒல்லியாக இருந்த அன்பழகனே பொருத்தம் என்று தீர்மானித்தே அண்ணு அவ்வாறு செய்தாராம்.

## 85. எலிக்கு ஊசி போடு!

அண்ணு அவர்களின் பொழுது போக்கு நண்பர்களில் மிகச்சிறந்த நண்பர் காஞ்சித் தோழர் சி. வி. இராஜகோபால் ஆவார்.

அண்ணு அவர்களும் தோழர் சி. வி. இராஜகோபால் அவர்களும் மிகச்சிறிய வயதிலிருந்தே இணைபிரியா நண்பர்கள். பள்ளிப் பருவக் காலத்திலும் இருவரும் ஒன்ருகவே சேர்ந்து பள்ளிக்கு செல்வதும், ஒன்ருக திரும்பி வருவதும் ஆன பழக்கம் கொண்டிருந்தனர், தோழர் சி. வி. இராஜகோபால் அவர்களின் பேச்சு, போக்கு, நடவடிக்கைகள் எல்லாம் அண்ணு அவர்களுக்கு எப்பொழுதுமே விருப்பம் மிகுதி. அண்ணு அவர்களின் கேலியும் கிண்டலும் தோழர் இராஜகோபால் அவர்களை நிலை தடுமாற

வைத்து மேலும் மேலும், சிரிப்புக்கு இடம் உள்ளவ ராக அவரை வைத்துவிடும்.

அண்ணா அவர்கள் தோழர் இராசகோபாலைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர் தமக்கு ஒரு 'ஞாயிற்றுக் கிழமை' போன்றவர் என்று கூறுவார். அதாவது, 'ஞாயிற்றுக் கிழமை' எப்படி பொழுது போக்குவதற்குரியதொரு நாளாக விளங்குகிறதோ, அப்படி தோழர் இராசகோபால் பொழுது போக்கு வதற்குரிய ஒருவராக அண்ணாவுக்கு விளங்கி வந்தார்.

அண்ணா அவர்கள் தோழர் இராசகோபால் அவர் களை ஓயாமல் கிண்டல் செய்து கொண்டே இருப்பார். ஒரு நாள் தோழர் இராசகோபால் அவர்கள் அண்ணா விடம் வந்து தம்மை முன்னாள் இரவு எலி ஒன்று கடித்து விட்டதாகக் கூறினார்.

அண்ணா அவர்கள் சிரித்துக் கொண்டே "எலியா? உன்னையா?" என்று கேட்டார்கள்.

"ஆமாங்க! என்னைத்தான் எலி கடித்துவிட்டது" என்று தோழர் இராசகோபால் இரக்கந் தோன்ற கூறினார்.

"ஊசி போடணுமே! ஊசி போட்டாச்சா?" என்று அண்ணா அவர்கள் கேட்க, உடனே இராச கோபால் "இன்னும் போட்டுக்கலிங்க!" என்று கூறி னார்.

உடனே அண்ணா "யாருக்கு ஊசி?" என்று இராச கோபாலைப் பார்த்துக் கேட்டார்கள்.

"எனக்குத் தான்!" என்று இராசகோபால் அவ சரமாகக் கூறினார்.

அண்ணு அவர்கள் சிரித்துக் கொண்டே, "உனக்கல்ல, அந்த எலிக்கு ஊசி போட்டாச்சா என்று தான் கேட்டேன்!" என்ருர்.

"எலிக்கு ஏன் ஊசி?" என்று இராசகோபால் கேட்க; அதற்கு அண்ணு, "அதனுடைய விஷம் உன்னை பாதிப்பதை விட, உன்னுடைய விஷமல்லவா அதனை அதிகமாக பாதிக்கச் செய்திருக்கும்!" என்று சிரித்துக் கொண்டே கூறிஞர்.

## 86. குரங்கு நிலையிலே இருக்கின்ருய்!

அண்ணு அவர்கள் தம் நண்பர்களோடு ஒரு நாள் நண்பகலில் உணவு அருந்திக் கொண்டிருந்த போது, உணவு அருந்திக் கொண்டிருந்தவர்களிடையே மரக்கறிஉ ணவு, மாமிச உணவு பற்றிய விவாதம் எழுந்தது.

மரக்கறி உணவு மாமிச உணவு பற்றிய விவாதம் எழுவதற்குக் காரணம், "திராவிட நாடு' அலுவலகத்தில் ஓவியராக இருந்து வந்த தோழர் பழனி அவர்கள், தமக்கு மாமிசம் பிடிக்காது என்றும் மரக்கறி உணவே வேண்டும் என்றும் சொல்லி அதனை வாங்கிக்கொண்டு தனியே உட்கார்ந்து சாப்பிட்டார். மற்ற நண்பர்கள் எல்லாம் மாமிச உணவைச் சாப்பிட்டார்கள். மாமிச உணவைச் சாப்பிட்டவர்கள் எல்லாம் தோழர் பழனி அவர்களை வற்புறுத்திச் சிறிதாவது மாமிசத்தைச் சாப்பிட்டுப் பார்க்கும்படி கூறிஞர்கள்; தோழர் பழனி அவர்கள் தனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லி இறுதி வரையில் மறுத்தே வந்தார்; "மரக்கறி உணவு சாப்பிடும் விலங்குகள்

எப்படி மக்களால் பழக்கப் படுத்தி உதவிக்கு வைத்துக் கொள்ளக் கூடியனவாக இருக்கின்றன. மாமிசம் சாப்பிடும் விலங்குகள் பெரும்பாலும் கொடூரம் வாய்ந்தததாகவும் வாழ்வன வாகவும் இருக்கின்றன'' என்பன போன்ற விளக்கங்கள் பரிமாறிக் கொள்ளப் பட்டன.

மனிதனுடைய உறுப்பு அமைப்புகள், குடல் அமைப்பு போன்றன எல்லாம் அவன் மரக்கறி உணவு சாப்பிடும் வகையைச் சார்ந்தவன் என்பதைத் தான் காட்டுகின்றன; மேலும் குரங்கிலிருந்து தான் மனிதன் வந்தான் என்று சொல்லப் படுவதாலும், குரங்கு மரக்கறி உணவு சாப்பிடும் வகையைச் சேர்ந்ததாக இருப்பதாலும், மனிதன் இயற்கை நியதிப் படி முதல் வகையைச் சேர்ந்தவன் ஆகத்தான் கருதப் பட வேண்டும் என்று ஒரு நண்பர் கூறினார்.

உடனே தோழர் பழனி அவர்கள் தமது கட்சிக்கு வலிவு ஏற்பட்டுள்ளதாக கருதிக்கொண்டு, ''அப்படி சொல்லுங்கள்! அப்படிச் சொல்லுங்கள்!'' என்று கூறி மகிழ்ச்சி கொண்டாடினார்.

மனிதன் நாளுக்கு நாள் அறிவு ஆற்றல் பெற்று வளர்ந்த பிறகு தான் மாமிசத்தைப் பக்குவப் படுத்தித் தின்னக் கற்றுக் கொண்டிருக்கிறான்; இது செயற்கை முறையில் அவனுக்கு படிந்த பண்பு என்று முதலில் கூறிய நண்பர் மேலும் விளக்கம் தந்தார்.

அது கேட்ட தோழர் பழனி ''நான் இயற்கைப் பண்பினைக் கடைப்பிடிப்பவன். எனவே தான் நான் மரக்கறி சாப்பிடுகிறேன். நீங்கள் எல்லாம் செயற்கை பண்பினைக் கடைபிடிப்பவர்கள் எனவே தான் மாமி

சம் சாப்பிடுகிறீர்கள்! என்று ஏளனக் குரலில் குறிப்பிட்டார்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த அண்ணா அவர்கள், "அப்படியானால் நீ மாமிசம் தின்னக்கற்றுக் கொள்ளாத குரங்கு நிலையிலேயே இருக்கின்றாய்! நாங்கள் மாமிசம் தின்னக் கற்றுக் கொண்ட அறிவாற்றல் மிகுந்த நாகரீக நிலையில் இருக்கின்றோம் என்று பொருள் கொள்ள வேண்டும்" என்று கூறவே எல்லோரும் கொல்லென்று சிரித்துத் தோழர் பழனி அவர்களைக் கேலி செய்தார்கள்.

## 87. அண்ணாவும் மந்திரியார்களாம்!

பெரியாருடன் இருந்த போது உலக மண்டலத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பெரியாருடன் அண்ணா அவர்கள் சென்றிருந்தார். அப்போது உதக மண்டலத்தைப் பார்க்க வேண்டுமென்று அண்ணாவின் சிற்றன்னையார் விரும்பி அவர்களும் அவர்களுடன் சென்றிருந்தார்கள். அந்த அம்மையார் பெரியாரைப் பார்த்து இந்த மந்திரிகளெல்லாம் இங்கே தான் தங்குவார்களா என்று கேட்டார். அதற்கு பெரியார் அவர்கள் 'வருங்காலத்தில் உங்கள் பையன் கூட மந்திரியாக வரலாம்' என்றார். அண்ணா திராவிடர் கழகத்தில் இருந்த போதே பெரியாருக்கு சட்ட சபைக்கு போக வேண்டும் என்ற ஆசை இருந்ததை நன்கு அறிந்து வைத்திருந்தார் அண்ணா.

## 88. கிராமபோனில் பெரியார் பேச்சு !

அண்ணா அவர்கள் பெரியாருடன் பழகி இருந்த நேரம். அவரது பேச்சுக்களை உடனிருந்து கேட்டு ரசித்துக் கொண்டிருந்த சமயத்தில் பெரியார் அவர்களது பேச்சை கிராமபோன் பிளேட்டாக எடுத்து வைத்துக்கொண்டால் பிற்கால சந்ததிக்கும் பயன் படும் என்று கருதி அதற்கான ஏற்பாடுகளில் இறங்க விரும்பினார். அதன்படி கிராமபோன் கம்பெனியிடம் போய் விசாரித்தபோது அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி எடுப்பதால் கம்பெனி எதிர் பார்க்கும் அளவு இலாபம் வராது என்று கருதி. ஆயிரம் ரிக்கார்டுகளுக்கான தொகையை முன் பணமாகக் கொடுத்தாலன்றி இயலாது என்று மறுத்து விட்டார்கள். ஆனாலும் ஒரு அபிப்பிராயத்தைக் கூறினார்கள். அதற்கான செலவை தாங்களே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறி அதற்காக பேரம் பேசினார்கள். அதைக் கேட்டு அண்ணாவுக்கு மலைப்பு ஏற்பட்டது ஆயிரம் ரிகார்டுகளுக்கு உரிய நிதியைத் திரட்டித்தரக்கூடிய நிலையில் கட்சி இல்லாதிருப்பதை எண்ணி எந்தவிதமான முடிவும் கூறாமல் நிராசையுடன் ஒன்றும் பேசிக் கொள்ளாமல் திரும்பி விட்டார்.

அப்படிபட்ட ஒலிப்பதிவு கம்பெனியினர் பின்னால் அண்ணாவின் பேச்சை ஒலிப்பதிவு செய்ய வருமாறு ஆள் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அண்ணா அவர்களோ தன் தொண்டை சரியாக இல்லை என்று பிகு செய்துக் கொண்டே காலத்தை கடத்திக் கொண் டிருந்தார்.

## 89. கலைவாணர்களை கழகத்துக்கு இழுத்தார்!

இந்தி எதிர்ப்பால் உயிர் நீத்த தாளமுத்து நடராசன் நினைவுச் சின்னம் அமைப்பதற்காக சுயமரியாதை சங்கத்தின் ஆதரவில் சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் அறிஞர் அண்ணாவின் 'சந்திரோதயம்' நிதி நாடகம் நடைபெற்றது. இந்நாடகத்தைக் காண இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகிய மூவரும் வந்திருந்தனர். நாடகத்தின் முடிவில் பேசும்போது பெரியார் ஒருபிடி பிடித்தார் கலைவாணர்களை. "இந்தக் கலைவாணர்கள் முருகா! முருகா! என்று மூன்று மணி நேரம் பாடிவிட்டு, ஆயிரம் இரண்டாயிரம் என்று பணத்தை பறித்துக்கொண்டு போகிறார்களே, இன அபிமானம், சுயமரியாதை, இவைகளுக்காகப் பாடுபடும் நமது இயக்கத்தில் ஒரு பற்று, பாசம், தொடர்பு, துளி காட்டுகிறார்களா!" என்று கோபமாகவே பேசினார். என்ன எங்களை வரவழைத்து உட்கார வைத்துக்கொண்டு இப்படி ஏசுகிறார்களே என்று வந்திருந்த கலைவாணர்கள் மூவரும் வருத்தப்பட்டனர். அண்ணா அவர்கள் அம்மூவருக்கும் சமாதானம் கூறிவிட்டு, பெரியாருக்குப் பின் பேசும்போது, "பெரியார் கேட்கப்படும் காரணத்தை விளக்கி, கலைவாணர்கள் எல்லாம் கூடிய சீக்கிரம் நமது கழகத் தொண்டிலே ஈடுபடுவார்கள்" என்று உறுதி அளித்தார். தனது கையாலேயே கடிதம் எழுதி கலைஞர்களைப் பற்றி பெரியார் கொண்டிருந்த தப்பபிராயத்தையும் மாற்றியமைத்தவர் அண்ணா.

பெரியார் சொன்ன முறைப்படி அண்ணா கலைத் -

துறையினரை கழகப் பணிபுரிய அழைத்து வந்தார். பெரியாரே ஒற்றைவாடை கொட்டகையிலே தாம் பேசியதற்காக வருத்தப்பட்டு, அடுத்த திங்களில் ஈரோடு சென்று, 'கிந்தனார்' காலட்சேபம் செய்த என். எஸ். கிருஷ்ணன் அவர்கட்கு தங்க செயினும், கிந்தனார் என்று பெயர் பொறிக்கப்பட்ட டாலரும் பரிசளித்தார். ஈரோட்டிலே 1948ல் நடைபெற்ற தனி திராவிடர் கழக மாநாட்டில், காந்தியார் படத் திறப்பு விழா நடத்த என். எஸ். கிருஷ்ணன் அவர் களையே வரவழைத்தார்.

## 90. அண்ணா அணிந்த சில்க் சட்டை!

நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்களின் புதுமனை புகு விழாவின் போது அறிஞர் அண்ணா அவர்கள் சரிகை வேட்டியுடுத்தி, பட்டுச் சொக்காய் போட்டு, மனதிலே நிரம்பிய மகிழ்ச்சி முகத்திலே ததும்ப காட்சி அளித்தார். தான் சரிகை உடை உடுத்திக் கொண்டு இருந்ததைப் பற்றி குறிப்பிட்டு அண்ணா பேசுகையில் கீழ்க்கண்ட ஒரு சுவையான நிகழ்ச்சியைச் சொன்னார்.

''நண்பர் கே. ஆர். ராமசாமி சொன்னார் நான் உள்ளே நுழைகின்ற பொழுது அண்ணா என்னைப் பார்த்தார், நான் அண்ணாவைப் பார்த்தேன், ஏனென் றால் சரிகைத் துணி கட்டிக் கொண்டிருந்தார் என்று அவர் சொன்னார். நான் எனது 50 ஆண்டு காலத்தில் ஒரு ஐந்தாறு தடவை இதைப் போல சரிகைத் துணி கட்டிக் கொண்டிருக்கிறேன். பாரதிதாசனுடைய

விழாநாளன்று இது மாதிரி சரிகைத் துணியை கட்டிக் கொண்டிருந்தேன்.

சம்பத்தினுடைய திருமண தினத்தன்று இப்படிப்பட்ட கோலத்தில் தான் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தேன், இப்படி எனக்கு உற்றவர்கள் அடைகின்ற மகிழ்ச்சி நேரத்திலே தான் நானும் கொஞ்சம் விழாக் கோலமாக இருக்க வேண்டுமென்று கருதுவது வாடிக்கை. அந்த விதத்திலே தான் இந்த சரிகை ஆடையையும், பட்டுச் சட்டையையும் இன்று உடுத்திக் கொண்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நான் இங்கு வருவதற்கு முன் இது போன்று கட்டிக் கொள்ள வேண்டுமென்று ஒரு கட்சியும், தேவையில்லை என்று நானும், வீட்டிலே போராட வேண்டியிருந்தது. அதிலே கட்டிக் கொள்ள வேண்டுமென்பதில் என்னிடம் அக்கறை கொண்டவர் மாத்திரமல்ல--ஜவுளிக் கடைத் தொழிலிலே அதிகமாக அக்கறை கொண்டவர் எங்களது காஞ்சிபுரம் தங்கவேலர். அவர்களே இப்படிப்பட்ட விழாவிலே இப்படிப்பட்ட ஆடை பலரும் உடுத்திக் கொண்டால் தான் விழாவின் அருமை பெருமை தெரியுமென்று கட்டாயமாக வற்புறுத்தி அவர் கட்டியே விட்டார் என்று கருதுகின்றேன். அந்த அளவுக்கு தொல்லைப் படுத்தி இதைக் கட்டிக் கொண்டு வரச் செய்தார். ஆனால் இப்படிப் பட்ட விழாக் காலங்களில் இந்த வகையிலே நாம் ஈடுபாடு கொள்வது நாமெல்லாம் ஒரு குடும்பத்திலே இருக்கின்றோம் என்ற பாசத்தையும், நாம் வைத்துக் கொண்டிருக்கின்ற பற்றுக்களை துலக்கிக் கொள்வதற்கும் இது நல்ல வழி செயலாக அமைகிறது'' என்றார்.

## 91. அரசியலுக்கு வராதீர்!
### பாரதிதாசனுக்கு அறிவுரை!!

இன்றைக்கு சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு 1946-ம் ஆண்டில் அண்ணு அவர்களின் பெரு முயற்சியால் புரட்கிக் கவிஞர் பாரதிதாசனுக்கு பெரியதோர் விழா நடத்தி, பொன்னுடை போர்த்தி, சுமார் 25000 ரூபாய் கொண்ட பொற்கிழி அளிக்கப்பட்டது சென்னையில். திருச்சியில் கூடிய திராவிடக் கழக மாநாட்டில் பாரதிதாசனுக்கு பணமுடிப்பு தரவேண்டும் என்று நிறைவேறிய தீர்மானத்தை செயல்படுத்த அண்ணு அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வந்தார்கள். அதனுல் பெரியாருக்கும் அண்ணுவுக்கும் சிறிது மனக்கசப்பு இருந்த நேரம். அதே காரணத்தை யொட்டி பெரியாருக்கும் புரட்சிக் கவிஞருக்கும் மனக்கசப்பு வளர்ந்து வந்தது.

விழா முடிந்து அன்று இரவு பாரதிதாசனும் அண்ணு அவர்களும் ஒரு குதிரை வண்டியில் ஏறிக் கொண்டு, அப்போது பாரதிதாசன் குடிஇருந்த திருவல்லிக்கேணிக்குச் சென்றுக் கொண்டிருந்தார்கள். அப்போது அண்ணு அவர்களைப் பார்த்து பாரதிதாசன் "இந்தப் பணத்தைக்கொண்டு நீயும் நானுமாக சேர்ந்து புதிய அரசியல் கட்சி ஒன்றை நடத்தலாம்" என்று சொன்னுர். அதற்கு அண்ணு அவர்கள் அவரிடத்தில் சொன்னுர்கள், "நீங்கள் தயவு செய்து அரசியலுக்கு வரவேண்டாம். இலக்கியத் துறையில் இருந்துக்கொண்டு கவிதைகளை எழுதி வாருங்கள் அரசியலில் நீங்கள் ஈடுபட்டால் உங்கள் கவிதையின் வாழ்வும், ஆறு மாதங்கள் வரையில்தான் இருக்கும்,

ஆகவே நீங்கள் அரசியலில் ஈடுபடாமல், நீங்கள் இந்தப் பணத்தைக் கொண்டு தமிழகத்தில் மட்டு மல்ல, இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் சுற்றிப் பார்த்து வாருங்கள்—வயல் வெளிகளையும், வளம் மிக்க இடங்களையும், உயர்ந்த கட்டிடங்களையும், சிறந்த காட்சிகளையும் பல்வேறு இடங்களுக்குச் சென்று கண்குளிரக் கண்டு வாருங்கள். நீங்கள் கண்ட கண் கொள்ளாக் காட்சிகளை கவிதையாக எங்களுக்குத் திருப்பித் தாருங்கள்; அவைகள் இலக் கிய கருவூலமாக இந்நாட்டில் நின்று நிலவும்; அவைகள் எங்களுக்காக அல்ல, இந்நாட்டிற்கு நாங்கள் அளித்த பொற்கிழியைவிட மாபெரும் கரு வூலமாக அவைகள் இருக்கும்'' என்று கேட்டுக் கொண்டார். அண்ணாவின் இந்த அறிவுரையைக் கேட்ட பாரதிதாசனுக்கு அண்ணாமீது சிறு வருத்தம் ஏற்பட்டது என்றாலும், அதற்குப் பிறகுதான் பாரதி தாசன் ''பாண்டியன் பரிசு'' போன்ற நல்ல நூல் களை நமக்கு அளித்தார். ஆனால் அண்ணாவின் விருப் பத்தை பாரதிதாசன் இறுதிவரை நிறைவேற்றாம லேயே மறைந்துவிட்டார்கள்.

## 92. அண்ணாவுக்கு மிரட்டல் கடிதம்!

அண்ணா எழுதிய வேலைக்காரி நாடகம் பல நாட் கள் வெற்றிகரமாக நடைபெற்று திரைப் படமாகவும் ஓடியதை பலரும் அறிவார்கள். இந்நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது அண்ணாவுக்கு மிரட்டல் கடிதம் வந்தது. அந்த நாடகத்தில் வேதாசல முதலி யார் என்பவரின் கெட்ட நடத்தையை எடுத்துக்

காட்டி இருந்தார். அதைப் பார்த்த ஒருவர்-தஞ்சை யைச் சேர்ந்தவர். மிகவும் ஆத்திரப்பட்டு போயும், போயும் கேவலமாக எழுத முதலியார் தானா கிடைத் தார் உங்களுக்கு? என்று கடிதம் எழுதியிருந்தார். அதே கதையில், வேலைக்காரி வன்னிய சமூகத்தை சார்ந்தவள் என்று எழுதியிருந்தார். அதைப் பற்றி தென்னாற்காட்டிலிருந்து ஒருவர் வன்மையாகக் கண் டித்துக் கடிதம் எழுதினார். எங்களது ஜாதியை இழுத்து கதை எழுதும் உம்மை தொலைத்துவிடு வோம் என்று அந்த இரண்டு கடிதம் எழுதியவர்களும் பயமுறுத்தி இருந்தனர். அப்படி இருந்தும் அண்ணா தஞ்சைக்கும்போய் — தென்னாற்காட்டிற்கும்போய் எந்தவித ஆபத்தும் இன்றியே வந்தார், கடிதம் எழுதி யவர்கள் ஒன்றும் செய்யவில்லை. சமுதாயத்தில் உள்ள இப்படிபட்ட குறுகிய எண்ணமுள்ள ஓரிருவ ருக்காக பயந்து நாம் நினைப்பதை எழுதாமல் இருக்கக் கூடாது, புண்பட்டுவிடும் என்று பயப்படக்கூடாது என்பது அண்ணாவின் கருத்து.

## 93. அண்ணாவின் ஓர் இரவு!

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராஜ பாகவதர் சிறையில் இருந்த நேரத்தில் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியின் புதிய நாடகக் கம்பெனி கிருஷ்ணன் நாடகக் கம்பெனி என்ற பெயரில் தஞ்சையில் நாடகங்களை நடத்திக் கொண்டி ருந்தது இதில் முதல் நாடகமாக அண்ணாவின் "வேலைக்காரி" அரங்கேற்றப் பட்டு பல நாட்கள் வெற்றிகரமாக நடத்தி, பல பேரறிஞர்களின் பாராட்

டுக்களையும் பெற்று வந்தது. அதற்கு அடுத்த நாடகத்துக்காக அவர்கள் மிகவும் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த பக்கம் சுற்றுப் பயணம் செய்துக்கொண்டிருந்த அண்ணா தஞ்சை நாடகக் கொட்டகையில் தங்க சென்றிருந்தார். நாடகப் பஞ்சத்தை அண்ணாவிடம் கூறி, அடுத்த நாடகம் உடனே வரவேண்டும் என்றும், இல்லையேல் கம்பெனி தொடர்ந்து நடக்காது என்றும் வருத்தப்பட்டார்கள். அண்ணாவும் உடன் ஒரு நாடகம் எழுதித் தருவதாக உறுதி கொடுத்துவிட்டு காஞ்சீபுரம் வந்து சேர்ந்தார்கள். நாடகம் நடத்துவோரோ அதிகப் பொருட் செலவில் உடை-சீன்கள் தயாரிக்க முடியாத பணக் கஷ்டத்தில் இருந்தார்கள். குறைந்த செலவில் நாடகம் தயாரிக்க வேண்டும். அண்ணாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அன்று இரவு கண்ணன் டாக்கீசில் கண்ணாம்பா, பி. யு. சின்னப்பா நடித்த கண்ணகி படம் நடந்துக் கொண்டிருந்தது. அண்ணாவும், காஞ்சி சி. வி. ராஜகோபாலும் இரவு 9 மணிக்கு படம் பார்க்கச் சென்றனர். ஏற்கனவே பலமுறை அண்ணா மகிழ்ந்த படம் இது. பாண்டியன் சபையிலே கண்ணகியின் ஆவேசமான உரையை கேட்டுவிட்டவுடனேயே திரும்பி விட்டார்கள். அப்போது திராவிடநாடு அலுவலகம் ஆடிசன் பேட்டையில் இருந்தது. இரவு 11 மணிக்கு மேல் அண்ணா பேனாவை எடுத்தார். காலை 6 மணிக்குள் கதை வசனம் நடிப்பதற்கு ஏற்றவகையில் உருவாகிவிட்டது. வழக்கமாக உறங்கிவிட்டு காலை 10 மணிக்கு எழுந்தார். பக்கத்தில் இருந்த சி. வி. ராஜகோபால், அண்ணாமலை போன்றவர்களைக் கூப்பிட்டு தெரியுமா ஐய்யா 'ஓர் இரவு' என்ற நாடகம் எழுதிவிட்டேன்

என்றார். அந்த ஓர் இரவு நாடகம்தான் பின்னல் நாடகமாக அரங்கேற்றப்பட்டு, திரைப்படமாகவும் வெளியிடப்பட்டது.

## 94. வேண்டாம் இந்த மந்திரி பதவி!

திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களை அறியாதார் இருக்கமாட்டார்கள். நமது அண்ணு அவர்களுக்கு திராவிட இயக்கத்தில் மதிப்பு ஏற்படுவதற்கு முன்பு சிறப்பாக விளங்கியவர் விசுவநாதம் அவர்கள். இந்தியா சுதந்திரம் அடைவது உறுதி என்ற நிலை அடைந்தவுடன் விசுவநாதம் அவர்கள், தமிழ் நாட்டுக்கு அமையும் மந்திரிசபை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு மாதிரி மந்திரிசபை பட்டியலை பெயர்களுடன் வெளியிட்டு இருந்தார்கள். வழி காட்டுபவர், தலைவர், துணைத் தலைவர், 22 பிரிவுகளுக்கு 22 மந்திரிகள் கொண்ட முழுக்க முழுக்க பார்ப்பனர் அல்லாத மந்திரிசபை பட்டியலை அப்போது அவர்கள் நடத்திவந்த 'தமிழர்நாடு' என்ற ஒரு துண்டு வெளியீட்டின்மூலம் எழுதியிருந்தார்கள். அதில் அண்ணுவுக்கு மந்திரி வேலை கொடுத்திருந்தார்கள், அதைப் பற்றி தனது 'திராவிடநாடு' வார ஏட்டில் 'அடித்தது பிரைஸ்' என்ற தலைப்பில் தன் கையெழுத்து இட்டு அப்பதவியை இராஜிஞமா செய்தார். ராஜிஞமா செய்வதற்கான காரணத்தை விளக்கி அண்ணு எழுதும்போது, "இந்த அற்புத நாடகத்திலே நானும் பங்குகொள்ள முடியாமைக்கு வருந்துவதுடன், ஏற்கனவே எனக்கு ஒரு கட்சியில் இடமும், அலுவலுகமும் இருப்பதால் நமக்கென்று

நண்பர் விசுவநாதம் ஒதுக்கிய மந்திரிப் பதவிக்கு வேறு நபரைத் தேர்ந்தெடுத்து அவருடைய அடுத்த கெஜட்டில் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறி மாதிரி மந்திரிசபையில் தனக்கு ஒதுக்கிய பதவியை ராஜிஞமா செய்தார் அண்ணு!

## 95. வ. ரா. விருப்பம் நிறைவேற வில்லை!

'அக்ரகாரத்தில் ஓர் அதிசய மனிதர்' என்று அண்ணுவால் பாராட்டப்பட்ட காலஞ் சென்ற வ.ரா அவர்களுக்கு பாரதியாரைப் பற்றிய பல தரப்பினரின் கருத்தையும் ஒரு சேர கேட்கவேண்டும் என்று ஆசை. அதிலும் அண்ணு அவர்களின் கருத்தை முக்கியமாகக் கேட்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினுர். "பாரதியாரைப் பற்றிய பலதரத்தாருடைய அபிப் பிராயத்தை அறிய வேண்டும் என்பது என்னுடைய நெடு நாளைய ஆசை. அந்த வாய்ப்பு விரைவில் கிடைத் தால் நன்ருக இருக்கும். அதிலும் முக்கியமாக நான் கேட்க விரும்புவது, முக்கியமாக மூன்று பேருடைய கருத்துக்களைத்தான். ப. நீலகண்டன், மற்ருென்று ப. ஜீவானந்தம், மூன்ருவதாக அண்ணுத்துரை. இந்த மூவரும் பாரதியாரை மூன்று கோணங்களில் காண் கிருர்கள் என்று தெரிகிறது. அப்படிப்பட்ட கருத்லைத நான் கேட்க வேண்டும். அதோடு இந்தக் கருத்தை நான் சமீபத்தில் கல்கியுடனும் பேசிக் கொண்டிருந்தேன். அவரும் இதை அறிய விரும்பினுர். அதற்காக சீக்கிரத்தில் என்னுடைய வீட்டில் ஒரு விருந்து ஏற்பாடு செய்து அதற்கு இவர்களை எல்லாம் அழைக்க இருக்கிறேன்" என்று அவரைக் காணச்

செல்பவரிடம் தன் ஆசையை வெளிப்படுத்திக் கொண்டு வந்தார்கள். அதன்படி 1946 மே-1ந்தேதி இரவு ஒரு விருந்து வ.ராவிஞல் ஏற்பாடாகி இருந்தது. அன்றைய தினம் மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் மே தினக் கூட்டத்தில் அண்ணு பேசிஞர். அந்த கூட்டத்தில் ஒருவராக வ. ரா. கலந்து கொண்டதுடன் விஷயத்தை சொல்லி அண்ணுவை அழைத்தார். எதிர்பாராத விதமாக அண்ணுவுக்கும் வேருெரு இடத்தில் முக்கிய விருந்து ஒன்று இருந்ததால் வேருெரு சமயம் வருவதாகக் கூறிவிட்டு சென்றுவிட்டார். இந்த விருந்துக்காக கல்கியும் ப. நீலகண்டனும் காத்திருந்தனர்.

## 96. பாடுபடுவது மந்திரி பதவிக்காகவா ?

திரு. டி. எஸ். அவிஞசிலிங்கம் செட்டியார் சென்னை மாநிலத்தின் கல்வி மந்திரியாக இருந்த சமயத்தில், ஒரு முறை எழுத்தாளர் மாநாட்டிலும், பின்னர் ஒரு பொதுக் கூட்டத்திலும் அண்ணுவைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்ருர். அப்போது அண்ணுவின் பேச்சையும் அவரது அறிவாற்றலையும் காதாரக் கேட்டு கண்குளிரக் கண்ட அவிஞசிலிங்கம் செட்டியார் அவர்கள், அண்ணுவைக் கட்டித் தழுவியபடி "அறிஞரான நீங்கள், கட்சி, கட்சி என்று ஏன் கட்டி அழுகிறீர்கள். இப்போதே காங்கிரசில் சேருவதாக கையெழுத்துப் போடுங்கள். கல்வி மந்திரியாக ஆக வேண்டும் என்ருலும் ஆகலாம். நீங்கள் கல்வி மந்திரியாவதற்காக நான் என்னுடைய பதவியை ராஜிஞமா செய்யத் தயார்" என்ருர்.

அதற்கு அண்ணு, "சுதந்திரம் பெற்ற நாட்டில் மக்கள் அடிமையாக இருப்பதை நீக்கத்தான் பாடு படுகிருேமே ஒழிய மந்திரி பதவிக்காக அல்ல" என்று அவினுசிலிங்கம் செட்டியாருக்கு சுடச் சுட பதில் தந்தார்.

## 97. அண்ணுவின் கருப்புச் சட்டை !

அண்ணு அவர்கள் திராவிடர் கழகத்தில் இருந்த போது, அவரை கருப்புச் சட்டைப் போட்டுத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் செய்தார்கள். திருச்சியில் நடந்த திராவிடக் கழகக் கமிட்டிக் கூட்டத்தில் கருப்புச் சட்டை போட்டுக் கொண்டால்தான் பேசலாம் என்ருர்கள். அண்ணு அவர்களும் சரி என்ருர். "பேச வேண்டுமென்று எனக்கு ஆசை இருக்குமானுல் நான் கருப்புச் சட்டை போட்டுக்கொண்டு வருகிறேன்; நான் பேச வேண்டுமென்று உங்களுக்கு ஆசை இருக்குமானுல் கருப்புச் சட்டைப்போடும்படி நீங்கள் என்னை வலியுறுத்த முடியாது" என்று சொன்னுர். பிறகு அண்ணு எந்த நாளும் கருப்புச் சட்டை போடவில்லை. பின்னர் 1948-ல் டாக்டர் சுப்பராயன் மந்திரியாக இருந்த காலத்தில், கருப்புச் சட்டைப் படைக்குத் தடை விதித்தபோது, அண்ணு கருப்புச் சட்டை போட்டுக்கொண்டு பேசப்போனுர். அந்த சட்டை கூட அவர் சொந்தத்துக்கு வைத்துகொண்டது அல்ல. அப்பொழுது நாவலர் இரா. நெடுஞ்செழியனிடம் இரவல் வாங்கிப் போட்டுக் கொண்டதாகும்.

அதற்கு அடுத்த நிர்வாகக் கமிட்டி கூட்டத்தின் போது கருப்புச் சட்டை இல்லாமல், அண்ணு உட்

கார்ந்து இருந்ததைக் கண்ட தோழர் நீடாமங்கலம் ஆறுமுகம், பெரியார் அவர்களிடம் "பார்த்தீர்களா ஐயா, அண்ணாத்துரை, கருப்புச்சட்டை போட்டுக் கொள்ளாமல் இருப்பதை" என்றார். அதற்குப் பெரியார் என்ன சொன்னார் தெரியுமா? "உடம்பேதான் கருப்பாயிருக்கிறதே இன்னும் கருப்புச் சட்டை எதற்குப் போடவேண்டும்?" என்று கேட்டாராம்.

## 98. அடிக்கு அஞ்சாத நெஞ்சுரம்!

1936-ம் ஆண்டு, இராமநாதபுரம் மாவட்டக் கழகத் தேர்தல் நடைபெற்றது. அதில் பள்ளத்தூர் தொகுதிக்கு குமாரராஜா சர். முத்தையா செட்டியாரின் மைத்துனர் சி. வி. சி. டி. வெங்கிடாசலம் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டார். அவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் நாகப்பசெட்டியார் என்பவர் நிறுத்தப்பட்டிருந்தார்.

காங்கிரஸ் பிரச்சாரத்தை தீவிரமாக முடிக்கிவிட்டு, எதிர்க் கட்சியினரை வசைமாரி பொழிந்துக் கொண்டிருந்தார். அப்பொழுது காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவர்கள் இராஜா சர். அண்ணாமலை செட்டியாரின் கானாடுகாத்தான் மாளிகையின் முன்னால் நடத்திய கீழ்த்தரமான பிரச்சாரம் அவரை கதிகலங்க வைத்தது. அவர்கள் நடத்தும் பிரச்சார முறையைக் கண்டு கண்ணீர் வடித்தார்.

இந்தப் பிரச்சாரத் தூற்றுதல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க எதிர்ப் பிரச்சாரம் நடத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் இராஜா சர். அண்ணா

மலைச் செட்டியார். சென்னையில் இருக்கும் நீதிக் கட்சியின் தலைமை நிலையத்துக்கு செட்டி நாட்டிலிருந்து தாக்கீது வந்தது. காலஞ்சென்ற தமிழ்ப் பண்டிதர் திரு. ஞானசம்பந்தனார் தலைமையில் அண்ணா உள்பட பலர் பிரச்சாரதிற்காகச் சென்றனர். இவர்கள் அங்கு சென்று பல்வேறு ஊர்களில் பிரச்சாரக் கூட்டங்களை நடத்திவிட்டு அழகாபுரி என்ற சிற்றூருக்கு வந்தனர்.

அழகாபுரி பொதுக்கூட்டத்தில் சிதம்பரம் என். தண்டபாணிப் பிள்ளை பேசிவிட்டு அமர்ந்தார். அவர் பேசி முடிந்ததும் அடுத்து, அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். அப்போது கூட்டத்திற்கு ஒலிபெருக்கி இல்லாத காலம். ஆகவே அண்ணா அவர்கள் முன்னால் போடப்பட்டிருந்த மேஜைமேல் ஏறி நின்றுக்கொண்டு பேசத் துவங்கினார். கூட்டத்திற்கு பின் புறம் இருந்த மதிற்சுவருக்கு அப்பால் இருந்து அண்ணாவின் முதுகில் சாணி உருண்டை ஒன்று வந்து தாக்கியது. அந்த சத்தம் கேட்ட அருகில் இருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். அண்ணா அவர்களோ தனது முதுகில் வலி அதிகம் இல்லாத காரணத்தால் வந்து விழுந்தது கல்லடி அல்ல, என்பதை உணர்ந்துக் கொண்டு எதுவும் நடைபெறாதது போலப் பேச்சைத் தொடர்ந்து பேசிக்கொண்டே போனார். அந்த சம்பவத்தைக் கண்ட பலரும் அண்ணாவின் தைரியத்தை உணரத் தொடங்கினர்.

## 99. காங்கிரஸ் கொடியை எரித்தார்!

செட்டிநாட்டில் நடைபெற்ற தேர்தல் முடிவுக்குப் பிறகு இருதரப்பினருக்கும் பகை வளர்ந்து,

காங்கிரசுக்கும், அது நீதிக்கட்சிக்குமிடையில் பெரிய தோர் போராட்டமாகவே உருவாகி விட்டது. அப்போது அண்ணாவும் அங்கு தங்கி இருந்து நடக்கும் சம்பவங்களை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். இரு கட்சிகளுக்கும் இடையே ஏற்பட்ட எதிர்ப்பு கட்சிக் கொடிவரையில் வந்துவிட்டது.

ஒரு நாள் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பறந்துக் கொண்டிருந்த நீதிக்கட்சியின் கொடியைப் பிடிங்கிக் கொண்டு சென்று விட்டார்கள். இதைக் கேள்விப்பட்ட சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் கொதித்து எழுந்தனர். அப்போது காலஞ் சென்ற எஸ். சத்தியமூர்த்தி அங்கே காங்கிரசு தேர் தல் அலுவலகத்தில் தங்கி இருந்தார். சுயமரியாதைத் தொண்டர்கள் அங்கு சென்று அந்த அலுவலகத்தில் பறந்து கொண்டிருந்த காங்கிரசுக் கொடியைப் பிடிங் கிக் கொண்டுவந்து பொதுக்கூட்டத்தில் அந்தக் கொடி எரிக்கப்படும் என்று அறிவித்தனர்.

ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் காங்கிரசுக் கொடி ஏன் கொளுத்தப்படுகிறது? என்பதுபற்றி சுய மரியாதை இயக்கத்தைச் சேர்ந்த தோழர்கள் பலரும் பேசிய பின்பு அண்ணா அவர்கள் கொடி கொளுத்தும் சடங்கை செய்து முடித்தார்.

கொடியைக் கொளுத்துவதற்கு முன்பு அண்ணா அவர்கள் பேசும்போது.

''என் கையில் இருப்பது தாயின் மணிக்கொடி! இதைத் தீமூட்டும் சடங்கை செய்து முடிப்பதற்கு எனக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்தச் சடங்கை நான் செய்து முடிக்கவே இப்போது உங்கள்

முன் நிறுத்தப்பட்டிருக்கிறேன். காங்கிரஸ் தோழர்கள், தங்கள் தாயின் மணிக்கொடியை காக்க விரும்பினால், இந்த மேடைமீது ஏறிவந்து நின்று இதைத் தீயிட்டுக் கொளுத்தக் கூடாது என்பதற்கான காரணங்களைக்கூறி தீயிட்டுக் கொளுத்தும் நிகழ்ச்சி நடைபெறாமல் தடுப்பதற்கு நான் அனுமதிக்கிறேன். வாதாடத் துணிந்தவர்கள் தாராளமாக மேடைக்கு வரலாம்! ஒருமணி நேரத்திற்குள் அவர்களை வாருங்கள், வாருங்கள் என்றழைக்கின்றேன்'' என்று கூறி தான் அதைக் கொளுத்துவதற்கான காரணங்களையும் விளக்கிப் பேசினார்.

அண்ணா அவர்கள், தாயின் மணிக்கொடியைக் கையில் ஏந்திய வண்ணம் மேடையில் நின்று அறை கூவல் விடுத்தக் காட்சியைக் காங்கிரஸ் கட்சியில் செல்வாக்குடனும் சிறப்புடனும் விளங்கிக் கொண்டிருந்த பலர் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் ஒருவர்கூட, மேடைமுன் வந்து கொடியைக் கொளுத்தக்கூடாது என்பதற்காகக் காரணங்களைக் கூற முன்வரத் துணியவில்லை.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அண்ணா குறிப்பிட்ட ஒருமணி நேரமும் முடிந்தது. அண்ணா அவர்கள் கூறியபடியே, தாயின் மணிக்கொடிக்குத் தன் கையால் தீ மூட்டினார். வெற்றிகரமாக அந்தச் சட்டங்கும் நடைபெற்று முடிந்தது.

## 100. ஏழைகள் பிழைப்பைக் கெடுக்காதே !

1940-ம் ஆண்டில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்துக்கு பெரியார் தலைவரானவுடன் பெரியாரும்

அண்ணாவும் ஒன்றாக இருந்த நேரம். அப்போது பெரியார் அவர்கள் ஈரோட்டிலிருந்து சென்னைக்கு வரும் போது அழைத்து வரவும், ஈரோட்டிற்கு போகும் போது வழி அனுப்பிவைக்கவும், சென்னை ரயில் நிலையத்திற்கு அண்ணாவுடன் என். வி. நடராசன் போன்ற மற்றும் சிலர் செல்வது வழக்கம்.

பெரியார் அவர்கள் கொண்டு செல்லும் பெட்டி படுக்கை உள்ளிட்ட சாமான்களை இவர்கள் ஆளுக்கொன்றாக எடுத்து வருவார்கள். ரயில் நிலையத்திலுள்ள போர்ட்டர் தோழர்கள் ஓடோடி வருவார்கள் சாமான்களை எடுத்துச் செல்ல, இவர்கள் எடுத்துச் செல்வதைக் கண்டு ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வார்கள்; பெரியார் அவர்களோ இதனால் எட்டணா மிச்சம் என்று மகிழ்ச்சியடைந்தார். ஆனால் அண்ணா அவர்கள் மகிழ்ச்சியடைந்தாரில்லை. ஒரு சமயம் அண்ணா அவர்கள் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, "நாமெல்லாம் மூட்டை சுமந்தால் போர்ட்டருக்கு ஒரு ரூபாய் கிடைக்கலாம், அந்தப் பிழைப்பையும் நாம் கெடுக்க வேண்டுமா? ஓரளவு வசதி படைத்த அய்யா அவர்கள் எட்டணா கொடுப்பதால் என்ன நஷ்டம் வந்து விடும்? வசதியில்லாதவர்கள், அவரவர்களே தங்களது மூட்டை முடிச்சுகளைச் சுமந்து தான் செல்ல வேண்டும். அய்யாவுக்குத் தொண்டு செய்வதாய் எண்ணி ஏழை போர்ட்டர்களின் பிழைப்பை இனி மேல் கெடுக்காதீர்கள்" என்று சொன்னார். அதிலிருந்து பெரியார் அவர்களை அழைத்து வரச் செல்பவர்கள் போர்ட்டரிடமே படுக்கை பெட்டி முதலியவைகளைக் கொடுத்து எடுத்து வரச் சொல்லுவார்கள்.

## 101. மேக்கப் கோலத்தில் அண்ணா!

ஈரோட்டில் டி.கே. சண்முகம் நாடக கம்பெனி யார் முகாமிட்டு நாடகங்களை நடத்திக் கொண்டிருந் தார்கள். அந்த நாடகக் குழுவில் எஸ்.எஸ். ராஜேந் திரன் ஒரு நடிகர். அப்போது அவருக்கு வயது சுமார் 10 இருக்கும். அவருக்கு அண்ணா அவர்களை பார்க்க வேண்டும் என்கிற ஆசை. ஆனால் அதற்கு வாய்ப்பு கிட்டாமலே இருந்தது. அதே சமயத்தில் ஈரோட் டில் அண்ணாவின் முதல் பிரசார நாடகமான 'சந்திரோதயம்' நாடகத்தை அரங்கேற்றம் செய் தார்கள். அன்றைய நாடகத்துக்கு தலைமை வகித்த வர் தந்தை பெரியார் அவர்கள். ராஜேந்திரன் அது வரை அண்ணாவைப்பற்றி அதிகம் கேள்விப் பட்டுள் ளார், ஆளைப் பார்த்தது கிடையாது.

ஈரோட்டில் நாடகம் நடத்துவதற்காக இக்குழு அங்கு சென்றது. அங்கே அண்ணா ஒரு நாடகம் நடத்த வந்தார். குழுவின் தலைவர், டி. கே. சண்முகம் இவர்களைப் பார்த்து, "டேய், பசங்களா, நமக்கு வேண்டியவங்க இங்கே நாடகம் நடத்த வர்ராங்க. நீங்கதான் மேக்கப் செய்ய வேண்டும். அதுவும் அண்ணா, தானே கதையை எழுதி நடிக்கவும் செய் கிறார்" என்றார்.

இவர் சொன்னது போலவே ஒப்பனையும் செய் தார்கள். ஒருவர் மேக்கப் செய்து கொண்டார். அவரை ராஜேந்திரன் கழுத்தை இப்படித் திருப்பு, அப்படித் திருப்பு, முகத்தை இப்படிக் காட்டு அப் படிக் காட்டு என்று படாதபாடு படுத்திக் கொண் டிருந்தார். இடையிடையே அண்ணா வருகிறார

என்று அவரைப் பார்க்க வழி மேல் விழி வைத்துக் கொண்டிருந்தார். நேரம், அதிகமாகியதும், ராஜேந் திரன் மேக்கப் போட்டுக் கொண்டவரிடம் 'அண்ணு எப்போது வருவார்' என்று கேட்டார்.

உடனே அவர், 'நான் தான் அண்ணு' என்ருர். ராஜேந்திரன் கை கால்கள் இயங்க மறுத்துவிட்டன. செயலற்று 5 நிமிடம் நின்று விட்டார். அண்ணு அவர்களோ ராஜேந்திரனுக்கு ஒருவாறு தைரியம் கொடுத்து மேக்கப்பை பூர்த்தி செய்து கொண்டார்.

## 102. அண்ணு சாவதற்கு அனுமதிக்க மாட்டோம்!

1943-ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டத்தில் திருவத்திபுரத்தில் முதன் முதலாக சந்திரோதயம் நாடகம் நடத்தப்பட்டது. அந் நாடகத்தில் அண்ணு அவர்களும் இயக்கத் தோழர்களும் "திராவிடநாடு" பத்திரிகைத் தொழிலாளர்களும் நடித்தனர். அதில் அண்ணு அவர்கள் ஆண்டி, அப்துல்லா, துரைராஜ், தொழிலாளி, மடாதிபதி, ஜமீன்தார் ஆகிய ஆறு வேடங்களில் நடித்தார். தாம் ஒரு சிறந்த நடிகர் என்பதை நிரூபித்ததுடன் புதுப் புது சீர்திருத்த நாடகங்கள் உருவாவதற்கும் சீர்திருத்த நடிகர்கள் கிளம்புவதற்கும் இதன் மூலம் அண்ணு மூலகாரண மாஞர்.

1943-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சிதம்பரத் தில் அண்ணுவின் "சந்திரோதயம்" நாடகம் நடை பெற்றது. அதில் துரைராஜாக நடித்த அண்ணு ஒரு காட்சியில் விஷம் குடிப்பதாக இருந்தது. அண்ணு

அதற்குரிய வசனத்துடன் விஷக் கோப்பையை கையில் எடுத்து குடிக்கத் தொடங்கினார். உடனே "நிறுத்துங்கள்...... நிறுத்துங்கள்" என்ற குரல் பயங்கரமாக ஒலித்தது கண்டு அண்ணுவும் நாடகத்துடன் ஒன்றிப் போயிருந்த ரசிகர்களும் திடுக்கிட்டனர். பிறகுதான் புரிந்தது; அப்படிக் கத்தியவர் நாடகத்திற்கு தலைமை வகித்த திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்களே என்பது அவர் கத்தியதோடு நில்லாமல் மடமட வென்று அரங்கில் நுழைந்து "வேண்டாம். நீங்கள் விஷம் குடிக்க வேண்டாம். அண்ணு நீங்கள் நினைத்தால் இதே (துரைராஜ்) போல ஜமீன்தார் ஆகவே வாழலாம். நீங்கள் விஷம் குடிப்பதை நான் அனுமதிக்கவே மாட்டேன்" என்று கூச்சலிடத் தொடங்கினார். அண்ணுவும் மற்றையோரும் அவரை அடக்குவதற்குள் போதும் போதும் என்ருகிவிட்டது. பார்த்து கொண்டிருப்பது என்பதை மறக்குமளவுக்கு அண்ணு உணர்ச்சிகரமாக நடித்ததே காரணம்.

இடைவேளையின்போது நாடகத்தைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். அண்ணுவின் நண்பர் திருவொற்றியூர் சண்முகம், நாடகத்தின் முடிவில் வேடம் புனைந்த அண்ணு விஷம் குடித்து மாண்டு போவதாக அமைத்திருப்பது தன் மனதுக்கு வேதனை தருகிறது என்றும் அதனால் அதை மாற்றியமைக்க வேண்டும் என்றும் விமரிசித்தார். அண்ணுவிடம் அன்பு கொண்டிருந்த சபையோரும் அதை ஆமோதித்து ஆரவாரம் செய்தனர்.

பாதி நடந்து விட்ட நாடகத்தின் முடிவை அதற்காக மாற்றிவிட முடியுமா? நாடகம் முடிந்த பிறகு

யாரும் எதிர்பாராமல் ஒரு முடிவு செய்தார். நாடகத்தில் அண்ணா மரணமுற்றதாக மனம் வருந்திய சபையோரின் கவலை நீங்கும் வண்ணம் ஒரு நொடியில் வேடத்தைக் களைந்து விட்டு வந்து தானே நன்றி சொல்வதற்காக மேடையில் தோன்றினார்.

## 103. தூக்கிலே ஈழத்து அடிகள்!

வேலைக்காரி நாடகத்தை எழுதி முடித்தவுடன் அண்ணாவே பிரதான பாகத்தில் நடிப்பதற்கான ஏற்பாடுகளை செய்தார். அதற்கான முறையில் வசனங்களை படித்துப் பயிற்சி செய்து கொண்டிருந்தார். வேலைக்காரி நாடகத்தில் வரும் ஆனந்தன் பாகத்தை அண்ணா ஏற்றுக் கொண்டார்கள். பாடத்தைப் படிக்கும் பொழுது ஒத்திகை பார்ப்பது போலவே, அண்ணா அந்த பாகத்தை நடிக்க முயன்றார்.

வேலைக்காரி நாடகத்தில் வெளிநாடு சென்ற ஆனந்தன், சிறிது பணம் சேர்த்துக் கொண்டு, தன் அப்பாவைக் காண வேண்டுமென்ற ஆவலுடன் வருகிறான். வீட்டிற்குள் வரும் பொழுது, தற்கொலை செய்து கொண்டு ஊசலாடுகின்ற தந்தையின் பிணத்தைத்தான் அவன் காண்கிறான். ஆனந்தன் அழுது புலம்புகிறான் யாரால் இந்தக் கொடுமை நிகழ்ந்தது எனத் தெரிந்ததும் கொந்தளிக்கிறான்; கோபத்துடன் பேசுகிறான். பழிக்குப் பழி எனத் துடிக்கிறான். உணர்ச்சி மிக்க பேச்சும் நடிப்பும் சேர்ந்த கட்டம்.

இந்தக் கட்டத்தில் வரும் பொழுது யாராவது

தொங்குவது மாதிரி இருந்தால் தான் உணர்ச்சியுடன் பேச முடியும் என்று அண்ணா சொன்னார். அப்போது திராவிட நாடு அலுவலகம் ஆடிசன் பேட்டையில் ஒரு மாடியில் இருந்தது. வெளிக்கதவைத் தாளிட்டு விட்டு ஈழத்து அடிகளைக் கூப்பிட்டார்கள். இந்தத் தூக்கில் நீங்கள் தொங்கவேண்டும் என்றார். அறையில் ஒரு உத்தரத்தில் கயறு கட்டி விடப்பட்டிருந்தது. அடிகளுக்கு ஒன்றும் புரியவில்லை, வேலைக்காரி நாடகத்தில் வரும் கட்டத்தை விளக்கினார் அண்ணா, அவரிடம் நீங்கள் தொங்குகிற பிணமாக நடிக்க வேண்டும் என்றார். முதலில் அவருக்குப் பிடிக்கவில்லை. வேலை இருக்கிறது என்று நழுவப் பார்த்தார். பிறகு வற்புறுத்தி அவரை இணங்கச் செய்தனர். ஒரு நாற்காலியைப் போட்டு அவரை ஏறி நிற்கச் செய்து மேலாகக் கயிறை கழுத்தில் போட்டு இரு கைகளால் உத்தரத்தில் போட்டு தொங்கச் செய்த பிறகு, ஆனந்தன் பாகத்தில் அண்ணா அவர்கள் அறைக்குள் வந்தார், பதைப்புடன் அழுகுரலில் பேச ஆரம்பித்தார். அந்தக் கட்டத்தில் வரும் பேச்சு சிறிது நீளமானது உத்திரத்தைப் பிடித்துக் தொங்கிக் கொண்டிருந்த அடிகளுக்கு கைவலிக்க ஆரம்பித்தது. அவர் திரும்பி போதுமா? போதுமா? என்று கேட்க ஆரம்பித்தார். பிணமாக இருக்க வேண்டியவர் இப்படி பரிதாபமாகப் பேசியதும் பக்கத்தில் இருந்தவர்களுக்கு சிரிப்பு வந்தது. அண்ணாவுக்கும் சிரிப்பு வந்தது. அடிகள் கீழே இறங்கி விட்டார்.

"ஐயோ! அப்பா இறந்து விட்டீர்களே இவனைப் பார்க்கவும் கூடாது என்று மரக்கிளை தவிர வேறு வழியில்லை என்று தற்கொலை புரிந்து கொண்டீர்களா?" என்று மகன் கூறி அழும் போது, பிணமான தந்தை

போதுமா! போதுமா! என்று கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி இருக்கும். அண்ணா உட்பட அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

## 104. திரௌபதியிடம் கிருஷ்ணன் லீலை!

"சந்திரமோகன்" நாடகத்தில் அண்ணா அவர்கள் காகபட்டர் வேடந்தாங்கி, அப்பகுதியைச் சிறப்புற ஆக்கினார். காகப் பட்டருக்குப் பிரதம சீடனாக ரங்கு என்பவன் வருவான். அதில், திரௌபதியைப் பற்றிய உரையாடல் காகப்பட்டருக்கும் ரங்குவிற்கும் நடைபெறும். "திரௌபதிக்கு ஐந்து கணவன்மார்கள். ஒரே சமயத்தில் தருமர் சொக்கட்டான் ஆடவும், பீமன் சாப்பாடு போடவும், அர்ச்சுனன் உலாவப் போகவும், சகாதேவன் தரும நூல் படிக்கவும், நகுலன் குதிரை சவாரி செய்யவும் கூப்பிட்டால் அவள் என்ன செய்வாள்?" என்று காகபட்டர் ஒரு கேள்வி கேட்பார்.

"என்ன செய்யமுடியும்! ரொம்பச் சங்கடந்தான்!" என்பான் ரங்கு.

"நினைப்பதற்கே இவ்வளவு சங்கடம் என்கிறாயே, இதைப் போல எவ்வளவு சங்கடங்களை அந்தப் பதிவிரதைத் தாங்கியிருப்பார்!" என்பார் காகப்பட்டர்.

"என்ன செய்தாள், ஸ்வாமி?" என்று கேட்பான் ரங்கு.

"திரௌபதி உடனே கிருஷ்ணபரமாத்மாவை

நினைத்துக் கொண்டாள். அப்பொழுது கிருஷ்ண பரமாத்மா ருக்மணியுடன் ஊஞ்சலில் உட்கார்ந்து சல்லாபித்துக் கொண்டிருந்தார். கிருஷ்ணபரமாத்மா யாருடன் இருந்தார் ?" என்று சீடனைக் காகப்பட்டர் கேட்பார். "ருக்மணியுடன் !" என்று ரங்கு சொல்ல வேண்டும்.

ஆனால் ஒரு நாள் 'சந்திரமோகன்' நாடகத்தில் இந்த கட்டம் வந்த பொழுது, "கிருஷ்ண பரமாத்மா யாருடன் இருந்தார்?" என்று காகபட்டர் கேட்ட பொழுது "ருக்மணியுடன்" என்று சொல்வதற்குப் பதில், ரங்கு வேடம்போட்டவர், 'திரௌபதியுடன்'! என்று தவறிச் சொல்லி விட்டார். மிகத் தவருன பதில்! நாடக மேடையில், பக்கத்தில் இருப்பவர் களுக்கு ரங்கு சொன்ன பதில் தவருனது, பாடத்தில் இல்லாதது என்று தெரியும்! காகப்பட்டர் வேடத் தில் வேறு யாரும் இருந்திருந்தால் திகைத்துப் போயி ருப்பார்கள். ஆனால் அண்ணு சமாளித்துக் கொண்டு "ஏண்டா மண்டு! ராதா, ருக்மணி, சத்தியபாமா, ஆயிரம் கோபிகைகள் இவ்வளவு பேரும் இருப்பது கிருஷ்ண பாமாத்மாவுக்குப் போதாதென்று, திரௌ பதியையும் அவருடன் அனுப்பி வைத்துவிட்டாயா?" என்று சொன்னுர்.

கைதட்டலில் கொட்டகை அதிர்ந்தது. ரங்கு வேடத்தில் இருந்தவன் பெரு மூச்சு விட்டான். "தெரியாத்தனமாகச் சொல்லி விட்டேன். நான் மண்டு, ஸ்வாமி!" என்று நிலைமையைச் சமாளிப்ப தற்காக அண்ணு அவர்கள் சேர்த்துக் கொண்ட இந்த பதில் பன்பு பாடமாகவே நாடகத்தில் சேர்ந்து விட்டது.

நாடகத்தில் பலருக்கு பாடங்கள் தவறிப் போய் விடுவதுண்டு. அண்ணா அவர்கள் அவற்றை தெரிந்து ஏதாவது கேள்வி பதில் தந்து சமாளித்துக் கொண்டு விடுவார்கள்.

## 105. ரோமாபுரி ராணிகளும், கம்பரசமும்!

திராவிட நாடு இதழில் கட்டுரையாக வெளி வந்த ரோமபுரி ராணிகளும், கம்ப ரசமும் 1947-ல் புத்தக ரூபத்தில் வெளியிடப்பட்டது. இதைப் படித்த அண்ணாவின் எதிரிகள் கழகத்தின் மீது மாசு கற்பிக்க வேண்டும் என்பதற்காக இந்த நூல்களை எடுத்து வைத்துக் கொண்டு மயிர்பிளந்து விமர்சனம் புரிந்தார்கள். கற்புக்கரசிகளான மண்டோதரியும், மங்கையர்கரசியும், கண்ணகியும், காரைக்கால் அம்மையாரும் பிறந்த தமிழகத்தில் 'குச்சுக்காரி களான ரோமாபுரி ராணிகளை அழகாக ஜோடித்து அறிமுகப் படுத்துவதா? இதுதான் அறிஞரின் செயலா? என்று கண்டனங்களைத் தொடுத்தனர். அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் எதிர்ப் பாளர்களுக்கு கொடுத்த விளக்கத்தால், எதிரிகளின் எண்ணம் தவிடு பொடியானது. அண்ணா அப்போது கூறினார், "ரோமாபுரி ராணிகளின் காமரசக் களஞ் சியம், அந்த அரசிகளின் வாழ்க்கை, அதன் பயனாக அரசு அழிந்தது என்பதை முன்னுரையில் கூறி விட்டு, போக போக்கியத்தில் மிருக இயல்புடன் புரள்வோர், நாடாள்வோராக இருக்கக் கூடாது என்று எச்சரிக்கவே இந்தப் புத்தகம் தீட்டினேன்" என்பதை விளக்கினார். "எனவே காமரசத்தைப்

போற்றியதாகவோ, பாராட்டுவதாகவோ, அதனை முன் மாதிரியாகக் கொள்ளவேண்டுமென்று சிபாரிசு செய்ததாகவோ, என் மீது குற்றம் சுமத்த காரண மில்லை. ரோமாபுரி ராணிகள் கம்பர் ஏடு போல கடவுள் கதையல்ல; பஜனை ஏடல்ல. புண்ய கதை யாகவும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும் பெரும் துணையாகவும், பெருமாளின் அருளைப் பெற்றுத் தரவல்ல புனித ஏடாகவும் கூறப்படும் இராம காதையிலே ஏன் காமரசம் கலக்கின்றார் கம்பர் என்பதே என் கேள்வி. அந்தக் கேள்வியும், கண்டனமும் நான் ரோமாபுரி ராணிகள் வெளி யிட்டதால் பயனற்றுப் போய்விடாது" என்று எதிர் தாக்குதல் தொடுத்தார் அண்ணா.

## 106. உண்மையான சீடன்!

யார் ஆதரித்தாலும் ஆதரிக்கா விட்டாலும் தன் சொந்தக் கருத்தைக் கூறுவதில் எப்போதும் அண்ணா அவர்கள் பின் வாங்கியது இல்லை. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தை துக்க நாளாகக் கொண்டாட வேண்டு மென்று பெரியார் அவர்கள் யாரையும் கலக்காமல் முடிவு செய்து அறிக்கை வெளி யிட்டார்கள். இதை அண்ணா ஏற்க வில்லை. ஒரு இரவு பூராவும் பன்னி பன்னி எடுத்துரைத்தார். வருங்காலத்தில் நாடு நம்மை இதனால் இழிவாகக் கருதக் கூடும் என்றும் கூறினார். கடைசியாக என். வி. நடராசன் மூலம் பத்திரிகையிலாவது மேற் கொண்டு எதுவும் துக்க நாள் பற்றி எழுத வேண்டா மென்றும் வேறு நாளைக் குறிப்பிட்டு அன்று வேண்

டுமாறாலும், துக்க நாள் கொண்டாடலாமென்றும் குறிப்பிட்டார், ஏற்கவில்லை. பெரியார் இந்த முடிவை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று தனது திராவிட நாடு இதழில் நீண்டதொரு அறிக்கை வெளியிட்டார். சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டும் என்கிற தனது கருத்தை எழுதி, பத்திரிகையில் அச்சடிக்கு முன், அதை நண்பர் என். வி. நடராசனிடத்தில் கொடுத்து, 'தயவு செய்து இதை குருசாமியிடம் எடுத்துச் சென்று காட்டி வாருங்கள்' என்று அனுப்பி வைத்தார். அதைத் தோழர் எஸ். குருசாமி பார்த்தார். அவர் அப்போது விடுதலை ஆசிரியராக இருந்தார். அவர் அதைப் படித்த பிறகும் 'பெரியார் செய்த முடிவு முடிவானது தான். அதை மாற்ற முடியாது' என்று சொல்லியனுப்பி விட்டார். அப்போது அண்ணா அவர்களோ தனி ஆள். யார் யார் தன் கருத்தை ஆதரிப்பார்கள் என்று பார்த்து இந்த எதிர்ப்பில் ஈடுபட வில்லை. அந்த நேரத்தில் அண்ணா அவர்கள் அரசியல் துறவறத்துக்கு தயாராக இருந்தார். 'என் மனதுக்குப் பட்டது சொன்னேன்; நம்மைப் போல் நான்கு பேர் சொல்ல வில்லையே', என்றும் அண்ணா கவலைப்பட வில்லை. அப்போது அண்ணா நினைத்துக் கொண்டாராம் 'பெரியாருக்கு உண்மையான சீடர் நாம் தான்' என்று. ஏன் என்றால் பெரியாரும் தனக்குச் சரி என்று பட்டதை தைரியமாக கூறக்கூடியவர். அதைப் போலத் தான் அண்ணாவும் அந்த நேரத்தில் நடந்துக் கொண்டார்கள்.

## 107. தேவர்கள் பிடித்த சுருட்டு!

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் படத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஒருவரின் வீட்டுக்கு

அண்ணாவும், சம்பத்தும் சென்றிருந்தார்கள். அந்த வீட்டில் இருந்த ஒரு சிறு பையன், வான மண்டலத்திலே உள்ள நட்சத்திரங்களைப் பார்த்து, 'மாமா, அது என்ன?' என்று சம்பத்தைப் பார்த்துக் கேட்டான். அதைப் பற்றிச் சொன்னால் அந்தச் சிறுவனுக்குப் புரியாது என்ற காரணத்தால் சம்பத் அதற்கு 'அதுவா?' என்று கேட்டு, 'தேவலோகத்தில் தேவர்கள் சுருட்டுப் பிடிக்கிறார்கள்' என்று சொன்னார். அதை அந்தச் சிறுவன் உண்மை என்று நம்பி, அவனது தோழர்களான மற்ற சிறுவர்களிடமும் சொன்னான். பின்னால் அந்தச் சிறுவன் லயோலா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது—சம்பத் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, சம்பத்தைப் பார்த்து அந்தச் சிறுவன், ''மாமா என்ன நட்சத்திரத்தைப் போய் தேவர்கள் சுருட்டுப் பிடிக்கிறார்கள் என்று சொன்னீர்களே' என்று கேட்டான். அண்ணா அப்போது சொன்னார், 'உனக்கு அந்த சின்ன வயதில் புரிவதற்காக அப்படி சம்பத் சொன்னார்' என்று வேடிக்கையாகக் கூறினார்.

## 108. முட்டாள்கள் தேவை!

1948-ல் தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாட்டிற்கு அண்ணா போகவில்லை. அப்பொழுது அண்ணாவுக்கும், பெரியாருக்கும் கொள்கை குழப்பத்தில் மனக் கசப்பு ஏற்பட்டு இருந்த சமயம். அதற்குப் பின்னால் மதுரையில் திராவிடர் கழக கூட்டமொன்று நடைபெற்றது.

அதில் அண்ணா பேசினார். பேசி முடிக்கும் தருவாயில் பல கேள்வித்தாள்கள் மேடைக்கு வந்தன. ஒவ்வொன்றாக வாசித்துக் காட்டி பதிலும் சொல்லிக் கொண்டே வந்தார் அண்ணா. "தூத்துக்குடி மாநாட்டில் முட்டாள்கள்தான் கட்சிக்குத் தேவை என்று பெரியார் சொல்லியிருக்கிறாரே! இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்ற கேள்வியை வாசித்த வுடன் கூட்டத்தில் கொஞ்சம் பரபரப்பு ஏற்பட்டது. பெரியாரை தாக்கும் வகையில் பதில் சொல்லி விடுவாரோ என்று கழகத் தோழர்களிலேயே பலர் கலவர மடைந்தனர். பரபரப்பு அடங்குவதற்குள் ளாக, தமக்கே உரிய பாணியில் ஒரு சிட்டிகைப் பொடியை நாசியிலே ஏற்றிக்கொண்ட அண்ணா கீழ்க் கண்டவாறு பதில் சொன்னார்.

"பெரியாரவர்கள் மெத்தச் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். முட்டாள்களைப் புத்திசாலி களாக்குகிற கட்சி திராவிடர் கழகம். ஆகவேதான் முட்டாள்கள் தேவைப்படுகிறார்கள். மற்ற கட்சி களுக்கோ—பாவம்—அறிவாளிகள் தேவைப்படுகிறார் கள். எதற்கு? அந்த கட்சிகளிலுள்ள முட்டாள் களைப் புத்திசாலிகளாக்குவதற்கு!"—அண்ணாவின் பதிலைக் கேட்டு அனைவரும் ஆச்சரியப்பட்டுப் போயினர்.

## 109. முதல் நகரசபை வரவேற்பு!

1948 இறுதியில் ஈரோட்டில் திராவிடர் கழகத் தனி மாநாடு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில்

நடைபெற்றது. இம்மாநாட்டிற்கக அண்ணாவும், திரு. வி.க. அவர்களும் சென்றிருந்தார்கள். பெரியார் அவர்கள் ஈரோடு நகரசபையினரை. திரு. வி. க. அவர்களுக்கு மட்டுமன்றி அண்ணாவுக்கும் வரவேற்பிதழ் வாசித்தளிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அது அண்ணாவுக்குத் தெரியாது. அண்ணா அவர்கள் ஈரோடு சென்றதும், பெரியார் தனியாக அழைத்துப் போய் அகமும் முகமும் மலர அண்ணாவிடம் இந்த ஏற்பாடு பற்றிக் கூறினார். அதற்கு அண்ணா அவர்களோ ஏன் ஐயா இதெல்லாம் என்றார். அப்படிச் சொல்லக் கூடாது என்று பெரியார் கூறி அண்ணாவுக்கு நகரசபை வரவேற்பிதழ் வாசித்தளிக்கச் செய்தார்கள்.

அந்த நிகழ்ச்சியின்போது திறந்த மோட்டார் காரில் அண்ணா அவர்களை உட்கார வைத்து ஊர்வலமாக அழைத்துக் சென்றார்கள். பெரியார் அவர்களோ கைத்தடியினை ஊன்றிக் கொண்டே மெல்ல முன்னே நடந்துச் சென்றுக் கொண்டிருந்தார். இதைக் கண்ட அண்ணா அவர்கள் வண்டியை விட்டு கீழே இறங்கிவந்து, பெரியார் அவர்களும் தன் பக்கத்தில் உட்கார்ந்து வரவேண்டும் என்று மன்றாடினார். அதற்கு பெரியார் அவர்கள், "அண்ணாத்துரை! வரவேற்பும் பாராட்டும் உங்கள் அறிவுக்கும் பெருந்தன்மைக்கும் தான்! ஆகவே நீங்கள் மட்டும் தான் உட்கார்ந்து வரவேண்டும். நான் நடந்து வந்து உங்களைக் கௌரவிப்பதில் தான் எனக்குப் பெருமை" என்றாராம். பெரியாரின் அந்தப் பரிவு வார்த்தைகள் அண்ணாவின் நெஞ்சத்தில் நீக்க மற நிறைந்து விட்டது. "அதை நினைத்தால் எனக்கு இன்றைக்கும்

உள்ளமும் உடலும் புல்லரிக்கிறது'' என்று அண்ணு கூறுவதுண்டு.

## 110. அழகிரியின் நிலை கண்டு அண்ணு அளித்த நிதி!

அஞ்சா நெஞ்சன் என்று கூறினால், உடனே ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி அவர்களின் எடுப்பான தோற்றமும், எழுச்சியான பேச்சும் முன்வந்து நிற்கும். பகுத்தறிவு இயக்கத்துக்கு கோட்டை எழுப்பிய வீரர்களிலே முக்கியமானவராகவும், முதன்மை யானவராகவும் வைத்துப் போற்றப்படத் தகுந்த பெருமை வாய்ந்தவர்.

மாற்றாரின் வாய்ப் பேச்சோ, வாள் வலிவோ, அவரது வாழ் நாட்களில் வீழ்த்த முடிந்ததில்லை; ஆனால் விஷப் பூச்சிகள் அவரது உடலுக்குள் வஞ்சகமாக நுழைந்து இறுதியில் அவரை வீழ்த்தி விட்டன. க்ஷய ரோகக் கிருமிகள் அவரை வாட்டி வதைத்து விட்டன. வெற்றிப் புன்னகையோடு கவலையற்று நாடெங்கும் உலாவி வந்த அவர், இறுதி நாட்களில் நோய் வாய்ப்பட்டு இரங்கத் தக்க நிலையில் துன்பத்தில் உழன்றார்.

அவர் சென்னை தாம்பரத்திற்கு அடுத்துள்ள சந்தோஷபுரத்தில் உள்ள சானடோரியத்தில் நோய் ஆற்றிக் கொள்ள வந்தார். அப்போது அண்ணு அவர்கள் அழகிரிசாமியின் உடல் நிலையைக் கண்டு வர ஒரு நாள் மாலை சென்றார். அழகிரிசாமியின் வீரத் தோற்ற

னிவோடு சென்ற அண்ணு, விஷக் கிருமிகளுக்கு இரையான உடலின் தோற்றத்தைக் கண்டு கண் கலங்கினர். அழகிரிசாமி குற்றுயிரும் குறையுயிருமாக இருக்கும் தன்னை வறுமை மிக விரைவிலே கொன்று போடும் போலிருக்கிறது என்ற கருத்தை இருமல் இடை இடையே வர சில சில சொற்களால் தெரிவித்தார். அண்ணுவால் நீண்ட நேரம் இருந்து அவரது துன்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. நோய் தீராத நிலையில் அழகிரிசாமி அன்று இரவே தஞ்சைக்குப் புறப்படுகிருர் என்பதை அறிந்துக் கொண்ட அண்ணு ஏதேனும் பொருளுதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் விரைந்து வெளியேறினர்கள்.

அண்ணு அவர்கள் முன்பு, 'சந்திரோதயம்' நாடகம் நடத்திய விதத்தில் மிச்ச தொகை சுமார் ரூபாய் எழுநூறு தோழர் டி. சண்முகம் அவர்களிடத்தில் கொடுத்து வைத்திருந்தார். அதை வாங்கித் தோழர் மதியழகன் அவர்களிடத்தில் கொடுத்தார். தோழர் மதியழகன் அதனை வாங்கிக் கொண்டு விரைந்து சென்று, தாம்பரம் நிலயத்தில் புகை வண்டியில் ஏறி உட்கார்ந்துக் கொண்டிருந்த தோழர் அழகிரிசாமியிடம் கொடுத்தார். அந்த ரூபாய் அவரது நோயைப் போக்கத் துணையாக இல்லா விட்டாலும், அழகிரிசாமிக்குச் சிறிது மன ஆறுதல் அளிக்கத் துணையாக இருந்தது.

மேலும் அண்ணு அவர்கள் அப்பொழுது கூட்டம் ஒன்றுக்கு ரூ. 100 தோழர் அழகிரிசாமிக்கு நிதியாக அளித்து விட்டு, இரசீதைக் காட்டினுல் தான் கூட்டத்திற்குத் தாம் வர இயலும் என்று நிபந்தனை

போட்டார்கள். அந்த வகையில் சில நூறு ரூபாய்கள் தோழர் அழகிரிசாமிக்கு இறுதி நாட்களில் உதவி செய்தன.

தோழர் அழகிரிசாமி மறைந்த பிறகு, அவரது குடும்பம் அல்லற்படக் கூடாது என்று அண்ணு, என். எஸ். கே., டி. பி. பொன்னுசாமி ஆகியோரின் உதவியைக் கொண்டு சொத்துக்கள் மீட்கப்பட்டுக் குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டன. தோழர் சௌந்தர பாண்டியன், பி. டி. இராசன் ஆகியோரின் உதவியாலும் அழகிரிசாமியின் சொத்துக்கள் சிறிதளவு மீட்கப்பட்டன.

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமியின் இறுதி நாட்களில் நோய் அவரை வாட்டிஞலும், மனம் வாடாதவாறு சிறிதளவு ஆறுதல் அளிக்கும் பொறுப்பை அண்ணு அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள், அது அழகிரிசாமிக்குச் சிறிதளவு மகிழ்ச்சியைத் தந்தது.

## 111. பெரியார் மீது மான நஷ்ட வழக்கு!

பெரியார் திருமணம் செய்து கொள்வதற்கு முன்னுல் விடுதலேயில் ஒரு தலேயங்கம் தீட்டினுர் "திருமணத் தோற்றத்துக்கு காரணமும் அவசர முடிவும்" என்று தலேப்பிட்டு அந்த தலேயங்கத்தை பெரியார் எழுதியிருந்தார். பெரியார் எழுதியுள்ள தலேயங்கத்தில் தன்னேக் கொல்ல சதி செய்கிருர்கள் என்று பெரியார் எழுதி இருப்பது மறைமுகமாக அண்ணுவைக் குறிப்பிடுவதாகவும், அதன் மூலம் பெரியார் தன் மீது அபாண்டம் சுமத்துவதாகவும் கூறி அண்ணு

பெரியார் மீது மான நஷ்டம் கோரி வழக்குத் தொடர்ந்தார்கள். வழக்கும் துவங்கி நடந்துகொண்டிருந்தது. ஆனால் பெரியாரை இத் தள்ளாத வயதில் கோர்ட்டுக்கு அலக்கழிக்க அண்ணாவின் மனம் ஒப்பவில்லை. ஆகவே கொலை செய்ய நடந்ததாக கூறப்படும் சதியில் அண்ணாத்துரை சம்பந்தப்படவில்லை என்று பெரியார் திட்டவட்டமாக அறிவித்தால் அவரிடம் மன்னிப்பு கேட்டு கோர்ட்டு செலவையும் கொடுக்கத் தயார் என்றும் அண்ணா கோர்ட்டில் கூறினார்

அதன்படி பெரியார் அவர்கள் இந்த வழக்கில் தனக்காக வாதிக்க வந்த வழக்கறிஞர் கைலாசம் மூலம், 'கட்டுரையில் அண்ணாத்துரையைக் குறிப்பிட்டு ஏதும் எழுதவில்லை' என்று கோர்ட்டில் தெரிவித்தார்கள். அண்ணா சொன்னபடி வழக்கை இத்துடன் முடித்துக் கொண்டு பெரியாருக்கு ஏற்பட இருந்த துன்பத்தைத் தவிர்த்தார்கள்.

## 112. அரசியல் வாதிகளின் பேரம்!

பெரியாரின் திருமணத்தை காரணமாகக் கொண்டு அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறிய நேரத்தில், பல பெரிய காங்கிரஸ் தலைவர்கள் அண்ணாவைச் சந்தித்து, "காங்கிரசு கட்சியில் சேர்ந்துவிடுங்கள், நீங்கள் அடுத்த முறை மந்திரி" என்றெல்லாம் ஆசை காட்டினார்களாம். அப்போது அதற்கு அண்ணா சொன்னார், "எனக்குத் தலைவராக ஏற்றுக்கொண்டது ஒரே ஒருவரைத்தான், அவர்தான் பெரியார், இப்போது அவரை விட்டு வந்துவிட்டேன்; இனி நான் தலைவராக இருக்க வேண்டுமே தவிர

வேறு ஒருவர் தலைமையின் கீழ் பணியாற்ற மாட்டேன்'' என்று சொல்லி விட்டார். அதே போல மற்றக் கட்சி நண்பர்களும் அண்ணவை நெருங்கிக் கேட்டுக் கொண்ட நேரத்தில், ''போங்களய்யா, எனக்கு வேறு வேலை இருக்கிறது'' என்று சொல்லி அனுப்பி விட்டார்.

## 113. பெரியாருக்குப் புரியவில்லை!

தி.மு. கழகம் துவக்கப்பட்ட சிறிது நாட்களுக்கெல்லாம், சேலம், மொரப்பூர் இரயில் நிலையத்தில் பெரியார் அவர்கள் அதிகாலை இரயிலுக்குப் போவதற்காக இரவில் வந்து படுத்துக்கொண்டு இருந்தார். அப்பொழுது அங்கிருந்த இரயில் நிலைய அலுவலாளர் ஒருவர் பெரியாரிடம் தி.மு.க. பற்றி உங்கள் கருத்து என்ன? என்று கேட்டாராம். அதற்குப் பெரியார் ''அண்ணத்துரை நல்லவன் தான், கெட்டிக்காரன் தான், ஆனல் சோம்பேறியாயிற்றே! கூட்டத்துக்கே போக மாட்டான்; நானே பிடித்துத் தள்ளி தூண்டி விட்டால் தான் போவான், ஒரு ஊருக்குப் போனல், ஒன்பது ஊருக்குப் போக மாட்டான்'' என்று சொன்னராம். அதைக் கேட்ட அந்த அலுவலாளர் பெரியார் இப்படி சொல்லுகிருர் என்று அண்ண அவர்களுக்கு கடிதம் எழுதி தெரிவித்தார். அதைப்பற்றி அண்ண கூறும்போது, ''நான் அப்பொழுது சோம்பேறியாக இருந்தது உண்மை. என் வேலையை அறிந்து பயன் படுத்துகின்ற அமைப்பு அப்பொழுது என்னிடத்தில் இல்லை--இப்பொழுது இருக்கிறது. பெரியார் என்னை சரியாகப் புரிந்து கொள்ள வில்லை என்பதைத்தான்

தெரிவித்துக் கொள்ள வேண்டியுள்ளது" என்று தெரிவித்தார்.

## 114. தி.மு.க.வை தோற்றுவித்தது ஏன்?

பெரியார் திருமண செய்தி கேட்டதும், இனி பொது வாழ்க்கைக்கு முழுக்கு போட்டு விட்டு கலைத் துறையில் பணியாற்றுவது என்ற எண்ணத் தோடு இருந்தார் அண்ணு. அப்படி விலகி இருந்தால் கலைத் துறையிலும் அதே கொள்கைகளோடு இலாபத் தோடும், மதிப்போடும் அண்ணு பணியாற்றி இருக்க முடியும். அண்ணு பொது வாழ்க்கையில் சலிப் படைந்து ஓய்ந்த போதெல்லாம் கலைத்துறையில் பணியாற்றி இருக்கிருர். அப்போது அவரது நண் பர்கள் சிலர் கூட "சினிமா உலகத்துக்குப் போனவன் திரும்பவா போகிருன்?" என்று சந்தேகித்து இருக் கிருர்கள். அப்பொழுது மட்டுமல்ல எப்போதுமே ஓய்வு கிடைத்தால் கலைத்துறையில் பணியாற்றத்தான் அண்ணு விரும்புவார். கலைத்துறைக்கு அண்ணு போகலாம், ஆஞல் நாடு, அண்ணுவின் நண்பர்களான சம்பத், நெடுஞ்செழியன், மதியழகன், கருணுநிதி, சீனிவாசன், சிற்றரசு ஆகிய பல பேருடைய ஒத் துழைப்பை இழந்திருக்கும். யார் யார் திராவிட கழ கத்தில் இருந்து பணியாற்றிஞர்களோ, யார் யார் போர் வீரர்களாக இருந்தார்களோ, பேச்சில், எழுத் தில், உழைப்பில் கொள்கையைப் பரப்பப் பாடு பட்டார்களோ, அத்தனை பேரையும் நாடு இழந்திருக் கும். அத்தனை பேரும் திராவிட கழகத்தில் இருந்து பணியாற்ற முடியாது என்று தெரிவித்து விட்டனர்.

வேறு கட்சிக்கும் அவர்களால் போக முடியாது. இத ஞல் தான் திராவிட முன்னேற்ற கழகத்தை ஆரம்பிப் பதைத் தவிர வேறு வழியே இல்லாமல் போகவே அண்ணு புதிய கட்சியை தோற்று வித்தார்களாம்.

## 115. வழக்குப் போடாதே!

சேலத்தில் சுயமரியாதை இயக்கத்துக்குச் சொந் தமான கட்டிடம் ஒன்று இருந்தது. ஆரம்பத்தில் அந்தக் கட்டிடத்தை உருவாக்கியதில் அண்ணு அவர் களுக்கு பெரும்பங்கு உண்டு. பெரியார் அவர்களை விட்டுப் பிரிந்து தி.மு.கழகம் துவக்கியவுடன் அக்கட் டிடம் திராவிட கழகத்தின் கைக்கு மாறியது. கழகம் பிரிந்த போது அந்தக் கட்டிடத்தில் பங்கு பெற்றவர் அண்ணு அவர்களிடம் வந்து, வழக்குப் போடலாம் என்று யோசனை கூறினார்கள். பெரியாரின் மேல் கோப முள்ள ஒரு சில வழக்கறிஞர்கள் கூட அண்ணு விடம், வந்து 'வழக்குப் போடுங்கள்; நிச்சயம் வெற்றி உண்டு. போதிய ஆதாரமிருக்கிறது' என்று கூறினார் கள். அண்ணு அவர்களோ இதையெல்லாம் மறுத்து விட்டார். அண்ணு அவர்களுக் கெல்லாம் கூறிய பதில், "இந்தக் கட்டிடத்திற்கு வழக்குப் போட்டு அதற்காக காலத்தையும், உழைப்பையும், பணத்தை யும் செலவழிப்பதற்குப் பதிலாக, வேறு வகையில் செலவழித்தால் இதைப் போன்ற நான்கு கட்டிடங் கள் என்ஞல் கட்ட முடியும்" என்ருர். வழக்கு மன் றம் செல்ல போதிய வசதி இருந்தும் கூட வழக்கு மன்றம் செல்ல விரும்பாதவர் அண்ணு.

## 116. எந்தத் துறையும் சொந்தத்துறை!

1951-ம் ஆண்டில் முதல் பொதுத் தேர்தல் நடக்க இருக்கும் சமயம், கம்யூனிஸ்ட் கட்சியும், தி.மு.கழகமும் ஒன்று சேர்ந்து ஐக்கிய முன்னணி அமைத்தால் காங்கிரஸை முறியடிக்கலாம் என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ப. ஜீவானந்தம் அவர்கள் பெரு முயற்சி நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் அண்ணாவிடம் பேச்சு வார்த்தை நடத்த அறிவகத்துக்குச் சென்றார். அண்ணாவைப் பார்த்து ஜீவானந்தம் பேச்சுக்கிடையே கூறினார்.

"அண்ணாத்துரை உங்கள் பேரில் எனக்கு ஒரு வகையில் தான் கோபமாக இருக்கிறது. நீங்கள் எந்தத் துறையில் கால் வைத்தாலும் அதனை உங்கள் சொந்தமாக்கிக் கொள்கிறீர்கள், ஏற்கெனவே அத்துறையில் உள்ளவர்களையெல்லாம் மிஞ்சி விடுகிறீர்களே" என்றார். அந்த அளவு எதிர் கட்சித் தலைவர்களும் பொறாமைப்படும் அளவுக்கு பெருமைக்குரியவராக விளங்கினார் அண்ணா. அந்த நேரம் தனது திராவிட நாடு ஏட்டினிலும், கூட்டங்களிலும் அண்ணா கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றி தீவிரமாக விமர்சித்து வந்தார்கள். ஜீவானந்தம் அதைச் சுட்டி பேசும் போது அண்ணாவைப் பார்த்து தெரிவித்தார், "தங்கள் அலுவலகத்தில் ஸ்டாலினும், லெனினும் பேசிக் கொண்டிருக்கும் படம் மாட்டிக் கொண்டே எங்களை திட்டுகிறீர்களே" என்று வேடிக்கையாகவும் கூறினாராம்.

## 117. அண்ணாவைச் சந்தேகித்த கூர்க்கா!

ஒரு நாள் கட்டுரை எழுத அண்ணா அவர்கள் காஞ்சிக்கு அவசர அவசரமாகச் சென்னையிலிருந்து புறப்பட்டார். இரவு மணிப் பத்துக்கு மேல் இருக்கும். உடன் வந்திருந்த எஸ். எஸ். பி. லிங்கம், சி.வி. ராஜகோபால் ஆகியவருடன் இரவு 12-மணிக்கு அண்ணாவின் வீட்டை அடைந்து, உடை மாற்றிக் கொண்டு வழக்கமாக இரவில் அணியும் கைலி வேட்டி துண்டுடன் ஆபீஸ் சாவியை எடுத்துக் கொண்டு அலுவலகத்துக்கு சென்றார். அங்கு அண்ணா அவர்கள் கட்டுரைக்காக பழைய பத்திரிகைகளைப் புரட்ட ஆரம்பித்தார். தூக்கம் வராமலிருக்க நண்பர்களை டீ வாங்கி வரும்படி அனுப்பினார். லிங்கமும், ராஜ கோபாலும் வெளிக் கதவை மூடிக் கொண்டு அவ்வூர் சினிமா தியேட்டரில் உள்ள கடையில் டீ சாப்பிட்டு விட்டு, அண்ணாவுக்கும் டீ வாங்கி வர அவர்கள் வெளியே சென்றிருந்த சமயம், அவ்வழியாக காவல் இருக்கும் கூர்க்கா வந்திருக்கிறார். ஆபீஸில் விளக்கு எரிவதைக் கண்டு, கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து பைல்களைப் புரட்டிக் கொண்டிருக்கும் அண்ணாவை யார் நீ என்று தன்னுடைய மொழியில் அதட்டி இருக்கிறார். அது சமயம் அண்ணா சட்டையும் பனியனும் இல்லாமல் கைலி வேட்டியுடன் இருக்கவே, யாரோ திருடன் என்று எண்ணிக் கொண்டு, தன் கையிலிருந்த தடியை ஓங்கி பயமுறுத்தியிருக்கிறார். உடனே அண்ணா அவர்கள் அங்கு சுவரில் மாட்டி இருந்த தன்னுடைய புகைப்படத்தைக் காட்டி, நான் தான் அது என்று ஜாடை காட்டி, தன்னை கூர்க்காவுக்கு அறிமுகம் செய்து கொள்ள

வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. தவற்றை உணர்ந்து அண்ணாவின் காலில் விழுந்து கும்பிட்டு மன்னிப்பு கேட்டுக்கொண்டு போனார். சொந்த ஊரில் தனது ஆபீஸில் அண்ணாவுக்கு அவரே அறிமுகம் செய்து கொள்ள வேண்டியதாகி விட்டது.

## 118. தெனாலி தோழரும் அண்ணாவும் !

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த தெனாலியில் பேசுவதற்காக அண்ணாவை அழைத்துப்போக கோபால கிருஷ்ணமூர்த்தி எனும் ஆந்தரத் தோழர் வந்திருந்தார். அவர் 'கழகக் கொள்கைகளை விளக்கக்கூடிய ஆங்கில புத்தகங்கள் என்னென்ன வைத்திருக்கிறீர்கள், அவற்றை யெல்லாம் கொடுங்கள்; எடுத்துச் சென்று எங்கள் நாட்டிலுள்ளவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்' என்று அண்ணாவிடம் கேட்டார். அவர் கேட்டபடி கொடுக்கக் கூடிய ஆங்கில புத்தகங்கள் இருந்தால் தானே கொடுப்பதற்கு. ஆகவே அண்ணாவுக்கு என்ன சொல்லுவதென்று புரியவில்லை. அண்ணா மிகவும் சாமர்த்தியமாக 'கழகக் கொள்கைகளை விளக்கும் புத்தகங்கள் தலைமை நிலையத்தில்தான் இருக்கின்றன,' என்றார். 'ஒரு கடிதம் கொடுங்கள், நான் போய் வாங்கிக் கொள்கிறேன்' என்றார் அவர். 'இன்று நாவலர் இல்லை; பிறகு நான் அனுப்பச் சொல்கிறேன்' என்றார் அண்ணா. 'நாவலர் இல்லாவிட்டால் என்ன, தலைமை நிலைய நிர்வாகி கூடவா இல்லை?' என்று கேட்டார். 'ஆமாம், அவர் கூட நான்கு நாட்களாக விடுமுறையில் இருக்கிறார்; நான் தெனாலிக்கு வரும்போது எடுத்து வருகி

றேன்; நீங்கள் போங்கள்' என்று அவரை அனுப்பி வைத்தார். அதன் பிறகு அண்ணா தெனாலிக்கு போய் காரைவிட்டு இறங்கியதும், 'புத்தகம் எடுத்து வந்தீர்களா?' என்று கேட்டார் அந்தத் தோழர். 'பெட்டி நிறைய எடுத்து வைத்தேன்; ஆனால் டிரைவர் அதை எடுத்து காரில் வைக்க மறந்துவிட்டார்; பிறகு அனுப்பி வைக்கிறேன்' என்று கூறி தப்பித்துக் கொண்டார் அண்ணா.

## 119. கண்கள் கலங்கின!

1951-ம் ஆண்டில் கைத்தறிக்கு மிகவும் பயங்கர நிலை ஏற்பட்டிருந்தபோது, கழகத்தின் முடிவுபடி, திருச்சியில் அறிஞர் அண்ணாவும், கழகத் தோழர்களும் துணி விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது, நண்பர் உடுமலை நாராயணக்கவி அவர்கள் கைத்தறி துணி விற்பனைக்காக இயற்றியிருந்த பாடல் ஒன்றை, ஒரு தோழர் பாடிக்கொண்டு இருந்தார். அப்போது அந்தப் பாடலில் சின்னாளப்பட்டி என்ற ஊரில் நெய்யப்படும் துணி பற்றியும் ஒருவரி பாடப்பட்டது. அதைக் கேட்ட ஒருவர் கூட்டத்தில் இருந்து ஓடி வந்து, கீழே விழுந்து கும்பிட்டு 'நீங்கள் பாடி இருக்கிறீர்களே சின்னாளம்பட்டி நெசவுப்பற்றி—அந்த சின்னாளம்பட்டியைச் சேர்ந்த நெசவாளன் தானய்யா நான்; தலையில் இருப்பது 15 சேலைகள்—நான் நெய்தவை. கடந்த 4 தினங்களாக திருச்சியில் அலையாத தெருவில்லை. கூவாத குரலில்லை; ஒரு சேலையும் விற்கவில்லை. குடும்பமே பட்டினி; என்று அழுதார். அந்தக்

காட்சியைக் கண்ட அனைவரும் கண்ணீர் வடித்தனர்; அண்ணாவும் கண் கலங்கினார்.

## 120. காமராஜரின் கைக் கூலி! பெரியாரின் குற்றச்சாட்டு!

1951 இறுதியில் நடந்த முதல் பொதுத் தேர்தலின்போது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் காமராஜருடன், கோவை ஜி. டி. நாயுடு போட்டியிட்டார். அப்பொழுது பெரியார் காமராஜரை எதிர்த்து ஜி.டி. நாயுடுவை ஆதரித்தார். திரு. ஜி. டி. நாயுடு அண்ணாவுக்கு சுமார் 25 ஆண்டுகள் பழக்கப்பட்ட நெருங்கிய நண்பர்,

அப்போது சென்னையிலே நடைபெற்ற முதல் கழக மாநில மாநாட்டிற்கு ஜி. டி. நாயுடு வந்திருந்தார். அவர் அண்ணா அருகில் உட்கார்ந்து தேர்தலில் என்னை ஆதரிப்பதாக மாநாட்டில் நீங்கள் முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு அண்ணா என்னை வேண்டுமானாலும் கூப்பிட்டு வேலைச் செய்யச் சொல்லுங்கள். நான் வேலை செய்கிறேன். தயவுசெய்து என் கட்சியை எடுபிடி எனக் கருதி வேலைவாங்க நினைக்காதீர்கள் என்று சொன்னார். திராவிட நாட்டு விடுதலைக்காக பாடுபடுவேன் என்று எழுதி கையெழுத்துப் போட்டு கொடுங்கள் கழகம் உங்களை ஆதரிக்கும் என்று சொன்னார். அதற்கு அவர் கையெழுத்துப் போடவேண்டுமா? என்றார். ஆம் என்றார் அண்ணா. நான் கூடவா போடவேண்டும் என்று நீயா இப்படி கேட்கிறாய்? என்றார். 'ஆம்', நான் தான் கேட்கிறேன்! என்றார் அண்ணா, கையெழுத்து போட

முடியாது என்றார் ஜி. டி. நாயுடு. அப்படியானால் உங்களுக்கு வேலை செய்யமாட்டோம் என்றார் அண்ணா. பிறகு கழகத்தினிடம் ஆறுமுகசாமி என்பவர் கையெழுத்து போட்டுத் தந்ததால், கழகம் அவருக்காக வேலை செய்தது. இறுதியில் காமராஜர் வெற்றி பெற்றார்; ஜி. டி. நாயுடு தோற்றார்.

ஜி. டி. நாயுடு தோற்பதற்காக, காமராஜரிடம் கைக்கூலி வாங்கிக்கொண்டு ஆறுமுகசாமியை அண்ணா ஆதரித்ததாக பெரியார் சொன்னார். சுவரிலே அண்ணாவைப் பற்றி எழுதிவைத்தார்கள். எழும்பூர் டிராம் ஷெட் சுவரிலே இப்படி எழுதப்பட்ட எழுத்து அந்தச் சுவர் இடிக்கப்படும் வரை பலர் கண்களிலே பட்டுக்கொண்டிருந்தது. அதைப் படித்த கழகத் தோழர்கள் அழிக்கவேண்டும் என்றார்கள். அண்ணா தான் வேண்டாம் அப்படியே இருக்கட்டும் என்றார்.

## 121. பெரியார் கொடுத்த பிஸ்கேட்!

பெரும்பாலும் பெரியார் சிறைக்கு செல்லும் போதெல்லாம், அண்ணா அவர்களும் சிறை செல்லும் வாய்ப்பை பெற்றிருந்தார். தி மு.கழகம், திராவிட கழகத்தை விட்டு பிரிந்த பிறகும் கூட 'பொன்மொழி என்ற புத்தகம் எழுதியதற்காக பெரியார் சிறை தண்டனை பெற்று சிறையில் அடைக்கப் பட்டார். திருச்சி சிறையில் சுமார் 10 நாட்கள் பக்கத்து பக்கத்து அறைகளிலே பெரியாரும் அண்ணாவும் வைக்கப்பட்டு இருந்தும் கூட அண்ணாவும் பெரியாரும்

பேசிக் கொள்ள வில்லை. அண்ணாவுக்கு வெளியிலிருந்து ஏதாவது கொண்டு வந்து கொடுக்கப்படுகிறதா என்று சிறை வார்டனிடம் கேட்பார். பெரியார் அவருக்கு ஒன்றும் வெளியிலிருந்து பிஸ்கட்டோ. உணவோ வருவதில்லை என்று வார்டன் சொன்ன பிறகு, தனக்கு வந்த பிஸ்கட்டுகளில் 6 பிஸ்கட்டுகளை அண்ணாவிடம் கொடுக்கும் படி பெரியார் வார்டனிடம் கொடுத்து அனுப்புவார். அந்த பிஸ்கட்டுகளை அண்ணா அவர்கள் சாப்பிடாமல் அவை உதிர்ந்து போகும் வரை பத்திரப்படுத்தி வைத்திருப்பது என்று முடிவு செய்தார். அந்த சம்பவத்தை பற்றி ஒரு முறை அண்ணா வெளியிடும் போது கூறினார், "என்னை திராவிட கழகத்தினர் திட்டும் போதெல்லாம் அந்த பிஸ்கட்டுகளை எடுத்து பார்த்துக் கொள்வேன், நீங்கள் திட்டுகிறீர்கள். பெரியாரோ என் மீது அன்பு வைத்திருக்கிறார். சூழ்நிலை, அவர் என்னிடம் பேசவிடாதபடி செய்கிறது, என்று எண்ணிக் கொள்வேன்" என்றார்.

பெரியாரும் அண்ணாவும், சிறையில் ஒரே சமயத்தில் இருப்பதைக் கண்ட வெளியில் இருந்த பலரும் பல்வேறு விதமாக பேசிக் கொண்டார்கள். இவர்கள் இருவரும் சிறையில் இருந்து வெளியே வரும்போது ஒன்றாகச் சேர்ந்துதான் வெளி வருவார்கள் என்று தான் நினைத்தார்கள், அப்படிதான் ஆசைப்பட்டார்கள்.

அப்பொழுது சிறையில் இருந்த—கொலை செய்து விட்டு ஆயுள் தண்டனை பெற்ற கைதி ஒருவன் அண்ணாவுக்கும் பெரியாருக்கும் தேவைப் பட்ட வேலைகளையெல்லாம் அன்புடன் செய்து வருவான். அடிக்கடி அவன் அண்ணா அவர்களிடம் வந்து 'என்ன

அண்ணா பெரியார் உங்களிடம் பேசினாரா? நீங்கள் அவருடன் பேசினீர்களா? என்று ஆவலுடன் கேட்பான். அதே போலவே பெரியாரிடமும் சென்று அண்ணாவிடம் பேசினீர்களா, ஐயா? அண்ணா உங்களிடம் பேசினாரா?, என்றெல்லாம் விசாரிப்பான். அவனுக்கு இருந்த ஒரே ஒரு ஆசை எல்லாம் பெரியாரும் அண்ணாவும் எப்படியாவது பேசிக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

மறுநாள் திடீரென்று விடுதலை கிடைத்தது. அப்போது ஒரு வேடிக்கை நடந்தது. பெரியாரையும், அண்ணாவையும் விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி உள்ளே அவர்களுக்கு தெரிவதற்கு முன்பே வெளியே தெரிந்து விட்டிருக்கிறது. எனவே அவர்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கி விட்டிருந்தனர். தி. மு. கழகத்தார் ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு நேரத்தை மறந்து விட்டனர். எனவே சிறைக் கதவு திறக்கப்பட்டு இருவரையும் வெளியே அனுப்பியதும், வாசற்படியருகே பெரியாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் கொண்டுவந்த மோட்டார்தான் இருந்தது. அதில்தான் அண்ணா அவர்களையும் அழைத்துச் சென்றனர். இது போதாதென்று போட்டோ எடுப்பவர் ஒருவர் ஓடிவந்தார். ‘இருவரும் அப்படியே, நெருக்கமாக நில்லுங்கள்’ என்று போட்டோ எடுத்துவிட்டார். அது வெளியிடப்படவில்லை...வேதாசலம் அவர்கள் வீடுவரையில் சென்று பெரியார் இறங்கிக் கொண்டார். அண்ணா மட்டும் அதே மோட்டாரில் சாம்பு இல்லத்தில் இறங்கி விட்டார்.

## 122. ஒரு பக்க மீசையுடன் என். வி. நடராசன்!

தி.மு. கவின் முதல் பெரிய போராட்டமான மும்முனைப் போராட்டத்தில் அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகிய ஐவர் மீதும் வழக்குத் தொடுத்து அரசாங்கம் மூன்று மாதம் தண்டனை விதித்தது. இந்த தண்டனையை சென்னை சிறையில் இவ்வைந்து பேரும் அனுபவித்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் பகல் தோழர் என். வி. நடராசன் உறங்கிக் கொண்டிருந்தார். வறட்சி நிறைந்த சிறைக்கு எதிரே ஒரு கத்திரிக்கோல் கிடந்தது. அண்ணா அவர்கள் அதை எடுத்துக்கொண்டு போய் உறங்கிக் கொண்டிருந்த தோழர் என். வி. நடராசனின் ஒரு பக்க மீசையை கத்தரித்து விட்டார். விழித்துக்கொண்ட என். வி. நடராசன் பிறகு முழு மீசையையும் எடுக்க வேண்டி வந்தது. மறுநாள் நடராசனின் துணைவியார் பார்க்க வந்திருந்தார். என்.வி. நடராசனுக்கு மிகுந்த வெட்கம். இதைக் காண எல்லோருக்கும் வேடிக்கையாக இருந்தது. வாயிலே கையைப் பொத்திக் கொண்டே பேசிய அவரின் போக்குக்கு காரணம் புரிந்தபோது நடராசனின் துணைவியாரும் விழுந்து விழுந்து சிரித்தார்களாம் மீசையைப் பறிகொடுத்த கணவரைப் பார்த்து.

## 123. சிறைக் கூடத்தில் கடமை யுணர்ச்சி!

மும்முனைப் போராட்டக் காலத்தில் அண்ணா அவர்கள், சென்னைக் காவற் கூடத்தில் தள்ளப்பட்

டிருந்தபோது சுமார் 500-க்கு மேற்பட்ட கழகத் தோழர்களும் அதில் புகும்படி நேரிட்டது.

அண்ணா அவர்களும் மற்றும் சிலரும் 'பி' வகுப்பில் அரசியலாரால் வைக்கப்பட்டிருந்தனர். மற்றைய தோழர்கள் எல்லோரும் 'சி' வகுப்பில் வைக்கப்பட்டிருந்தனர்.

சிறை புகுந்த கழகத் தோழர்கள், சிறைக் கூடத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கடமையும் கட்டுப்பாடும் தவறாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்தி அதனைக் காத்து வருவதிலே அண்ணா அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்தார்கள். சிறைக் கூடத்தில் சில பல மாற்றங்கள் தேவை என்றால், அவற்றை அரசாங்கத்திடம் பெற முயல வேண்டுமே யொழிய, சிறை அதிகாரிகளோடு மோதிக் கொள்வதில் பலனில்லை என்பதை நன்கு உணர்ந்தே அண்ணா அவர்கள் கடமையை வற்புறுத்தினார்கள்.

ஒருபொழுது, சிறைக்குள் ஒரு குழுவாக நுழைந்த சுமார் 30 கழகத் தோழர்கள் காலையில் வரிசையில் உட்காரவும், அறைக்குள்ளிருக்கும் சிறுநீர்ப்பானைகளை வெளிக்கொண்டு வரவும், சோற்றினைச் சென்று வாங்கிக் கொள்ளவும் மறுத்துவிட்டனர். சிறை வார்டர்களுக்கும் அந்தத் தோழர்களுக்கும் தகராறுகள் வளர்ந்தன. இச்செய்தி அண்ணா அவர்கள் காதுக்கு மாலை 4 மணி அளவிற்கு எட்டிற்று. உடனே அண்ணா, அவர்கள் நாவலர் நெடுஞ்செழியனை அவர்களிடம் அனுப்பி, கழகத் தோழர்கள் தங்கள் தங்கள் சிறுநீர்ப் பானைகளை வெளியே எடுத்து வைக்க முடி

யாது என்ருல், நாள் தோறும் தானே வந்து எல்லோருடைய சிறுநீர்ப் பானைகளையும் எடுத்துவைக்கவும், தட்டுகளிலே சோறு வாங்கிக்கொண்டுவந்து அவரவர் அறைகளிலே வைக்கவும் தயாராக இருப்பதாகச் சொல்லச் சொல்லி, அவர்களது அனுமதி பெற்று வரும்படிக் கூறினர். அப்படியே நாவலர் நெடுஞ்செழியன் போய்ச் சொல்ல, தோழர்கள் கண்கலங்கி தம் செய்கைக்கு வருந்தி, ''அண்ணா வரவேண்டாம்; நாங்களே முறைப்படி நடந்துகொள்கிருேம். எங்களை மன்னிக்கும்படி அண்ணாவிடம் கூறுங்கள்'' என்று சொல்லி அனுப்பினர்.

## 124. சிறையில் பூனை வளர்ப்பு!

அண்ணா அவர்கள் மும்முனைப் போராட்டத்தின் விளைவாக மூன்று திங்கள் சிறைத் தண்டனை ஏற்றுச் சென்னை சிறையில் இருந்தபோது, பொழுது போக்குக்காக கொண்டிருந்தவைகளிலே பூனை வளர்ப்பும் ஒன்ருகும்.

சிறைச்சாலைக்கு சென்ற சில நாட்களில் ஒரு தாய்ப் பூனை இரண்டு குட்டிகளை அழைத்துக் கொண்டு நாள் தோறும், இரவில் அண்ணா அவர்கள் இருந்த கட்டிடம் பக்கம் வருவதும், அறைகளில் ஏதேனும் இருக்கிறதா என்று தேடுவதும், பிறகு போய் விடுவதும் ஆன காட்சி அண்ணாவின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனுல் அந்தப் பூனைகளுக்கு ஏதேனும் உணவு திரட்டி வைத்திருக்கவேண்டும் என்ற இரக்க உணர்வு அவருக்கு பிறந்தது. அன்று முதல் அண்ணா அவர்கள் நாள்தோறும் தமக்

க்குக் கொடுக்கப்படும் பாலில் ஒரு பகுதியைப் பூனைகளுக்கென்று ஒதுக்கி வைக்கத் தொடங்கினார்கள். தாய்ப் பூனையும் இரண்டு குட்டிகளும் வரும்போது, அவர் அறையின் இரும்புக் கதவுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டு, ஒரு அலுமினியக் கிண்ணத்தை இரும்புக் கம்பிகளுக்கிடையில் விட்டு, வெளியே வைத்து, அதனைக் கம்பிகளுக்கருகில் தள்ளிவைத்துக் கொண்டு, உள்ளே இருந்தபடியே நீண்ட குவளையிலிருக்கும் பாலை அந்தக் கிண்ணத்தில் ஊற்றுவார்கள்.

தாய்ப்பூனை முதலில் குட்டிகளைச் சாப்பிடவிட்டு விட்டு அது காத்துக் கொண்டிருக்கும். அந்தக் குட்டிகளில் ஒன்று பருத்து வலிவுள்ளதாகவும், மற்றொன்று மெலிந்து வலிவற்றதாகவும் இருந்தது. வலிவற்ற குட்டியை அப்பால் தள்ளிவிட்டுத் தானே பாலையெல்லாம் குடிக்க முயலும். அப்பொழுது தாய்ப் பூனை வலிவுள்ள குட்டியை அப்பால் தள்ளிவிட்டு வலிவற்ற குட்டி சாப்பிடுவதற்கு இடம் ஏற்படுத்திக் கொடுக்கும்.

குட்டிகள் இரண்டும் சாப்பிட்டு முடிந்ததற்குப் பிறகுதான் தாய்ப் பூனை குடிக்க முயலும். பால் மிச்சம் இருந்தால் குடிக்கும்; இல்லையானால் குட்டிகளை அழைத்துக் கொண்டு போய்விடும். இந்தக் காட்சி அண்ணாவுக்கு வியப்பையும், பொழுது போக்கையும் தரும்.

பிறகு இரண்டு கிண்ணங்களில் இரண்டு குட்டிகளுக்கும் தனித்தனியே அண்ணா அவர்கள் வைத்தார்கள். பருத்த குட்டி தனக்கு வைத்த பாலை அவசர அவசரமாகக் குடித்துவிட்டு, மெலிந்த குட்டி குடிப்பதற்காக வைத்த பாலை குடிக்க முயலும். அப்

பொழுது அண்ணா அவர்களும் தாய்ப்பூனையும் பருத்த குட்டியை அப்பால் அனுப்பிவிட்டு மெலிந்த குட்டி குடிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித்தருவார்கள். பிறகு தாய்ப் பூனை வெளியே படுத்திருக்கக் குட்டிகள் இரண்டும் உள்ளே வந்து விளையாடும். இரவில் நீண்ட நேரம் தூக்கம் வராத அண்ணா அவர்களுக்கு இது பொழுது போக்காக இருக்கும்.

கடைசியாக சில நாட்களில் மெலிந்த பூனைக் குட்டி வராமல் தாய்ப் பூனையும், பருத்த குட்டியும் மட்டுமே வந்தன. இரண்டு மூன்று நாட்கள் கழித்து கேட்டறிந்தபோது, அந்த பூனைக் குட்டியை யாரோ அடித்ததால் இறந்துபோய் விட்டது என்று தெரிய வந்தது. அந்தச் செய்தியைக் கேள்வியுற்ற அண்ணா அவர்கள் எதையோ பறிகொடுத்து விட்டதுபோன்ற இரக்கவுணர்வோடு இரண்டு மூன்று நாட்கள் காணப் பட்டார்கள்.

## 125. சிறையிலேயே திருடுகிறாயா!

1953-ம் வருடம், திராவிட முன்னேற்றக் கழகம் மும்முனைப் போராட்டம் நடத்தியதின் விளைவாக சர்க்கார் அண்ணா உள்பட 'ஐவர் மீது வழக்கு' தொடுத்து, மூன்று மாத தண்டனை கொடுத்து சிறைக்கு அனுப்பிவைத்தது. அப்போது சிறையில் அண்ணாவும் நாவலர் நெடுஞ்செழியனும் மூன்று மாத காலம் ஒரே அறையில் இருந்த நேரத்தில் நாவலர் அறையின் குப்பைக் கூடையில் ஒரு பழைய புத்தகத் தைக் கண்டார். என்ன புத்தகம் என்று அறிந்து கொள்ள விரும்பிய நாவலர், அப்புத்தகத்தை எடுத்

துப் புரட்டினார். அப்புத்தகம் பதினெட்டாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட பிரிட்டிஷ் புரட்சி சம்பந்தப்பட்டது. அந்நூலில் பல நல்ல பயன் தரத்தக்க படங்கள் இருக்கக் கண்ட நாவலர், அந்நூலை எடுத்து வைத்துக்கொண்டு ஒவ்வொன்றாக வெட்ட ஆரம்பித்தார். அண்ணா நாவலரைப் பார்த்து, 'என்ன செய்கிறாய்?' என்றார்—உடனே நாவலர், "குப்பைக் கூடையில் இப்புத்தகம் கிடந்தது. பதினெட்டாம் நூற்றாண்டில் வெளியிட்ட பழைய நூல், பயன் படக்கூடிய நல்ல படங்கள் உள்ளன—அதை வெட்டி எடுத்துச் சென்றால் பயன்படுமே என்று வெட்டுகிறேன்" என்றார். அண்ணா நாவலரிடம், "எல்லாரும் திருடிவிட்டு சிறைக்கு உள்ளே வருகிறார்கள், நீ திருடிக்கிட்டு வெளியே போகிறாயா" என்றார். அதற்கு நாவலர் "யாருக்கும் நஷ்டம் ஏற்படாத வகையில்—யாருக்கும் தீங்கு நேராத வகையில்—யாருக்கும் புண்படாத வகையில்—செய்யக்கூடிய காரியம் திருடாகாது—மேலும் இந்நூல் பயனற்று, குப்பைக் கூடையில் கிடந்தது. இப்படங்களைச் சிறை அதிகாரியிடம் அனுமதி பெற்றுத்தான் வெளியே எடுத்துச் செல்வேன்" என்றார். உடனே அண்ணா "தெருவில் ஒரு பிணம் கிடக்கிறது என்று வைத்துக்கொள்—அப்பிணத்தால் யாருக்கும் பயனில்லை—அதற்காக அந்தப் பிணத்தின் வேஷ்டியை அவழ்த்துக்கொண்டு வந்துவிடுவாயா?" என்று கேட்டாராம்!

## 126. ஜெமினி வாசனின் ஆசை!

ஜெமினி ஔவையார் படம் வெளிவந்த சில தினங்களுக்குப் பிறகு ஜெமினி எஸ். எஸ். வாசன்

அண்ணாவைக் காண விரும்புவதாக நண்பர்கள் சிலர் தெரிவித்தார்கள். அண்ணா அவர்களோ உடனே சந்திப்பதற்கு சந்தர்ப்பம் இல்லை என்று தெரிவித்து விட்டார். என்றாலும் வாசன் அவர்களோ அண்ணாவைப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று பல முறை முயன்றார். ஆகவே ஒரு முறை சென்னையில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தமக்கையார் இல்லத்தில் எஸ். எஸ். வாசனை சந்திக்க அண்ணா ஒப்புதல் அளித்தார்.

ஏற்பாட்டின்படி எஸ். எஸ். வாசன் அவர்கள் அண்ணா அவர்களைப் பார்க்க வந்தார். இருவரும் ஏறக்குறைய ஐந்து நிமிடங்களுக்குமேல் என்ன பேசுவதென்றே தெரியாமல் உட்கார்ந்திருந்தார்கள். பின்னர் வாசன், 'ஔவையார் படம் வெளி வந்திருக்கிறதே அதைப் பார்த்தீர்களா? படம் எப்படி இருக்கிறது' என்று அண்ணாவைக் கேட்டார்கள். படத்தைப் பார்த்ததாக தெரிவித்து படப்பிடிப்பு சம்பந்தப்பட்ட சிலவற்றைப் பாராட்டினார்கள் அண்ணா அவர்கள். கடைசியாக வாசன் "ஔவையார் படத்தை எடுக்கத் தனக்கு 40 இலட்சம் ரூபாய் செலவழிந்து விட்டதாகவும், ஆனால் தாம் எதிர்பார்த்த அளவுக்கு படம் வெற்றிகரமாக ஓடவில்லை எனறும், சந்திரலேகா படம் ஓடியதைப் போலவே ஔவையாரும் ஓடினால் கூடத் தமக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் நஷ்டம்தான் வருமென்றும் தெரிவித்தார். ஆனால் ஔவையார் படத்தின் மூலம் தான் தமிழுக்காகத் தொண்டு செய்திருப்பதாக, அண்ணா அவர்கள் மனதார நம்பினால் ஔவையார் படத்தின் மூலம் தமிழுக்கு நல்ல தொண்டு செய்திருப்பதாக ஒரே ஒரு வார்த்தையைக் கூறிவிட்டால், 40 இலட்சம்

ரூபாய் போனதைப்பற்றிக் கவலைப்படாமல் பெருத்த மகிழ்ச்சி அடைய முடியும்'' என்றும் வாசன் தெரிவித்தார். ஆனால் அண்ணா அவர்களோ எதைக் கூறினாலும் வாசன் விரும்பிய அந்த ஒரு வார்த்தையை மட்டும் கடைசி வரை கூறவில்லை. அந்தச் சந்திப்பிற்கு பிறகு மீண்டும் ஒரு முறை அண்ணா அவர்களை வாசன் சந்தித்து அண்ணா தலைமையிலேயே ஒரு நாள் ஔவையார் படம் நடைபெற விரும்புவதாகவும் அதற்கு சம்மதம் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்; அதற்கும் அண்ணா இசைவு தரவில்லை.

## 127. அண்ணா சொன்னார்; ஜி. டி. நாயுடு செய்தார்!

அதிசய மனிதர் ஜி. டி. நாயுடு, தமது ஆராய்ச்சியினால் கண்டு பிடித்த கருவிகளைச் செய்து மக்களுக்கு வழங்க அரசாங்கம் அனுமதி தர மறுத்ததால், அவற்றை உடைத்து எறிய முடிவு செய்தார். இதற்காக சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் ஒரு கூட்டத்தை கூட்டினார். அதற்கு ஈ. வெ. ரா. பெரியார் தலைமை வகித்தார். பெரியார் உட்பட கலந்துக்கொண்ட பல தலைவர்களும் கருவிகளை உடைக்கக்கூடாது என்று கூறினார்கள்.

அண்ணாவும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் பேசும்போது, ''தமிழ் விஞ்ஞானி ஒருவரின் கண்டுபிடிப்பு உலக மக்களுக்கு பயன்படாமல் வீணாகிக் கொண்டு இருக்கும்போது, அதை உடைத்து எரியத்தான் வேண்டும்'' என்று கூறினார்.

அதன் பேரில் தனது கண்டு பிடிப்புகளை (கருவிகளை) சம்மட்டியால் அடித்து தூள் தூளாக ஆக்கினார் ஜி. டி. நாயுடு. இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த பெரியாருக்கு அண்ணா மீதும் நாயுடு மீதும் அளவு கடந்த கோபம் உண்டாகியது.

## 128. அண்ணாவைச் சந்தித்த ராஜாஜி!

1956-ம் ஆண்டில் சென்னையில் ஆட்சி மொழி குறித்து முடிவெடுக்க சுப்பையாப் பிள்ளை இல்லத்தில் கூட்டப்பட்ட சர்வகட்சி ஆலோசனைக் கூட்டத்தில் ராஜாஜியும் அண்ணா அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்போது ம. பொ. சி. அண்ணா அவர்களையும் நெடுஞ்செழியனையும் ராஜாஜியின் அருகில் அழைத்து "இவர்தான் அண்ணாத்துரை" என்று ராஜாஜிக்கு அறிமுகம் செய்து வைத்தார். உடனே ராஜாஜி மிகவும் ஆச்சரியமுற்று தன் மூக்கின்மேல் விரலை வைத்தவாறு "இவரா? இவரா அண்ணாத் துரை?" என்று வியப்போடு கேட்டார். மீண்டும் ராஜாஜி "இவர் அண்ணாத்துரையா? அண்ணாத்துரை என்றால் பிரம்மாண்டமான—பயங்கரமான மனிதராக இருப்பார் என்றல்லவா எண்ணினேன்?" என்றார். பிறகு ம. பொ. சி. நெடுஞ்செழியனை அறிமுகம் செய்து வைத்தபோது ராஜாஜி அவரை ஏற இறங்க பார்த்துவிட்டு, "இவர் நெடுஞ்செழியன் சரி! ஆனால் அவரை அண்ணாத்துரை என்று கூறுகிறீர்களே! நான் இவரைப் படத்தில் கூடப் பார்த்தது கிடை யாது. காதால்தான் ரொம்ப ரொம்ப கேட்டிருக்கி றேன். சுப்பையா பிள்ளை போன்றவர்கள் இப்படி

அடிக்கடி கூட்டங்கள் கூட்டினால் தானே ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட முடியும்" என்றார்!

## 129. நல்லவற்றிற்கு ஆதரவு! நயவஞ்சகத்துக்கு எதிர்ப்பு!!

அண்ணா அவர்களை காமராஜர் ஆட்சிக்கு வந்த பிறகு இரண்டாவது முறை சந்தித்தபோது, காமராஜரின் உற்ற நண்பர் ஒருவர், காமராஜரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அண்ணாவைக் கேட்டார், "காமராஜர் நமக்கெல்லாம் மிகவேண்டியவர். நல்லவர். உங்களிடத்தில் எல்லாம் நிரம்ப ஆசை உடையவர் என்றார்" அதற்கு அண்ணா அவர்கள் தலையை ஆட்டிக்கொண்டே "இருக்கலாமய்யா" என்றார். இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு அவருக்கு தொல்லை தருவதில்லை என்று மட்டும் நீங்கள் சொன்னால் போதும், நிம்மதியாக இருக்கும் என்றார் அவர், உடனே அண்ணா அவர்கள் காமராஜர் பக்கம் திரும்பிகேட்டார், 'அவர் கூறுகிறாரே அது உங்கள் எண்ணம்தானா' என்று காமராஜர் சிரித்தார். மறுபடியும் அண்ணா அந்த நண்பரையே பார்த்துக் கேட்டார். என்ன நீங்கள் சொல்லுகிறீர்கள் காமராஜர் ஒன்றும் சொல்லவில்லையே? என்றார். உடனே அந்த நண்பர் சொன்னார், "காமராஜரை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று பார்ப்பனர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இராஜகோபாலாச்சாரியார் திட்டம் தீட்டிக்கொண்டு இருக்கிறார். ஆகையினால் நீங்களும் எதிர்த்தால் இந்த

இரண்டு எதிர்ப்பும் ஒன்ருக சேர்ந்து. இவர் கீழே விழுந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் தான் கூறுகிறேன்; இரண்டு ஆண்டுகளுக்கு எதிர்ப்பு இல்லாமல் இருக்கட்டும்'' என்ருர்.

உடனே அண்ணா கூறினர் ''நீங்கள் என்னை அப்படிக்கேட்டதே என்னை அவமானப்படுத்துவதாகும்; நான் ஏதோ வருகிறவர்க்கு எல்லாம் தொல்லை கொடுப்பது போலவும், யாராவது கெஞ்சிக் கேட்டுக்கொண்டால் தான் எதிர்ப்பை விட்டு விடுவதைப்போலவும் எண்ணி, நீங்கள் என்னை இப்படி கேட்பது என்னை அவமானப் படுத்துவதாகும். எனவே மீண்டும் இதைப்பற்றி கேட்கவேண்டாம்; நான் எதிர்க்கமாட்டேன் நன்மை செய்துக் கொண்டு இருக்கிறவரையில்; விடமாட்டேன் அவர்கள் எதிர்க்கப்பட வேண்டியவர்கள் என்று எனக்குத் தெரிந்த பிறகு! ஆச்சாரியார் பதவியில் இருந்த நேரத்தில் அவர் தஞ்சை பண்ணையாள் சட்டம் கொண்டு வந்தார் ஆதரித்தோம். ரேஷனை எடுத்தார்; ஆதரித்தோம். சில பல நன்மையான காரியங்களைச்செய்தார் ஆதரித்தோம். அவருடைய அறிவைச் சந்தேகித்தோமா என்ருல் இல்லை! அவருடைய மேதாவிலாசத்தை சந்தேகித்தோமோ? இல்லை! ஆனல் அவை நமக்குப் பயன்படவில்லையே என்று வருத்தப்பட்டோம். ஆனல் அவர் குலக் கல்வித்திட்டதைக் கொண்டு வந்தார். குழந்தைகளுடைய கையை ஒடித்தார்; கண்ணைக்குத்தினர்; உடனே அவரை எதிர்த்தோம். அதைப்போலவே காமராஜரும் அவர் நன்மை செய்துக் கொண்டு இருக்கும் வரை ஆதரிப்போம்! நாட்டிற்குத் தீதான காரியம் செய்தால் எதிர்ப்போம்'' என்று அண்ணா கூறினர். உடனே காமராஜர் அதற்கு என்ன, இப்போது?

இருக்கட்டும், என்று தனது வழக்கமான தந்திரத்தைக் கையாண்டு விடைபெற்றுச் சென்றார்.

## 130. அண்ணாவும் நாதஸ்வரமும்!

அண்ணா அவர்களுக்கு நாதசுர இசை என்றால் மிகச் சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே அதனிடத்து மிக்க ஆர்வம் உண்டு. நடு இரவில், நிலவொளி காலத்தில் தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசை தெருக் கோடியிலே எழும்ப அதனைத் தொலைவில் நின்று கேட்பதிலே அண்ணா அவர்களுக்குத் தனி விருப்பம்.

அறிஞர் அண்ணா அவர்கள் திருவாடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசையிலே திளைத்து, அவரைப் பலப்படப்பாராட்டிப் போற்றி மகிழ்ந்து அவரோடு இனிய முறையிலேயே பழகி வந்தார்கள்.

நாதசுர மன்னர் டி. என். இராசரத்தினம் அவர்களின் நாயனக்கச்சேரி அண்மையில் எங்கேனும் உண்டு என்றால், அங்கு போகும் வாய்ப்பு இருக்கிறதென்றால் அண்ணா அவர்கள் அங்கு ஓடோடிப் போய் இருந்து நாதசுர இசையைக் கேட்டு மகிழ்வார்கள். அவையில் தம் எதிரே அண்ணா அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து விட்டால் தோழர் இராசரத்தினம் அவர்கள் பெருமகிழ்ச்சியுற்று, பெரு முயற்சி எடுத்து, மிகத் திறம்பட நாயனம் வாசித்துக் காட்டுவார்கள். திருச்சியில் தோழர் டி. பி. பொன்னுசாமி அவர்கள் வீட்டுத் திருமணம் ஒன்றிற்கு

தோழர் இராசரத்தினம் அவர்களின் நாதசுர இசை யரங்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. நாதசுர இசைரங்கு முடியும் தருவாயில் அறிஞர் அண்ணா அவர்கள் அங்கு வந்தார்கள். அண்ணா அவர்கள் வந்து விட்டார்கள் என்பதை அறிந்தவுடனே, தோழர் இராசரத்தினம் அவர்கள் தம் களைப்பையும் பாராமல், வாசிப்பை நிறுத்த வந்த நிலையை மாற்றி மேற் கொண்டு ஒன்றரை மணி நேரம் மிக நேர்த்தியாகத் திறம்பட வாசித்துக் காட்டினார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் மக்களின் படிப்புத் துவக்க விழாவின் போது இசைப் பெரும் புலவர் டி. என். இராசரத்தினம் அவர்களைப் பாராட்டிப் பேசும் போது நாதசுர இசை தமிழ்நாட்டின் தனிப் பெரு மைக் குரிய ஈடும் எடுப்பும் அற்ற அழியாச் செல்வம் என்றும், அச்செல்வம் இசைப் பெரும் புலவர் இராச ரத்தினம் அவர்களின் திறமையாலும், உழைப்பா லும், புதுமையும், பொலிவும், புகழும், பெருமையும் பெற்று விளங்குகிறது என்றும், அவரது நாதசுர இசையில் குழலோசை, யாழோசை, பிடிலோசை, வாய்ப் பாட்டோசை ஆகிய அனைத்தையும் தனித்தனி யாகவும், சேர்ந்தும் காணலாம் என்றும், அவர் காட் டும் புது வழியைப் பின்பற்ற மற்ற நாதசுர வல்லுநர் களுக்கு பல திங்கள்கள் பிடிக்கும் என்றும் குறிப்பிட் டார்கள். சென்னை கடற்கரையில் பல இலட்சக் கணக்கான மக்களைக் கூட்டி வைத்து, அவரிடம் பயிற்சி பெற்றவர்களை எல்லாம் நாதசுர இசையை முழங்கச் செய்து, அவருக்கு பொன்னாடை போர்த்தி, அவரிடம் பண முடிப்பு அளிக்க தாம் ஆவல் கொண்

டிருப்பதாகவும், அவரது அடுத்த பிறந்த நாள் விழா வின் போது அதனைச் செய்ய எண்ணியிருப்பதாகவும் கூறினார்கள். அண்ணா அவர்களின் ஆவல் நிறைவேறு வதற்குள்ளாகவே, நாதசுர மாமணி மறைந்து விட்ட தானது. அண்ணா அவர்களுக்கு திகைப்பையும், துக் கத்தையும், துயரத்தையும் தருவதாகி விட்டது.

## 131. வண்ணம் அங்கு கண்டோம்!

1956-ல் திருச்சியில் நடைபெற்ற கழக மாநாட் டுக்கு முன்பு சுமார் ஒரு மாத காலமாக அங்கு அண்ணா அவர்கள் மேற்பார்வையில் ஒரு பெரிய ஓவியக் கலைக் கூடமே உருவாகி, வேலை நடந்துக் கொண்டிருந்தது.

அண்ணாவுக்கு புதிதாக ஒரு திட்டம் தோன்றியது. மாநாட்டு திடலைச் சுற்றிலும் பனைமரத் துண்டுகளை நட்டு வைத்து, அவற்றைச் சுற்றிலும் சுவர் எழுப்பு வதைப்போல் சணல் படுதாவைப் பொருத்தினால் அழகாக இருக்கும் என்பதே அத்திட்டம்.

இதற்காக உடனே பல நூறு அடிகள் நீளமுள்ள படுதாக்கள் வாங்கப்பட்டன. பல வர்ண சாயங்களைச் சட்டிகளில் கரைத்து வைத்துக்கொண்டு தூரிகையில் தாறுமாறாகத் தெளித்து காட்டினார் அண்ணா. இதைப் பின்பற்றி உடனே மற்ற தோழர்கள் அவ்வேலையை செய்து முடித்தார்கள்

ஆனால் பனை மரத் துண்டுகள் மாநாடு துவங்கும் நேரம் வரைக்கும் வந்து சேரவில்லை. இதனால் அண்ணாவுக்கு பெரிதும் மனக்குறையாக இருந்தது.

துவங்குவதற்கு சற்று முன்புதான் பனை மரத் துண்டுகள் வந்து சேர்ந்தன. உடனே அவற்றைக் கண்காட்சியை காணச் செல்லும் வழியில் இருபுறமும் நடச் சொன்னார். தோழர்கள் நட்டு முடித்தார்கள்.

அதன் பிறகு அந்த வண்ணத் திரைச் சீலைகளை கட்டச் சொன்னார். அந்த பனை மரத் துண்டுகளின் தொடர்ச்சியிலே வண்ணத் திரைச் சீலைகள் கட்டப் பட்டன.

கட்டி முடிந்ததும், அந்தக் கண்கொள்ளா காட்சியினை அண்ணா கண்டு களித்தார்கள். அதன் பிறகு தான் அவருக்கிருந்த மனக்குறைவு நீங்கி மனநிறைவு ஏற்பட்டது.

## 132. அன்பழகன் எம்.எல்.ஏ. ஆன கதை!

1956-ம் ஆண்டு மத்தியில் அண்ணா, அன்பழகன் வீட்டில் தங்கியிருந்த நேரம்; ஒரு நாள் காங்கிரஸ் பிரமுகர் எம். இராதாகிருஷ்ண பிள்ளை அன்பழகன் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது அண்ணா கண்ணை மூடிக்கொண்டு தூங்குவது போலப் படுத்துகொண்டு இருந்தார். வந்தவர், அன்பழகனை அழைத்து, "நான் சட்டமன்றத் தேர்தலில் எழும்பூர் தொகுதியில் காங்கிரசு அபேட்சகராகப் போட்டியிடப் போகிறேன். உங்களுக்கும், அண்ணாத்துரைக்கும் மிகுந்த தொடர்பு உண்டெனறும், அண்ணாத்துரை சென்னைக்கு வரும் போதெல்லாம், உங்கள் வீட்டில் தங்குவதாகவும் கேள்விப்பட்டேன். நீங்கள் அவரிடத்தில் ஒரு வார்த்தை சொன்னால் போதும் என்றும் கேள்விப்

பட்டேன்; எனவே நீங்கள் அவரிடம் சொல்லி எப்படி யாவது எழும்பூர் தொகுக்கு ஆள் போடாமல் பார்த்து கொள்ளவேண்டும்' என்று அவரிடத்திலே தெரிவித் தார்; அதற்கு நண்பர் அன்பழகன், "நான் சொன்னுல் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். பொதுச் செய லாளர் ஒருவர் இருக்கிருர். இதெல்லாம் கழகம் பார்த்துச் செய்யவேண்டியது. கழகத்தில் போய்ச் சொல்லுங்கள்" என்ருர்.

இராதாகிருஷ்ணன் பச்சையப்பன் அறநிலையப் பாதுகாப்பு குழுவில் ஒரு உறுப்பினர். நண்பர் அன் பழகனே அவர் கீழ் பணியாற்றும் ஒரு ஊழியர்! இராதாகிருஷ்ணன் எஜமான், அன்பழகன் அவரது தலைமையிலே பணியாற்றும் ஊழியர்! இவரிடத்திலே இராதாகிருஷ்ணன் வந்து கேட்கிருர் என்ருல் அதன் உட்பொருள், 'நான் எஜமான் — நீ ஊழியன்; நான் சொல்கிறபடி நீ நடந்தால் பிறகு நீ நினைக்கிறபடி நடக்கும்' என்பதுதான். அவர்கள் பேசுவதை அண்ணு அவர்கள் தூங்குவது போல் இருந்து கேட்டுக்கொண் டிருந்தார். எனவே அவர்கள் இரண்டு பேரும் நான் தூங்குவதாக நினைத்துக்கொண்டு சற்று தாராள மாகக்கூட பேசினுர்கள். இறுதியாக அன்பழகன், இராதாகிருஷ்ணன் அவர்களிடத்தில் 'நான் இதைப் பற்றி அண்ணு அவர்களிடத்தில் சொல்வதென்ருல் அவரே கூடத் தவருக எண்ணக்கூடும்; ஏதோ உத்தி யோக உயர்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும் நான் சொல்வதாகக் கூட நினைத்து, நீ கழகத்தைக் கெடுக்கப் பார்க்கின்ருய் என்று சொல்லக்கூடும். ஆகவே நீங்களே பாருங்கள்" என்று சொல்லி அனுப்பி விட்டார். இருவரும் பிரிந்து சென்றதும்,

அண்ணு தூக்கத்திலிருந்து விழித்து எழுபவர் போல எழுந்து அன்பழகன் துணைவியார் ஜெயலட்சுமியை அழைத்து, "உன்னுடைய கணவரை முதலில் வேலையை விட்டு விலகச்சொல். வரவிருக்கிற தேர்தலில் அவர் சட்டமன்றத்திற்கு போட்டியிடவேண்டும்; அதுவும் இதே தொகுதியில், இராதாகிருஷ்ண பிள்ளையை எதிர்த்து போட்டியிட வேண்டும்" என்று சொன்னுர்.

ஜெயலட்சுமிக்கு திகைப்பாக இருந்தது! அன்பழகனே அதை கேட்டுவிட்டு ஆச்சரியப் பட்டுப் போனுர்! காரணம், இராதாகிருஷ்ணப் பிள்ளைக்கு வேண்டிய உதவிகள் செய்யவில்லை என்ருல் அன்பழகனுக்கு தொல்லைகள் கொடுப்பார்; எனவே, அதை விட வேலையை விட்டுவிடுவதே மேல் என்ற முடிவிலே தான் அன்பழகனை தேர்தலில் போட்டியிடச் சொன்னுர் அண்ணு. அந்த மாதிரியான ஒரு சூழ்நிலையில்தான் அவர் தேர்தலில் போட்டியிட்டார்; வெற்றியும் பெற்ருர்.

## 133. ஆங்கில மாதால் கிடைத்த அனுபவம்!

1957-ம் ஆண்டு - இரண்டாவது பொதுத் தேர்தல் காலம் — 'அறிவகத்'துக்கு ஓர் ஆங்கில நாட்டு அம்மையார் வந்தார்; அண்ணு அப்பொழுது மேலே மாடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அந்த அம்மையார் அண்ணுவைப் பார்க்க வேண்டுமென்று விரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. பொதுச் செயலாளரைப் பார்க்கும்படி அண்ணு சொன்னுர்.

பொதுச் செயலாளரும் அப்பொழுது 'அறிவகத்'தி லிருந்தார். அந்த அம்மையார் பொதுச் செயலா ளரை மட்டுமின்றி அண்ணாவையும் பார்க்க வேண்டு மென்று விரும்பியதால் அவர்களை மேலே வருமாறு அழைத்தார்கள். அந்த அம்மையாரிடம் உரையாடு கையில் பொதுச் செயலாளரும் உடனிருந்தார்.

அந்த அம்மையாருக்கு 35 அல்லது 40 வயது இருக்கும். இங்கிலாந்து நாட்டிலுள்ள 4-5 பத்தி ரிகைகளுக்கு இந்தியாவில் நிருபராகப் பணியாற்று பவர் அவர். இந்தியத் துணைக் கண்டத்து அரசியல் நிலையைப் பற்றி இங்கிலாந்துப் பத்திரிகைகளுக்கு விளக்குவதற்காக அந்த அம்மையார் வந்திருந்தார். தி.மு. கழகத்தைப் பற்றிய ஒவ்வொரு நடவடிக்கை யையும் அண்ணா சொல்லும்போது அந்த அம்மை யார் மிக்க உற்சாகத்தோடு கேட்டறிந்தார்.

அண்ணா கூறியதையெல்லாம் கேட்ட அந்த அம்மையார், 'இவ்வளவு சிறப்புகளையுடைய உங்கள் கழகத்திற்கு - கழகக்கொள்கை கோட்பாடுகளை - வர லாறுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஏதே னும் புத்தகம் இருக்கிறதா? இருந்தால் கொடுங்கள்' என்று கேட்டார்கள், அப்பொழுது அண்ணா நெடுஞ்செழியன் முகத்தைப் பார்த்தார், அவர் அண்ணா முகத்தைப் பார்த்தார். அப்படிப்பட்ட புத்தகம் இருந்தால்தானே கொடுப்பதற்கு? இருந் தாலும் பிகுவை விடாமல் அண்ணா சொன்னார், 'எல்லாப் புத்தகங்களும் செலவாகி விட்டன; மீண்டும் அச்சடிக்க கொடுத்திருக்கிறோம்; உங்கள் முகவரியைக் கொடுத்து விட்டுப் போங்கள், அனுப்பி வைக்கச் சொல்கிறேன்' என்று கூறினார்.

அண்ணா அப்படிக் கூறியதைக் கேட்டுத் திருப்திப் படுவதைப் போல அந்த அம்மையாரின் முகம் காணப் பட்டதே தவிர — வெறும் உபசாரத்துக்காக அவர்கள் திருப்திபடுவதாகக் காட்டிக் கொண்டார் களே தவிர, உண்மையில் அம்மையாருக்குத் திருப்தி ஏற்படவில்லை.

அடுத்து, அந்த அம்மையார் அண்ணாவைப் பார்த் துக் கேட்டார்கள் — "நீங்கள் இத்தனைக் கூட்டங்கள் நடத்துகிறீர்களே - உங்கள் கூட்டங்களுக்கு இலட்சக் கணக்கான மக்கள் கூடுவதாகச் சொல்லுகிறீர்களே— அப்படியானால், அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் படம் பிடித்து வைத்திருப்பீர்களல்லவா? அந்த புகைப் படத் தொகுப்பு (ஆல்பம்) இருந்தால் காட்டுங்கள்" என்று கேட்டார்கள்.

அம்மையார் அப்படிக் கேட்ட பிறகுதான் அப்ப டிப்பட்ட ஒரு யோசனை - 'ஆல்பம்' வைக்க வேண்டும் என்னும் யோசனை அண்ணாவுக்கு வந்தது; என்ன செய்வது என்று புரியவில்லை. அப்பொழுது அவ ருக்கு ஒரு யோசனை வந்தது. அவ்வப்போது பல ராலே எடுக்கப்பட்ட படங்கள் சில, கண்ணாடி போட்டு 'அறிவகத்'திலே மாட்டப்பட்டிருந்தன. அண்ணா அம்மையாரை அழைத்து, "இதோ பாருங்கள்; இந்தப் படம்தான் நானும், நெடுஞ் செழியனும், மற்றவர்களும் சிறையிலிருந்து வெளி வந்த போது எடுத்த படம்; அதோ - அதுதான் கருணாநிதி விடுதலையானபோது எடுத்த படம்' என் றெல்லாம் ஒவ்வொரு படத்தையும் சுட்டிக்காட்டிப் பார்க்கச் சொன்னார்கள். தி.மு.க. கூட்டங்களுக்குத் தாய்மார்களும் வந்து ஆர்வத்துடன் கூடியிருப்பதைப்

படத்தில் கண்டு அந்த அம்மையார் ஆச்சரியப்பட்டார்கள்; 'இப்படமெல்லாம் 8 ஆண்டு நிகழ்ச்சிகளைத் தான் எடுத்துக் காட்டுகின்றன என்ருலும், இவற்றின் வரலாறு 30 ஆண்டுகளாகும்' என்று சொன்ஞர். 'அப்படியாஞல் இப்படத்தை எனக்குத் தருவிர் களா? என்று அம்மையார் கேட்டார்கள் - எப்படித் தர முடியும்? அந்தப் படங்களை யார் எடுத்தவர்கள் என்பதே அண்ணுவுக்கே தெரியாது; தெரிந்தாலும் வேறு பிரதிகள் எடுத்து வாங்கித் தரலாம்; எனவே - 'நீங்கள்தான் முகவரி தந்திருக்கிறீர்களே, புத்தகம் அனுப்புவதோடு சேர்த்து இதையும் அனுப்பி வைக்கிறேம்' என்று அண்ணு சொல்லி அனுப்பி வைத்தார்.

## 134. அண்ணு பார்ப்பன துவேஷியா?

1957-ல் நடந்த பொதுத் தேர்தலில் அண்ணு காஞ்சீபுரத்தில் போட்டியிட்ட நேரத்தில் அண்ணுவும், இராஜாஜியும் சென்னையில் சந்தித்தார்கள். அப்பொழுது அவர்கள் பல முக்கியமான பிரச்னைகள் பற்றி பேசிய பிறகு இராஜாஜி அண்ணுலைப் பார்த்துக் கூறிஞர்,

''பார்ப்பனர்களிடத்திலே உங்களுக்கு துவேஷமில்லை என்பதை குறிப்பிட்டு ஒரு அறிக்கை விடுங்களேன்'' என்ருர். அண்ணு அதைக் கேட்டு, 'எனக்கு பார்ப்பனரிடத்தில் துவேஷம் கிடையாது. நான் இப்பொழுது அப்படி ஒரு அறிக்கை விட்டால், இதற்கு முன்பு துவேஷம் இருந்ததாக அல்லவா நினைத்துக் கொள்வார்கள்?' என்ருர். அதற்கு

இராஜாஜி, "அதுவும் சரிதான்; தேர்தல் நேரத்தில் அப்படியொரு அறிக்கை விடுவது சரியில்லை என்று நினைக்கிறீர்கள் போலும்" என்ருர். 'இந்த நேரத்தில் மட்டுமல்ல; எந்த நேரத்திலும் அப்படியொரு அறிக்கையை விட நான் தயாராக இல்லை' என்று கூறிஞர் அண்ணு.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு இராஜாஜிக்கு அண்ணுமீது ஏதேனும் மதிப்பு ஏற்பட்டிருக்குமாஞல் அது அண்ணு அப்படி அறிக்கைவிட மறுத்து உரைத்ததன் விளைவாகத்தான் ஏற்பட்டிருக்குமே தவிர, அவர் கூறியதை அப்படியே கேட்டு அறிக்கை விட்டிருப்பாராஞல் அவர் அண்ணுவை மிகச் சாமான்யமாகவே மதிப்பிட்டிருப்பார். "எனக்கு எவரிடத்திலும் எப்பொழுதுமே துவேஷமிருந்ததில்லை." என்று அண்ணு கூறிஞர். "நீங்கள் என்னிடம் கூறுவதையாவது பத்திரிகையிலே வெளியிட்டால் நலமாக இருக்கும்" என்ருர் இராஜாஜி. அப்பொழுதும் அண்ணு மறுத்து, "பத்திரிகையில் எழுதுவது உங்களுக்குக் கூறியதாகாது; ஊராருக்கு சொன்னதாக ஆகும். ஆகவே, எதுவும் பத்திரிகையில் எழுத வேண்டிய அவசியமில்லை" என்ருர்.

## 135. அண்ணு பாதை!

காஞ்சிபுரம் தொகுதியைச் சேர்ந்த பல கிராமங்களுக்கும் அண்ணு அவர்கள் வாக்காளர்களைச் சந்திப்பதற்காகச் சென்று வந்து கொண்டிருந்தார்கள். அப்படியே ஒரு கிராமத்திற்கு அண்ணுவும் வேறு

சில நண்பர்களும் சென்றூர்கள். அந்த ஊர் மக்களும் அண்ணு அவர்களை மற்ற பகுதி மக்கள் வரவேற்ற தைப் போலவே மிகுந்த உற்சாகத்தோடும் மகிழ்ச்சி யோடும் வரவேற்றூர்கள். அண்ணு அங்குக் கூடி யிருந்தவர்களைப் பார்த்து "உங்கள் ஊர்ப்பாதை புதி தாக இருக்கிறதே எப்பொழுது போடப்பட்டது" என்று கேட்டார்கள். மிகச் சமீப காலத்தில் தான் போடப்பட்டது என்றும், அதுவும் தேர்தலுக்காகப் போடப்பட்டது என்றும் தெரிவித்தார்கள். அந்தக் கூட்டத்திலே இருந்த ஒருவர் இந்தப் பாதைக்கு நாங்கள் "அண்ணுத்துரை பாதை" என்று பெயர் வைத்திருக்கிறோம் என்றூர். ஏன்? என்று புன் முறுவலோடு கேட்டார்கள். அதற்கு அவர் கூறினூர் "நீங்கள் இந்தத் தொகுதியில் தேர்தலுக்கு நிற்கிற காரணத்தால்தான் இவ்வளவு அவசர அவசரமாக காங்கிரஸ் சர்க்கார் இந்த ஊர்ப்பாதையைப் போட் டிருக்கிறூர்கள். ஆக இது உங்களால் எங்களுக்குக் கிடைத்ததுதானே, எனவே 'அண்ணுத்துரை பாதை' என்ற பெயர் இதற்குப் பொருத்தம்தானே" என்றூர். சூழ்ந்து நின்றவர்கள் அனைவரும் அதனை சிரிப்புடன் ஆமோதித்தனர்.

## 136. இலட்சங்களா? இலட்சியங்களா?

முதன் முதல் தி.மு. கழகம் தேர்தலில் வெற்றி பெற்றபோது, காங்கிரசைக் காலமெல்லாம் எதிர்த்து வந்த ஒருவர் - ஆனல் தி.மு. கழகம் அல்ல - அண்ணுவை வரவழைத்து தமது வாழ்த்தையும் பாராட்டுதலையும் தெரிவித்ததுடன், இந்தவிதமான

வெற்றியும் வளர்ச்சியும் கழகத்துக்குக் கிடைத்திடும் அதிலும் இவ்வளவு குறுகிய காலத்தில் என்று நான் எண்ணிடவே இல்லை, எப்படியோ நல்ல இடம் கிடைத்து விட்டது; இனி அதனைக் கெட்டிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றுரைத்தார். அதைக்கேட்ட அண்ணு மகிழ்ச்சி அடைந்தார். இதுவரையில் கழ கத்துக்கு ஆதரவு காட்டாதிருந்து வந்தவர்களெல் லாம்கூட, இது வளருகிற கட்சிதான் என்பது இப் போது மெய்ப்பிக்கப்பட்டு விட்டதால், இனி ஆதரவு அளித்திட முன்வருவார்கள் என்று பேசி அண்ணுவின் ஆவலைக் கிளறினுர்.

அந்த ஆவலுடன் அண்ணுவுக்கோர் ஐயப்பாடு கிளம்பிற்று. ஆதரவு கிடைத்திடும் என்கிருரே. எந்த இடத்து ஆதரவோ என்பது பற்றிய ஐயப்பாடு தான்! அண்ணுவின் ஐயப்பாட்டை அந்தப் பிரமுகரே பின்னுல் பேசி போக்கி விட்டார், "நான் சில கம் பெனிகளுக்குச் சொல்ல முடியும்; ஆதரவு காட்டச் சொல்லி. அவர்களுக்கெல்லாம் சில இலட்சங்களை நன்கொடையாகக் கொடுப்பது என்பது மிக எளிதான காரியம்" என்றுர் அந்த பிரமுகர்.

"ஒரு காரியம் செய்ய வேண்டும் நீங்கள் தொழில் களை - தேசிய மயமாக்க வேண்டும் என்ற பேச்சை விட்டுவிட வேண்டும்; அது சரியான திட்டமல்ல; அதனை மட்டும் கழகம் மறுத்து விடுமானுல், தொழிற் கோட்டங்கள் உமது கழகத்துக்கு நன்கொடை தந்திடத் தாராளமாக முன்வரத் தயக்கம் கொண் டிடாது" என்றுர்.

நதுமகொள்கையை விலை பேசுகிருர் என்பதை

அறிந்தார் அண்ணு. எந்த கொள்கையைக் கூறி மக்களின் பேராதாரவைப் பெற்ருேமோ, அதே கொள்கையை, கம்பெனிகளிடம் நன்கொடை வாங்கிட, 'விட்டுவிடச்' சொல்லுகிருரே என்று அதிர்ச்சியடைந்தார்.

கழகத்தின் வளர்ச்சியும் வெற்றியும் அவருடைய மனதிலே அந்த அளவுக்கு மதிப்பைக் கொடுத்தது.

அதஞல் அண்ணு கோபம் கொள்ளவில்லை; வீண் வேலை அல்லவா? அவர் அவருடைய 'அரசியலை'ப் பேசிஞர். அண்ணு தனது அரசியல் வேறு என்று கூறிவிட்டு வந்து விட்டார்.

## 137. தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது யாரால்?

அண்ணு காஞ்சீபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம். காஞ்சீபுரம் எங்கும் குடிநீர் பஞ்சம் ஏற்பட்டு மக்களின் அபயக்குரல் எழுந்தது. பதவிக்கு வந்து ஒரு சில மாதங்கள் ஆவதற்குள்ளாகவே இப்படி ஒரு சோதனை அண்ணுவுக்கு ஏற்பட்டது, அதைப் பயன்படுத்திக் கொண்டு சில காங்கிரசுக்காரர்கள், "பாத்தீர்களா, அண்ணுத்துரை சட்டசபைக்கு சென்ருர், வந்தது வினை' என்று ஆர்ப்பரித்தனர். இந்த அபவாதத்தை அண்ணுவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'என்ஞல்தான் இக்கேடு என்பது உண்மையாஞல்—அபயக் குரலை அவர்களால் அகற்ற முடியுமாஞல் நான் எதற்கு? எம்.எல்.ஏ, பதவியை ராஜிஞமா செய்யவும் தயார்' என்று தன்னுடைய வெள்ளை உள்ளத்தைத்

திறந்து காட்டினார் அண்ணா அவர்கள். இப்படி ஒரு அறைகூவலை விட்டு அன்று சும்மா இருந்து விடவும் இல்லை. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல மக்கள் குடிநீர் பஞ்சத்திலிருந்து மீட்க ஆட்சியாளர் மூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டார். மக்களும் தண்ணீர்பஞ்சத்திலிருந்து மீட்கப் பட்டனர்.

## 138. கருணாநிதிக்கு கணையாழி!

1959-ம் ஆண்டில் சென்னை மாநகராட்சித் தேர்தல் நடந்தபோது தேர்தல் குழுவிற்கு கலைஞர் மு. கருணாநிதி தலைவராக இருந்தார், அவர் ஒருமுறை அண்ணாவிடம் பேசிக்கொண்டிருக்கும்போது,

''இத்தேர்தலில் பல இடங்களில் வெற்றி பெறுவோம், என்று அண்ணாவிடம் கூறினார். 'முடியாது, வெற்றிபெற முடியாது' என்றார் அண்ணா. அப்படி வெற்றி பெற்றால் என்ன தருவீர்கள்? என்று கருணாநிதி கேட்டதற்கு, அண்ணா எதுவுமே தர வேண்டிய அவசியமிருக்காதே என்று கருதி 'ஒரு பவுனிலே தங்க மோதிரம் போடுகிறேன்' என்று சொன்னார், கருணாநிதி கூறியபடி சென்னையில் 45 தோழர்கள் வெற்றி பெற்று கார்ப்பரேஷனைக் கைப்பற்றினார்கள். அண்ணா சொன்னபடி கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் கருணாநிதிக்கு அண்ணா ஒரு சவரனில் கணையாழி அணிவித்து மகிழ்ந்தார்கள்.

## 139. அண்ணா எடுத்துக்கொண்ட சபதம்!

சென்னை மாநகர ஆட்சி மன்றம் தி.மு.க.வின் ஆட்சியின் கீழ் வருவதற்கு முன்பு நகரமன்றத்தில் உள்ள குமாஸ்தாக்கள் அமைத்துள்ள தொழிற்சங்கம் ஒன்றில் ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசவேண்டும் என்று அந்த தொழிற்சங்கத் தோழர்கள் சிலர் அண்ணாவை வந்து அழைத்தார்கள். அண்ணாவும் வருவதாக ஒப்புக் கொண்டார். சில நாட்கள் கழித்து அந்தத் தோழர்கள் சிலர் கண்ணீரும், கம்பலையுமாக அண்ணாவிடம் வந்து எங்களை மன்னிக்க வேண்டும் அண்ணா, நாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு, முயற்சி செய்து, தங்களைப் பேசவைக்க எண்ணினோம். ஆனால் எங்களுடைய மேல் அதிகாரிகள் எங்களை அழைத்து இப்படி நீங்கள் செய்வதன் மூலம் எதிர்காலத்தில் நகரமன்றத்தை தி. மு. கழகத்தினிடம் ஒப்படைப்பதற்காகவா செய்கிறீர்கள்? அவர் கலந்து கொள்வதை நான் அனுமதிக்க மாட்டேன் என்று கடுமையாக எச்சரித்தாராம், அச்சமூட்டினாராம். அன்றைய தினம் அண்ணா எண்ணிக் கொண்டார், "அப்படிப்பட்ட நகரமன்றம் நம்முடைய தோழர்களால் அணி செய்யப்படும் வரை நகர மன்றத்துக்குள் நுழைவதில்லை" என்று. அவரது ஆசை 1959-ல் நிறைவேறியது. அண்ணாவின் சபதப்படி தி. மு. கழக மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தியை டெலிபோன் மூலம் அண்ணாவுக்கு தோழர்கள் அறிவித்தபோதுதான் அண்ணா நகரமன்றத்திற்குள் சென்றார்.

## 140. வானொலியில் பேச மறுப்பு!

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு திருச்சி வானொலி நிலையத்தில் இருந்து, 'பொது மக்களுடன் தொடர்பு கொள்வதற்கான வழிமுறைகள்' என்ற வரிசையில் 'பேச்சு மேடை' என்று பேசுமாறு அண்ணாவுக்கு அழைப்பு வந்தது. அதற்கு முன்னால் ஒரு தடவை 'பேச்சு மேடை' என்ற அதே தலைப்பில் அதே நிலையத்தில் அண்ணா பேசி இருக்கிறார். மீண்டும் அதையே பேச அண்ணா விரும்பவில்லை. 'நான் எப் படியும் வானொலியில் பேச வேண்டும் என்று விரும்பு வீர்களானால் இந்த தலைப்பு வேண்டாம்; நாட்டில் கண்காட்சிகள் பல நடக்கின்றன. அதனால் மக்கள் கருத்து வளர்கிறதா—அல்லது கடை வியாபாரம் பெருகி, பொருள்கள் அதிக விலைக்கு விற்கப் படுகின்றனவா—என்ற கருத்தை விளக்கிப்பேச ஏற்பாடு செய்யுங்கள் நான் பேசுகிறேன் என்று திருச்சி வானொலி நிலையத்துக்கு எழுதினார் அண்ணா. ஆனால் அந்த திருச்சி வானொலி நிலைய அதிகாரியோ, தாம் கொடுத்த தலைப்புத்தான் பேசவேண்டும் என்றார்.

வானொலியில் எப்படியாவது பேசவேண்டும் என்று அண்ணா ஆசைப்பட்டால் எதைப்பற்றியும் பேசலாம்; அப்படி ஆசைப்படும் பருவத்தை கடந்து விட்டவர் அண்ணா. பேசவேண்டும் என்று நினைப் பதை பேச வாய்ப்பு இருந்தால்தான் பேசுவார், இல்லையேல் அதைப் பேச வாய்ப்புக் கிடைக்கும்வரை பேசாமலிருப்பார். எனவே அதிகாரியின் அழைப்பை ஏற்க மறுத்தார். அன்று முதல் வானொலியிலிருந்து பல அழைப்புகள் வந்ததுண்டு; அண்ணா பேசவில்லை.

## 141. விபத்தில் மாண்டார்!

பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 1 மணியிருக்கும், அண்ணா அவர்கள் சென்னை நுங்கம்பாக்கம் இல்லத்தில் உள்ளே படித்துக்கொண்டிருந்தார்கள். அப்போது தினத்தந்தி நிருபர்கள் இரண்டு பேர் வீட்டுக்கு ஓடோடி வந்து அண்ணா இருக்கிறாரா? அண்ணா இருக்கிறாரா? என்று வெளியே இருந்தவர்களைக் கேட்டார்கள். அண்ணா உள்ளே படித்துக் கொண்டிருக்கிறார் போய் பாருங்கள் என்று வெளியே இருப்பவர்கள் சொல்ல, அந்த நிருபர்கள் இருவரும் வந்து அண்ணா முன்னே நின்று அண்ணாவை ஏற இறங்கப் பார்த்தார்கள், அவர்களைக் கண்டதும் அண்ணா 'என்னய்யா இந்த நேரத்தில் வந்திருக்கிறீர்கள்?' என்றார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை, ஒரு விபரீதச் செய்தி கேட்டுப் பதறிப் போய் ஓடி வந்தோம்! என்றார்கள், 'என்ன செய்தி' என்று அண்ணா கேட்க, அவர்கள் மெதுவாக விஷயத்தைச் சொன்னார்கள். இரவு 11 மணிக்கு தினத்தந்தி ஆபீசுக்கு யாரோ டெலிபோனில் செய்தி கொடுத்தார்களாம். "அண்ணாத்துரை மனைவியார் மாரடைப்பால் அவதிப்பட்டு, கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி கேள்விபட்டு அண்ணாத்துரை, சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மோட்டார் கார் மூலம் சென்று கொண்டிருக்கையில், வாலாஜாபாத்துக்கு அருகில் கார் ஒரு பாலத்தில் மோதி அதன் விளைவாக அண்ணாத்துரையின் கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்டு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்; அங்கு அவர் இறந்துவிட்டார்" என்று அந்தச் செய்தியில் கூறப்பட்டதாம். உடனே அந்தச்

செய்தியை அவர்கள் அச்சுக்கு கொடுத்துவிட்டு எல்லாவற்றிற்கும் இச்செய்தி உண்மையாக இருக்குமா என்ற சந்தேகம் ஏற்படவே சந்தேகத்தை தீர்த்துக் கொண்டு பிறகு பத்திரிகையில் வெளியிடலாம் என்று முடிவு செய்து மருத்துவமனைக்கு போன் செய்து கேட்டிருக்கிறார்கள், அன்பழகன் வீட்டுக்கும் சத்தியவாணிமுத்து வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் டெலிபோன் செய்து கேட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே, இன்று இரவு 8மணிக்கு இங்கு இருந்தாரே. நாங்கள் பார்த்தோமே. காஞ்சீபுரம் போவதாக அவர் எங்களிடம் சொல்லவில்லையே என்று கூறியிருக்கிறார்கள். அதன் பிறகுதான் அந்த நிருபர்கள் அன்று இந்த இடத்துக்கு வந்திருக்கிறார்கள்,

கல்லுப் பிள்ளையார் போல் உட்கார்ந்திருந்த அண்ணாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள், அப்போது அண்ணா அவர்கள் நிருபர்களிடத்திலே, "என்னை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள். அண்ணாத்துரைதான் நான். வேறு பேயோ, பிசாசோ அண்ணா உருவில் இங்கு உட்கார்ந்துக் கொண்டிருப்பதாக எண்ணாதீர்கள். என் பாதம் வரையில் பாருங்கள். பாதம்தான் தரையில் படுகிறது, பிசாசுக்கு பாதம் தரையில்படாது என்பார்கள், ஒருவேளை அண்ணாத்துரை செத்துப்போய் அண்ணாத்துரை உருவில் பிசாசு இங்கு மந்து உட்கார்ந்து கொண்டிருப்பதாகக் கூறினாலும் கூறுவார்கள்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்! பிறகு அவர்கள் வணக்கம் தெரிவித்துவிட்டு விடைபெற்றனர்.

## 142. காரும் கட்டை வண்டியும்!

அண்ணாவுடன் சில நண்பர்கள் திருச்சியிலிருந்து காரில் ஈரோட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். போகும் வழியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. பேசும் பாணியும், கூட்டத்தின் அமைப்பும் அது ஒரு திராவிட கழக கூட்டம் என்பது தெரிந்தது. அந்தக் கூடடத்தில் பேசிக்கொண்டிருந்த ஒருவர் அண்ணாவைக் குறித்து கீழ்த்தரமாக பேசிக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட அண்ணாவுடன் சென்று கொண்டிருந்த நண்பர்கள், "ஏன் அண்ணா உங்களை இப்படி ஏசுகிறார்கள்? நீங்கள் யாரையும் எதுவும் சொல்வது இல்லையே, அப்படி இருக்க ஏன் இப்படி பேசுகிறார்கள்" என்று கேட்டார்கள் அதற்கு அண்ணா பதில் ஒன்றும் சொல்லாமல் மவுனமாகவே உட்கார்ந்து கொண்டிருந்தார்; காரும் ஓடிக் கொண் டிருந்தது.

சற்று நேரத்தில் எதிரில் ஒரு மாட்டுவண்டி வந்தது. ஓடிக்கொண்டிருக்கின்ற காரைப்பார்த்து அந்த வண்டிக்காரன், "டேய் மெல்லப் போங்கடா" என்று இவர்களைப் பார்த்து கூறிக்கொண்டே போனான்.

அதைக்கேட்ட அண்ணா அவர்கள் நண்பர்களைப் பார்த்து, "பார்த்தீர்களா? இப்பொழுது இவனை நாம் ஒன்றுமே செய்யவில்லை. ஆனாலும் நம்மைத் திட்டு கின்றான். ஏன்? நம் கார் ஓட்டத்துக்கு இவனால் வரமுடியவில்லை, அதனால்" என்றார்.

## 143. ராஜ்ய சபையில் நடந்த வேடிக்கை!

அண்ணு அவர்கள், நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக இருந்த சமயம், தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு வேகமாக நடைபெற்று வந்த காலம். துப்பாக்கி வெடிச் சத்தம் தமிழகத்தை கிடுகிடுக்க வைத்த வேளே, மாணவர் படை முழுமூச்சாக, இந்தியை எதிர்த்த அந்த போராட்ட சமயத்தில், அண்ணு மேலவையில் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது மேலவைக்கு தலைவராக இருந்தவர் இன்றைய ராஷ்டிரபதியான திரு. ஜாகீர் உசேன். இவர் சட்ட திட்டங்களில் மிகக் கண்டிப்பானவர். பிற்பகல் இடைவேளைக்குச் சற்று முன்புதான் அண்ணு அவர்களுக்கு பேச வாய்ப்புக்கிடைத்தது. எனவே, அண்ணுவுக்கு அதிக நேரம் கிடைக்காதே என்ற கவலை பலருக்கும் உண்டானது. ஆனால், அண்ணுவோ சிறிதும் கவலைப்படாமல் பேச எழுந்தார். ஒருமைப்பாடு, மொழிப்பிரச்னே, இந்தி என்பவைகளை விளக்கித் தொடர்ந்து பேசிக் கொண்டே வந்தார். மணி ஒன்ருகி விட்டது. எனவே அவைத் தலைவர் அண்ணுவைப் பார்த்து மணியாகி விட்டது என்ருர். அப்போது அவையில் யாரும் எதிர்ப்பாராத வகையில் ஒரு அதிசயம் நடைபெற்றது. சில காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து நின்று, "அண்ணு அவர்கள் பேசட்டும்!" என்றனர் இந்த மாதிரியாக எதிர்கட்சிக்காரர்கள் தங்களை தாக்கக் கூடிய ஒரு பேச்சாளரின் பேச்சை ஆர்வத்தோடு கேட்டதையும், அவர் தொடர்ந்து பேசவேண்டும் என்று கோரியதையும், சபையில் கண்டது இதுவே முதல் தடவையாகும்.

அப்பொழுது அவைத் தலைவர் என்ன செய்ய

முடியும்? அவர் சபையை இன்னும் பத்து நிமிடம் நீடிக்க செய்து அண்ணுவை பேச அனுமதித்தார். அண்ணு அவர்கள் பேச்சை முடிக்கும் போது தலைவர் அனுமத்த பத்து நிமிடமும் கடந்துவிட்டது. ஆனல் சபையில் ஒருவரும் எழுந்திருக்க வில்லை என்பதோடு மட்டுமல்ல, வயதான காங்கிரஸ்காரர்களும், அனுபவ சாலிகளான சுயேச்சை உறுப்பினர்களும், அண்ணு பேச்சில் நியாயம் இருக்கிறதெனப் பாராட்டினர்கள். இந்த உரையின் போது அனைவரையும் குலுங்க குலுங்க சிரிக்க வைத்த சம்பவம் ஒன்று நடை பெற்றது.

அண்ணு பேசும் போது ஓர் உறுப்பினர் இடை யிடையே எழுந்து அண்ணுவை மறுத்துப் பேச ஆசைப்படுவர் போல் காட்டிக்கொண்டார். இதைப். பலமுறை கவனித்த அண்ணு என்ன நினைத்தாரோ தெரிய வில்லை. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அந்த உறுப்பினர் எழுந்ததும், அண்ணு சடாரென உட் கார்ந்துவிட்டார்.

சபையினர் அண்ணு பேச்சை இடையிலேயே நிறுத்தி உட்கார்ந்து விட்டாரே என அவரைப் பார்க்க, அவர் எழுந்து நின்ற உறுப்பினரைச் சுட் டிக் காட்டி "அவர் ஏதோ சொல்ல விரும்புகிருர், அவர் சொல்லட்டும்" என்ருர். அனைவரும் அந்த உறுப்பினரைப் பார்க்க, அவர் அண்ணு, தம்மை மாட்டி வைத்து விட்டாரே எனத் திக்கு முக்காடித் திணறிப் பரிதாபமாக நின்ருர். சபை சிரிக்கவும் பெரிய வேடிக்கையாகப் போய் விட்டது. பிறகு அந்த உறுப் பினர் அண்ணு பேசுகிற வரையில் எழவும் இல்லை. வாய் திறக்கவும் இல்லை.

## 144. மங்கை மறைந்த மாயம்!

சில ஆண்டுகளுக்கு முன்பு புதுச்சேரியிலே அண்ணா அவர்களுக்கு நண்பர்கள் புதுமையான பேனா ஒன்றை வாங்கித் தந்தார்கள். அந்தப் பேனாவைத் திறந்து எழுத ஆரம்பித்தால், அதில் ஓர் அழகிய மங்கை நடனமாடுவது போலத் தெரியும். அதை அண்ணா ஆசையோடு வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டார். பின்னர் திண்டிவனம்வந்ததும், அதைத் திறந்து எழுதப் பார்த்த போது அந்த அழகிய மங்கையைக் காணவில்லை. அந்த மங்கையின் உருவம், கடையிலே பேனாவைப் பார்த்த போது இருந்தது; ஆனால் திண்டிவனத்தில் திறந்து ஆசையுடன் பார்த்த போது மங்கையைக் காணோம்.

## 145. கட்டில் கால் வெட்டிய கதை!

சிங்கப்பூரில் இருந்து திரும்பிய அண்ணா பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்பொழுது முகத்தை துடைத்துக் கொள்வதுபோல, துண்டினால் முகத்தை அடிக்கடி மறைத்துக் கொண்டிருந்தார்.

"ஏன் முகத்தை மூடிக் கொள்ளுகிறீர்கள்?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

"அதுவா?" என்று கேட்டுக் கொண்டே துண்டை விலக்கினார். அண்ணா அவரது அழகு மீசையைக் காணோம்.

"சிங்கப்பூரில் அவசரமாக ஒரு நிகழ்ச்சிக்குப் போக வேண்டியிருந்தது. நானே முகத்தை வழித்

துக்கொண்டேன், மீசையை வெட்டி விட்டேன்; அது கட்டில் கால் வெட்டிய கதையாகி விட்டது'' என்ருர் அண்ணு.

## 146. தலை வணங்க வைத்த தளிர்க்கரம்!

முதலமைச்சராவதற்கு முன் இலட்சக்கணக்கான மாலைகளை, அண்ணுவின் கழுத்து பார்த்திருக்கும். முதலமைச்சரான பிறகோ, சொல்ல வேண்டியதில்லை. ஆனுலும் ஒரு மாலையை அவர் மறக்க முடியாது. தளிர்க்கரம் ஒன்று எக்கிப் போட்ட பூ மாலை தான் அது.

''குனியுங்க தாத்தா'' என்று முதலமைச்சரையே 'அதட்டி'ப் பணிய வைத்து, மாலையைப் போட்ட பயல் வேறு யாருமல்ல, அவருடைய பேரப்பிள்ளை தான்.

அண்ணுவின் வளர்ப்புப் புதல்வர்கள் மூவரில், மூத்த மகனுகிய பரிமளத்தின் இரண்டு வயதுக் குட்டிப் பயல் மலர் தான் அவன் முதலமைச்சரான பிறகு ஒரு வாரம் கழித்து அண்ணு முதன் முதலாக தமது சொந்த ஊரான காஞ்சியிலுள்ள தமது சொந்த வீட்டுக்கு வந்த போது இந்தப் பெரிய மனிதன் தான் அவரை வரவேற்ருன்.

இந்தப் பயல் மாலையும் கையுமாக ஓடி வருவதைப் பார்த்தவுடனே முதலமைச்சர் அடங்கி, ஒடுங்கி தலை வணங்கிஞர் மாலையை அணிந்து கொள்ள. முதல் அமைச்சராயிருந்தாலும் அவனுக்குப் பாட்டஞர் தானே! சின்னஞ்சிறு கைகள் அந்த

பெரிய மாலையை அணிவித்தன. இந்தப் பயலுக்குத் தாத்தா மீது கொள்ளை ஆசை அப்படியே; அண்ணாவுக்கு இவன்மீது உயிர். அண்ணாவின் வீட்டுக்கு மாலையுடன் யார் போனாலும் சரி, அவர்கள் அந்த மாலையை அவருக்குப் போட முடியாது. இந்த முந்திரிக் கொட்டை போட விடமாட்டான். வினயமாகச் சிரித்தபடியே மாலையைக் கொடுங்க என்று சொல்லி வாங்கிப் போய் அவனே தாத்தாவுக்குப் போடுவான்.

எவ்வளவு பெரிய பிரச்னை குறித்து எவருடன் தாத்தா பேசிக் கொண்டிருந்தாலும் சரி, இவனைப் பார்த்தவுடனே பேச்சை நிறுத்தி விட்டு, மாலைக்குத் தலை வணங்கியே தீரவேண்டும். ஒரு நாளைக்கு எத்தனையோ முறை அண்ணாவை தலை வணங்க வைத்திருக்கிறது இந்தப் பயலின் தணிர்க்கம்.

## 147. முதலமைச்சர் கைதானார்!

கேட்டவுடன் வியப்பூட்டும் இச் செய்தி, எதிர்ப்பாராமல் நடந்து விட்டதென்று தான் கூற வேண்டும். தமிழக முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் அமைச்சரவை அமைத்துச் சில நாட்கள் இருக்கும்; ஒரு நாள் மத்தியானம் சாப்பிட்டுவிட்டு, திண்ணையில் ஈஸிசேரில் வந்து சாய்ந்தார்கள், அப்போது திடீரென்று வந்த நாலைந்து போலீஸ்காரர்கள் அண்ணாவைக் கைது செய்து போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டு போய் விட்டார்கள். அண்ணாவுக்கு ஏதும் விளங்கவில்லை, மறுநாள் கோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்டு அங்கு விசாரணை நடந்தது. விசாரணை முடிவில் அண்ணாவுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டு தீர்ப்பும் கூறப்பட்டது. திடுக்கிட்ட

அண்ணு, அப்போதுதான் கண்ணை விழித்துப் பார்த் தார்கள். பிறகுதான் கண்டது கனவென்று புரிந்தது.

இந்த சம்பவத்துக்கு சற்று நேரத்திற்கு முன்பு தான் சிறை அதிகாரிகள், அண்ணுவை வந்து சந்தித்து விட்டுப் போனுர்கள். அதே நினைவிலிருந்ததால் சாப் பிட்ட மயக்கத்தில் ஈஸிசேரில் சாய்ந்ததும் அப்படியே தூங்கிவிட்டார், இம்மாதிரி கனவு ஏற்பட்டுவிட்டது, "பாருங்கள் 'கனவில்' கூட சுகமாக இருக்க விரும் பாமல் மக்களுக்காகப் போராடி, சிறை செல்லவே நினைக்கிரும்." என்று இத்தகவலைப் பொதுக் கூட் டத்தில் அண்ணு வேடிக்கையாகக் கூறினுர்கள்.

## 148. பணிப்பெண் காட்டிய பரிவு!

டில்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விமானத்தில் சென்று கொண்டிருந்த சமயம், வழியில் விமானப் பணிப் பெண் அவருக்கு காப்பி கொண்டுவந்து கொடுத்தாள். தனித் தனியே வைக்கப்பட்டிருந்த பாலையும் டிக்காஷ னையும் தம் சுவைக்கு ஏற்றபடி டிகாஷனை சிறிது அதி கமாகச் சேர்த்து "ஸ்ட்ராங்"காக கலந்துகொண்டார் அண்ணு. ஆனுல் சர்க்கரை மட்டும் அவர் இஷ்டப்படி கலந்து கொள்ள வைக்கப்படவில்லை. பணிவ பெண் ஒரே கட்டி சக்கரை தான் காப்பியில் போட்டாள்.

அண்ணு அதைக் கலந்து காப்பியைச் சுவைத்துப் பார்த்தார். கசந்தது, மேலும் ஒரு கட்டி சர்க் கரையை போடச் சொல்லிக் கேட்டார். பணிப்பெண்

முதலில் தயங்கினாள். பிறகு உண்மையைச் சொன்னாள்.

''ஒரு கோப்பை காப்பிக்கு ஒரு கட்டி சர்க்கரை தான் அனுமதிக்கப் பட்டிருக்கிறது'' என்று.

காப்பியை என்ன செய்வதென்று தெரியாமல் அண்ணா திகைத்தார். ''இந்தக் கஷ்டம் தெரிந்திருந்தால் டிகாஷனையாவது குறைச்சலாகக் கலந்திருக்கலாமே?'' என்று யோசித்தார்.

நல்ல வேளை, பணிப்பெண்ணின் மனம் இரங்கியது! மற்றொரு கட்டிச் சர்க்கரையையும் கொண்டு வந்து காப்பியில் போட்டாள். அந்தப் பணிப்பெண்ணின் செய்கை அண்ணாவுக்கு ஏதோ பெரிய தயவு காட்டியது போல் இருந்தது.

## 149. அண்ணா அனுப்பிய மருந்து!

அண்ணா அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வந்த போது கும்பகோணத்திலிருந்த ஒரு சாதாரண ஏழை நோயால் அவதிப் பட்டு மூளை பாதிப்பு ஏற்பட்டு மருத்துவ மனையிலிருந்து வந்தார். அமெரிக்காவிலிருந்து ஒரு மருந்து இங்கே கிடைத்தால் மூளை வியாதி பீடிக்கப்பட்டிருக்கும் அவர் குணமடைய முடியும் என்று டாக்டர்கள் கருதினர், இந்தச் சேதியை அறிந்த அவரது உறவினர் அமெரிக்காவிலிருந்த அண்ணாவிற்கு தகவல் தந்தனர். சேதி அறிந்த அண்ணா தாம் நோயில் படுக்கையிலிருப்பதையும்

மறந்து, உடனே முதலில் அந்த மருந்தை அமெரிக்கா விலிருந்து தாயகம் அனுப்பி, நாவலரிடம் தந்து அவசரமாக கும்பகோணத்திலிருக்கும் அந்த நோயாளிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார்.

அதன்படி மருந்து வரப் பெற்று சிகிச்சை பெற்ற கும்பகோணம் நோயாளி மூளை பாதிக்கப் படுவதிலிருந்து மீண்டு உயிர் பெற்ருர்.

## 150. இதயம் உறங்குவதற்கு முன் !

அண்ணு அவர்கள் அடையாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அறுவை சிகிச்சை நடப்பதற்கு முன்னுள் இரவு அவரது குடும்பத்தினர் எல்லோரும் ஒருங்கே கூடி அவரோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். ஆனுல் அவருக்குப் பிரியமான பேரன் மலர்வண்ணனை மட்டும் வீட்டிலேயே தூங்க வைத்து விட்டு மருத்துவ மனைக்குச் சென்றிருந்தார்கள். பேச்சின் நடுவில் அண்ணு அவர்கள், ''குழந்தை எங்கேம்மா?'' என்ருர். அதற்கு பரிமளத்தின் மனைவி, குழந்தை வீட்டில் தூங்குகிருன். அவனுக்குத் துணையாக வீட்டில் வேலை செய்வோர் இருக்கிருர்கள் மாமா! என்று சொன்னுர் அதைக் கேட்ட அண்ணு அவர்கள், அப்படி செய்வது தவறு! என்று கடிந்து கொண்டார். அப்போது அங்கேயிருந்த பரிமளம் விளையாட்டாக, அதிலென்ன தவறு அப்பா? என்ருர்.

அதற்கு அண்ணு அவர்கள், தமது மார்பின் இடது பக்கத்தைக் காண்பித்து, ''நீ குழந்தையாக இருந்த

போது இங்கே வைத்து தூங்கச் செய்திருக்கிறேன்'' என்றார். அதைக்கேட்ட பரிமளம் உள்ளம் நெகிழ, ''அப்படி வைத்துத்தான் என்னை தைரியமில்லாமல் வளர்த்துவிட்டீர்கள்'' என்றார் அண்ணா அவர்களோ, ''இல்லம்மா பரி! இந்த இதயத்தையே உனக்கு கொடுத்திருக்கிறேன்'' என்றார். அந்த வார்த்தைகள் அங்கிருந்த அனைவரையும் கலங்க வைத்தது.

## எங்களிடம் கிடைக்கும்
## இதர வெளியீடுகள்!

அறிஞர் அண்ணாவின்
அண்ணாமலைப் பேருரை! — ரூ. 1–50

அறிஞர் அண்ணா சொன்ன
குட்டிக் கதைகள் 100 — ரூ. 1–50

Learn Tamil in 30 days
(through English) — Rs. 2–50

Learn Tamil in 30 days
(through Telugu) — Rs. 2–50

Learn Tamil in 30 days
(through Hindi) — Rs. 2–50

விவரங்களுக்கு:

**பாலாஜி பப்ளிகேஷன்ஸ்**

17, வாணியர் தெரு,

புதுப்பாக்கம் : : சென்னை - 14.